# 1. வாழ்க இளம்பரிதி

(இன்னிசைக் கலிவெண்பா)

கடற்பரப்பில், உப்பங் கழிப்பரப்பில், தாழை
மடற்பரப்பில், நெய்தல் மணற்பரப்பில், சாய்ந்த
முடப்புன்னைப் பைங்கிளையில், முண்டகப்பூங் காட்டில்
அடங்கி யிருந்தவிருள் அற்றொழியக் கீழ்க்கடல்மேல்
தங்கப் பரிதி தலைநிமிர்ந்தான்; வாழியவே!
எங்குமே இன்பம்; இளம்பரிதி வாழியவே!
வானில், மலையில், மரக்காவில், பூம்புதரில்
போனவொளி, அடடா! பொன்வெள்ளம்! பொன்வெள்ளம்!

ஆசை மனையாட்டி! அன்பே! இதைக்கேள்நீ!
மூசையிலே வைத்தெடுத்த பொன்னே முளைத்தகதிர்!
நீர்நிலங்கால் விண்ணை, நிலைத்த பொருளையெல்லாம்
ஆட்டிப் படைப்பதுவும், ஆக்கம் விளைப்பதுவும்,
வானம் முளைத்து வரும்பரிதி செய்கையடி!
நானிலத்தில், பொய்கை நறும்பூவில், வான்முகட்டில்,
ஊனில், உடலில், உயிர்ப்பில் ஒளிவீசி
வாழும் எழுச்சியினைச் செய்ததடி! வாழ்ககதிர்!

இன்னுங்கேள்: பெண்ணரசி! ஏரி குளங்குட்டை
வடித்து வற்றி மரக்கிளைகள் பட்டுவரச்,
சுற்றிப் படர்ந்தகொடி தோப்பும் கலகலக்க,
நன்செய் பொலிவிழக்க, நல்லாறு நீர்வற்றப்,
புன்செய் இறைத்துழவன் நாளெல்லாம் போராட,
வானம் அனல்சொரியும்! மண்ணும் கனலெழுப்பும்!

இட்ட அடிவேகும்! ஒட்டும் பொடிகாலில்!
பட்ட செடிகொடிகள், மொட்டை மரங்களெல்லாம்
வேகாது வெந்து வெறிச்சென் றிருந்திடுமே!
மண்ணெழுப்பும் கானல்! வருங்காற்றுத் தீச்சொரியும்!
கண்ணுக்குத் தோன்றாத புண்ணாய் உடல்கொதிக்கும்!
சிற்றூரும் பேரூரும் தீய்த்த முதுவேனில்
அற்றொழிந்தும் மக்கள் துயரற் றொழியவில்லை!

வானம் குமுறும்! வளர்ந்தமலைக் கூட்டம்போல்,
ஏனம் வெறிகொண் டெழுதல்போல், யானை
தலைதெறிக்க ஓடும் தகைமைபோல் கார்வானில்
அங்குமிங்கும் ஓடும்; அதிரும்; முழவார்க்கும்!
சிங்கத் தமிழர் செருக்களத் தோசையென
வானம் இடிக்கும்; மழைபொழியும்! நீள்மூசைத்
தங்க உருக்குபாய் தாரைகளைப் போல்மின்னல்
கண்ணைப் பறிக்கும்! கருத்தழிக்கும் காற்றிரைச்சல்!
நீண்டபனை தென்னை நிலைகால் தெரியாமல்
மூண்டெழுந்த காற்றுடனே ஆடும்; முறிந்தொடியும்!
கொட்டகையில் மாடுகன்று, கூண்டில் பறவையினம்
கட்டுண்டு மங்கிக் கலங்கும் பசியால்!
வெளிச்செல்ல வொண்ணா! வினைசெய்ய வொண்ணா!
ஒளியற்று மக்கள் ஒடுங்கிக் கிடந்திடுவர்!
தீமை விளைத்தகார் சென்றதுவாம்! ஆனாலும்,

வெள்ளக் கொடுமை வெளிச்சொல்லக் கூடுவதோ?
பள்ள வயல்நினைவால் பாழை மறந்தோமே!
ஏரோசை கேட்டுமனத் தின்பம் பிறந்ததடி!
நீர்வயலில் பாய்ந்தோட நெஞ்சம் குளிர்ந்ததடி!
பச்சைக் கடல்போல் பரந்த வயல்வெளியில்
நச்சுப்புல் நீக்கி ~~நலஞ்சேர் உரமிட்டு~~

வளர்த்தோம்; மகிழ்ந்தோம்! வயலில் பசுநெல்
கிளைப்பசும் பாம்பாய்க் கிளைத்து வளர்ந்தது!
கூதிர் அகலச் சிறுகுறை தோன்றியதே!

தோப்பும் துரவும் விழிப்புலனுக் கெட்டாது
காப்புத் திரையிட்டு வைத்ததுபோல் மூடுபனி!
மண்ணுக் கடியில் வளர்தீ இருப்பதைப்போல்
கண்ணுக்கு நீண்டமட்டும் காணும் பனிப்புகையே!
ஊதை உடல்நடுக்கும்! ஊரெல்லாம் தீக்காயும்!
கொம்புத் துளிர்கருகும்! கொத்தெல்லாம் சீரரும்பும்!
செம்பொற் சிறுகிண்ணம் போற்பூக்கும் பூசனிப்பூ!
ஆமைத் தலைபோல் அழகுச் சிறுகாயை
நாமடைய விட்டுவைக்கும் நற்பறங்கி! வீட்டோரத்
தோட்டத்து வேலியிலே தொங்கும் சுரைக்காய்கள்
மீட்டாது மாட்டிவைத்த மெல்யாழாம்! தென்னைமரக்
குட்டை நிறைந்த குளிரல்லித் தாமரைநீர்
மட்டத்தில் வந்து மலர்பூக்க எத்தனிக்கும்!
செந்நெல் பழுத்ததுவே! தீம்பலா மூற்றியது!
கன்னலோ நாணற் கடல்போலப் பூத்ததுவாம்!
காட்டுப்பூ வெல்லாம் கார்முல்லை நீளரும்பு
வீட்டுக் கருகிருந்து மெல்லச் சிரித்தழைக்கும்!
யாழ்மீட்டும் தேன்வண்டு! யாரதைப்போல் பாடவல்லார்?
வாட்டும் குளிர்காற்று வாய்க்கடையில் புண்செய்து
காட்டும் பனிநாள் கடந்துவந்த தைக்கண்டோம்!

தைகண்டோம்! அன்பே! தமிழ்கண்டோம்! இந்நன்மை
வையத்துப் புத்தாண்டின் முன்னாள் வரக்கண்டோம்!
பொன்னொளியை வான்கடல்மேல் பூசிச் சிரித்தகதிர்
இன்னே வரக்கண்டோம்! இன்பம் வரக்கண்டோம்!
வாழ்க இளம்பரிதி! புத்தாண்டு வாழியவே!

இல்லம் புதுக்கி, எழில்புதுக்கி, நீராடி
அல்லொத்த கூந்தல் அழகைப் பெருக்க
நறுநெய் தடவுக! நன்ருக வாரிமுடி!
புத்தாடை பூண்நீ! மலர்சூடு! நம்வீட்டுச்
சொத்தாம் குழந்தைகளைத் தூய்மைப் படுத்துகவே!

நேற்றறுத்த நெல்லரிசி நீள்தாழை முள்ளாம்!
திருத்திக் களைந்து செழுங்கரும்பின் கட்டியிட்டுப்
பானை உலையேற்றிப் பால்சொரிந்து தீக்கொளுத்தப்
"பொங்கலோ பொங்கல்! பெரும்பொங்கல் வாழியவே!
சிங்கத் தமிழர் திருநாளாம் வாழியவே!
'இங்குள்ளோர்க் கொன்றுமினி இல்லை!' எனுந்தீஞ்சொல்
தங்கா(து) ஒழிக! தமிழ்வாழ்க! வாழ்க" வெனச்
சூழ்ந்து குரலெழுப்பச், சோறு சமைந்துவரத்
தேனை, நறுநெய்யை, ஏலச் சிறுபொடியை
ஆனமட்டும் தூவிநீ ஆக்கிப் படைத்திடுவாய்!

கூப்பிடு வாழ்வோர் அனைவரையும்; கூப்பிடடி!
காப்பெதற்குக் கார்தந்த செல்வம் விளைபொருள்கள்!
சாப்பாட்டைத் தேக்காதே! சண்டை அதன்விளைவாம்!
பங்காக்கி உண்போம்! பசியேது பின்நாட்டில்?

கொண்டுவா யாழைக் குழந்தைகளைப் பாடவிடு!
பண்டைத் தமிழ்வீரம் பாடட்டும்; கேட்போம்!
அரசர் மடிமேல், அரும்புலவர் செந்நாவில்
ஓங்கி வளர்ந்த உயர்தமிழைப் பாடட்டும்!
ஊனுயிரை, மக்கள் உணர்வை வளர்த்துவரும்
தேனும் செழுந்தமிழைப் பாடட்டும்; கேட்போம்!
உனது குரலினிமை உன்மக்கள் சொல்லில்
கனிந்துள(து); ஆதலினல், கண்மணிகள் பாடட்டும்!

*வாழ்க இளம்பரிதி! வாழ்கவே தைப்பொங்கல்!*
*பொங்கலோ பொங்கல்! உளம்பொங்கும் இந்நாள்போல்*
*எங்கும் தமிழ்மக்கள் எந்நாளும் வாழ்க!*
*உயர்க பல்துறையில்! இன்பம் உயர்க!*
*அயர்விலும் நாட்டின் உயர்வே நினைக!*
*அறமும் திருவும் அறிவும் நிறைந்திடுக!*
*சீர்பெற்றுக் கன்னித் தமிழ்வாழ்க என்றும்!*
*திருநாடு வாழ்க சிறந்து!*

நாள்: **14—1—1952**
இடம்: திருச்சிராப்பள்ளி வானொலி நிலையம்.
தலைவர்: சர் ஆர். கே. சண்முகஞ் செட்டியார்.
தலைப்பு: பொங்கல் விழா—வாழ்க இளம்பரிதி.

# 2. அன்பு

(இன்னிசைக் கலிவெண்பா)

'இன்பம் பெருக்கி, நம் இல்வாழ்க்கை செப்பனிடும்
அன்பை விளக்கி அழகாகப் பா(டு)' என்ற
அன்பே! எனதுடலின் ஆவியே! கேட்பாய்நீ!
அன்பகத் தில்லா உயிர்வாழ்க்கை பாழாம்!
கடல்வற்றி, நெய்தற் கழிவற்றிப் பாசி
படர்ந்த இடமெல்லாம் பச்சை குலுங்க
உயிர்தோன்றி, அந்த உயிரின் இணையால்
உயிர்தோன்றி வந்த உயிரினத்தின் ஊடன்றே
அன்பு பிறந்ததடி! அன்பே அதுமுதலாய்
என்புதோல் போர்த்த உடலுயிரில் நின்றதுவே!
என்னின்பத் தீந்தமிழே! இல்லாளே! வீட்டரசி!
'அன்பின் வழிய துயிர்நிலை; அஃதிலார்க்(கு)
என்புதோல் போர்த்த உடம்(பு)'என் றுரைத்தநம்
மன்புலவன் வள்ளுவனின் வாய்மை மொழியேபோல்
நீர்தேக்கி, நன்செய் நிலபுலத்தை உண்டாக்கி,
ஊராக்கி, ஊருக் கரணமைத்தே, அவ்வூரைச்
சீராக்கி, வாழச் செழுமை பலவாக்கித்
தேரோடு யானை செழுங்குதிரை காலாளும்
போராட, மக்கள் புகழ்பாடத் தீந்தமிழைக்
காராடு வானம் கவிழ்ந்த உலகினிலே
எண்ணி வியக்க, இயலிசையைக் கூத்தையிங்குப்
பண்ணுய்ந்த மேலோர் படைத்ததுவும் அன்பேயாம்!
தென்னையிலே காக்கைக் கருங்குஞ்சு செவ்வாயை
முன்திறக்கத் தாய்ப்பறவை மூக்கைவிட்டு வாயுள்ளே

குஞ்சுக்குக் கக்கிக் கொடுப்பதைநாம் கண்டிருந்தோம்!
வஞ்சியே! அன்பால் மலையும் அசையுமடி!

கொட்டகையில் நம்மெருமை கன்றின் குரல்கேட்கக்
கட்டறுத்தே ஓடிவரும் காரணத்தைக் கண்டிருப்பாய்!

கீரையின் காம்பொத்த சின்ன விரல்நகத்தாற்
கூரை அருகினிலே குஞ்செல்லாம் சீய்த்திருக்க

வானத்தில் வட்டமிடும் வல்லூற்றைத் தாய்ப்பெட்டை
ஏன் துரத்தும்? குஞ்சை இறக்கைக்குள் ஏனடக்கும்?

தாயன்பு! தாயின் மடியிருந்து பால்குடிக்கும்
காயாம்பூ மேனிச் சிறுகுழவி தன்னிரண்டு

வள்ளிக் கிழங்கு மலரடியால் தாய்முகத்தைத்
தள்ளுவதும், தள்ளிச் சிரிப்பதுவும் அன்பேயாம்!

கோனாட்சி நீக்கிக் குடியாட்சி காண்பதற்கு
மான்விழியார், காளையர்கள் செங்குருதி சிந்தியதும்

பொன்னாட்டின் தாய்நாட்டின் தன்னாட்டின் மேலெழுந்த
அன்பின் பெருவிளைவே! ஆக்கத்தின் ஊற்றாகும்!

நல்ல தமிழாட்சி நாட்டில் நிலவுதற்கு
மெல்ல அறப்புரட்சி மேவுவதும் அன்பேயாம்!

இக்காலம் நாமடையும் எல்லா வசதிகளும்
தக்கார் பலரும் தமையொத்த மக்கள்
இனம்வாழ வேண்டும் எனநினைத்த அன்பால்
முனைந்து முனைந்திங்கே முன்னேறி வந்தனவாம்!

நாட்டுக்கு நாடு தனக்குள்ளே ஒவ்வாது
போட்டியிற் புத்தம் புதுப்போர்க் கருவியெல்லாம்

உண்டாக்கி உண்டாக்கி ஊரை மிரட்டுவதும்
கெண்டை விழியாளே! அன்பின் மறுதோற்றம்!

என்றாலும், அன்பை அழிவிற் செலவிடுதல்
நன்றாமோ? அன்பால் நலந்தேட வேண்டுமடி!

அங்கிங்குப் போவானேன்? ஆசை மனையாட்டி!
இங்குள்ள நம்வீடு, வாழ்க்கை, எழிற்சிறுவர்
பொங்கிவரும் அன்பின் புதுத்தோற்றம்! கேள்:நமது
தங்கச் சிறுமி தமிழ்ப்பாட்டே அன்பாகும்!

அன்றொருநாள் காதல் அரும்புகின்ற முன்னாளில்
சென்ற நிகழ்ச்சியிதோ செப்புகின்றேன்; கேளேடி!
சின்ன மயில்போற் சிறுவீட்டுத் தோட்டத்தில்
முன்னாள் உனைக்கண்டேன்! அந்நாளை இந்நாளில்
எண்ண இனிக்கும்! இதற்கென்ன காரணம்?சொல்!
பெண்ணே! என்வாழ்விற் பிரியா அகம்புறமே!
பார்க்காது பார்த்துப் படர்ந்த கொடிமுல்லைப்
பூக்கொய்து கொண்டிருந்தாய; பூத்தேடி வந்தவன்போற்
பேச முனைந்தேன்நான்; இல்லை; பிதற்றினேன்;
ஆசை இருந்தும் அசையாமல் நின்றிருந்தாய்!
பெண்ணைஏ ணிந்தப் பெரும்புலவர் எல்லாரும்
'வண்ண மயில்'என்றும், 'மான்'என்றும் சொன்னார்கள்?
ஊமை இனமிவர்கள்! உண்மையிதோ கண்டேன்!
'ஆம்! ஆம்!' எனச்சொன்னேன்! அவ்வேளை என்னைநீ
கொல்லும் விழியாற் கொலைசெய்யப் பார்த்ததுண்டு!
மெல்லச் சிரித்தாய்! விளக்கமென்ன? சொல்லேடி!
ஊருக் கருகில் உயர்தென்னந் தோப்புக்குள்
நீர்மொள்ளத் தோழியொடு வந்தாய்நீ! நீர்நிலையில்
நொச்சி மணக்க, நுணமணக்கப் பன்னூறு
பச்சைப் பசுந்திங்கள் வந்து படிந்ததைப்போல்
தாமரைகள் நீர்ப்பரப்பில் ஓச்சும் தனியரசு
காமாறும் காலக் குயில்தேடி உன்னருகில்
நான்வந்தேன்; நின்றேன்; நமதிரண்டு கண்கண்ட
தேன்மொழியாள் தோழி, 'புதுக்குடியர்'[1] என்றாளே!

தோழியின் சொற்சுவையோ அப்பொழுது தோன்றவில்லை
'வாழியவள்!' என்றுவமைச்[2] சொல்லாய்ந்து சொற்றொடரை
எண்ணியெண்ணிப் பின்னர் எதற்காக நாம்சிரித்தோம்?
கண்ணனை செந்தமிழிற் கற்றோர் வியப்பதற்கும்,
எண்ண இனிப்பதற்கும் எத்தனையோ சொற்களுண்டு!
வண்ண மயிலாளே! வாழ்க்கை வளமுறவே
அன்பு முதற்பொருளாம்! அத்தனையும் பின்துணையாம்!
இன்பத்தி னூடே இடையிடையே ஊடுவதும்
துன்பத்தி னோடுநாம் தோளிணைந்து நிற்பதுவும்
அன்பின் அசைவே! மனைக்கிழத்தி! இன்னுங்கேள்!
அன்பு வளர்ந்தால் அலைகடல்சூழ் நம்நாட்டில்
துன்பமே இல்லை! தொழிலாளி செல்வனென்ற
வம்பில்லை! தாழ்வுயர்வுச் சாதி மலிவதில்லை!
செம்மை வழியொன்று செப்புகின்றேன்: அன்பாலே
நாட்டின் விளைவைப் பொதுவாக்கி நாம்வாழ்ந்தால்
நாட்டோடு நாடாய் நடைபோட மாட்டோமோ?
உண்ண உணவும், அறிவும், அமைதியும்,
கண்ணும் மகிழ்ச்சி தெளிவும், உணர்வும்,
நிறைவும் இருந்தாலும், வாழ்க்கைக்குத் தேவை
குறையாத அன்பென்றே கூறு!

○

நாள்: 2—3—1956
இடம்: திருச்சிராப்பள்ளி வானொலி நிலையம்.
தலைவர்: பண்டித, வித்துவான், திரு. லெ. ப. கரு. இராமநாதன் செட்டியார்.
தலைப்பு: வாழ்க்கை வளமுற—அன்பு.

1. புதுக்குடியர்-புதுமையாகக் கள்ளுண்டோர்; புதுக்குடித்தனம் ஏற்றோர்.

2. உவமைச் சொல்-புதுக்குடியர் என்னும் உவமைச் சொல்.

# 3. காரி

(அறுசீர் விருத்தம்)

மலையெல்லாம் தேன்வழிய,
வயலெல்லாம் தேன்வழிய,
மலையின் சாரல்
உலையெல்லாம் தேன்வழிய,
ஓவியமாம் தமிழ்ப்பெண்கள்
ஒப்பில் லாத
சிலைவிழியில் தேன்வழியச்,
செந்தமிழில் தேன்வழியத்
திளைத்து வாழ்ந்த
மலையமான் திருமுடியே!
உனைப்பாட நீயில்லை!
வருத்தந் தானே!

தீந்தமிழின் துறைபோன
அம்மூவ ஞர்,பரணர்,
கபிலர், செஞ்சொல்
ஆய்ந்துணர்ந்த நப்பசலை
எனும்புலவர் உனைப்புகழ்ந்தார்;
அவர்போல் நானும்
வாய்திறந்து பாடுகின்றேன்
உன்னினமாம் அழகப்ப
வள்ளல் நாட்டில்!
ஈந்துவந்து பாராட்ட
எவருள்ளார் என்கின்ற
வருத்தந் தானே!

'தென்னாட்டில் இரவலருண்(டு)'[1]
என்றுரைக்கும் செய்தியெல்லாம்
அல்லிக்[2] காக்கிப்
பொன்னீட்டிப், புகழீட்டித்
தமிழ்காக்கப் பெரும்புலவர்
வறுமை போக்கி
அந்நாளில் வாழ்ந்திருந்தான்
திருமுடியே! அழகப்பன்
பின்னாள் வந்தான்!
இந்நாளில் வள்ளலில்லை,
தமிழில்லை என்கின்ற
வருத்தந் தானே!

மயிலுக்கும், முல்லைக்கும்
மற்றவர்போல் வாரிவாரி
வழங்கி டாமல்,
இயலிசைகூத் துணர்ந்தோர்க்கும்,
பாடிவந்த இனியதமிழ்ப்
பாவ லர்க்கும்
வயலுழுதே உரமிட்டு
விதைதெளித்து வான்பார்க்கும்
உழவன் போற்றும்
பெயலானன் மலையன்! சீர்
பேசாத வாயெங்கும்
கண்ட தில்லை!

அருந்தமிழுக் கேவாழ்ந்தான்;
தன்னையொத்த அரசருக்கும்
தோள்கொ டுத்தான்;
திருவெல்லாம் பொதுவாக்கித்
திகழ்மனையின் கிழத்திக்குக்
கொடுத்தான் மார்பைத்

திருக்கோவ லூர்வாழ்ந்தான்!
காரிநோக்கித் திரண்டுவரும்
புள்ளைப் போலப்
பெருங்கூட்டம் தமிழ்க்கூட்டம்
பாட்டிசைக்கும் பெற்றியினைப்
பேசப் போமோ? 5

தமிழுக்கும், தமிழ்நாட்டு
மன்னருக்கும் தடந்தோளின்
தகைமை காட்டித்
தமிழுக்கும், தமிழ்நாட்டுப்
பெரும்புலவர் இனத்திற்கும்
தாய்போல் நின்று
தமிழுக்கும் புகழ்சேர்த்தான்;
தமிழ்வளர்த்தான்; தமிழ்நாட்டைத்
தாக்க வந்த
உமிச்சிறகுக் கொசுக்கூட்டம்
ஆரியரின் ஓட்டத்தை
உரைக்கப் போமோ? 6

வடக்கிருந்து வந்தவரை
வாள்முனையில் வெற்றிகொண்டான்
மலையன்! அந்த
வடக்கிருந்து வருமெதுவும்
தமிழுக்குப் பகையென்றால்
பகைநமக்காம்!
அடக்கத்திற் கெல்லையுண்டே!
அன்னைக்கும், அருந்தமிழ்க்கும்
தொல்லை என்றால்
கிடக்கட்டும் என்றிருக்கும்
கீழ்ச்செயலோ நாம்செய்வோம்?
கிடையா தென்றும்! 7

போரினிலே கிடைத்தபொருள்
தமிழ்க்களித்துப் புகழ்சேர்த்தான்
வள்ளல் காரி!
கூரையிலே கூடடையும்
சிட்டிற்கும் தாய்ப்பேச்சு
குளிர்மைப் பேச்சாம்!
ஊரினிலே வாழ்கின்றோம்;
உயர்தமிழர் என்கின்றோம்;
உதவாப் பேச்சு!
'யாரினிமேல் தமிழ்காக்க?'
எனுங்கேள்வி எழும்பாமுன்
எழுந்து வாரீர்! 8

உன்னைப்போல் தமிழ்காக்க
ஒருகாரி இந்நாட்டில்
உயிர்த்தால் போதும்!
பின்னிங்கே வேற்றுமொழி
வருகின்ற பேச்செடுத்தால்
பிணந்தான் வீழும்!
இந்நாட்டார் தமிழ்நாட்டார்,
இன்றுள்ள அரசியலார்
எல்லாம் மாறிப்
பொன்னாட்டைப் புனல்நாட்டைத்
தமிழ்நாட்டை வாழ்விக்கும்
புலிப்போத் தாவார்! 9

பாய்புனல்சூழ் தமிழ்நாட்டின்
வீரத்தை, நற்பெயரைப்,
பண்பை விட்டே
வாயில்லாப் பூச்சியானார்
கொல்புலிகள்! மறத்தோளும்
சூம்பற் றோளோ?

தாயில்லாப் பிள்ளையைப்போல்
　　தமிழிருக்க, வருமிந்தி
　　　　தட்டிக் கேட்க
நீயில்லை என்கின்ற
　　நினைப்பென்னில் வரும்போது
　　　　கொதிக்கும் நெஞ்சம்! 10

கடையேழு பெருவள்ளல்
　　வாழ்ந்திருந்த காலத்தைக்
　　　　கருதும் போது
நடையினிலே முறுக்கேறும்;
　　நற்றோளில் வலிவேறும்!
　　　　தமிழ்த்தாய் அன்றோ
அடைந்திருந்த பெருஞ்சிறப்பும்,
　　இன்றுள்ள அவள்வாழ்வும்
　　　　எண்ணி யெண்ணி
இடையில்லாப் பெண்மக்கள்
　　எள்ளாமுன் எழுந்தோடித்
　　　　தமிழ்காப் போமே! 11

○

நாள்: 27—10—1957

இடம்: காரைக்குடி அழகப்பா கலைக்கல்லூரிக் கலைவிழா.

தலைவர்: திருப்பெருந்திரு குன்றக்குடி அடிகளார்.

தலைப்பு: எட்டுத் தமிழ் வள்ளல்—மலையமான் திருமுடிக் காரி.

1. இரவலர்-யாசிப்பவர்; இரவு+அலர்-இரவில் அலர்கின்ற அல்லிப்பூ.
2. அல்லிக்கு-இரவில் அலர்கின்ற அல்லிப்பூவுக்கு.

# 4. ஒருமைப்பாடு

(நேரிசை ஆசிரியப்பா)

வானைத் தாவும் மலையின் இடையில்
தேனடை யொத்த தீந்தமிழ் வெய்யோன்
கடல்சூழ் உலகக் காரிருள் போக்கும்
இயல்பிற் றுகும் என்ப துணர்ந்தே
பொற்கதிர் புதுக்கதிர் தைக்கதிர் கண்டு
பொங்கல் வாழ்த்திப் பொங்கலை நிறைய
உண்டு களிக்கும் ஊரார்க் கின்று
தென்னகத் திருச்சி வானொலி யாளர்
கழையின் சாறும் கவியரங் கத்தை
வழங்கினர்; அவர்க்கென் வணக்கம்! வணக்கமே!

தலைமை தாங்கும் தமிழர் பெருமகன்
இலைமறை காயென ஈத்தேன் அடையென
இன்று நிலவும் எம்மருந் தமிழைக்
கூன்மலை தொங்கும் தேனிறால் சிதைத்துப்
பிள்ளைக் கூட்டும் பிடியைப் போல
மக்கள் துய்க்க வழங்கும் வள்ளல்
பண்டையர் வழிவரு தொண்டைமான்; அவர்க்கு
வாயாரந் துரைப்பன் வணக்கம் பலவே!

தென்னகப் பெரியீர்! தீந்தமிழ்ச் சான்றீர்!
கவித்தேன் மாந்தக் கவியரங் கெழுந்து
வந்ததை வாழ்த்தி, வந்ததை வாழ்த்திப்
பணிவன் போடு பகர்வன் வணக்கம்!

இருவே றுலகத் தியற்கையைக் குறளும்
'திருவேறு தெள்ளிய ராதலும் வே(று)' எனும்!

திருவும் தெளிவும் மருவுதல் பெற்றால்
இருவே றுலகம் இருக்கா தென்றுமே!

கீழை நாடு, மேலை நாடென
இருவே றுலகம் என்றுரைத் தாலும்
வாழும் மக்களும் வாழ்வும் என்றும்
ஒருமையோ டொட்டி உயர்ந்தே வந்தன!

தோண்டப் பட்டது தோணியாய்க் கொண்டு
தாண்டிக் கடலைத் தருபொருள் விளைத்தும்
கலத்தைப் பறித்தும் கடல்முத் தெடுத்தும்
நிலத்தில் வாழ்ந்த நீள்புகழ் தமிழரைக்
'கீழை நாட்டுக் கிரேக்கர்' என்றே
உரைத்தனர்; மேலை நாட்டார் உரைத்தனர்!

கலை[1]யிலா வாழ்க்கை கலை[2]யிலா வாழ்க்கை!
உளத்தில் தோன்றும் உணர்வின் படைப்பே
கலையாம்! கலைப்பயன் இன்பப் பெருக்காம்!
மக்கள் உணர்வை வடித்தே அறிவால்
செப்பம் செய்ததே செழுங்கலை யாகும்!
மொழியில் செயலில் முறைவைப் பிருப்பினும்
இருவே றுலகக் கலையின்
ஒருமைப் பாட்டை உரைப்பன் கேளீர்!

(பஃறொடை வெண்பா)

"வையக மெல்லாம் கழனியா—வையகத்துச்
செய்யகமே நாற்றிசையின் தேயங்கள்—செய்யகத்து
வான்கரும்பே தொண்டை வளநாடு—வான்கரும்பின்
சாறேயந் நாட்டுத் தலையூர்கள்—சாறட்ட
கட்டியே கச்சிப் புறமெல்லாம்—கட்டியுள்
தானேற்ற மான சருக்கரை மாமணியே
ஆனேற்றான் கச்சி யகம்."

(நேரிசை ஆசிரியப்பா)

இவ்வியல் நாட்டு நகர அமைப்பை
ஒவ்வார் எந்த உலகத் துண்டாம்?
அறிஞன் சுமீத்து, "நகர அமைப்பில்
மேல்நா டெல்லாம் கீழ்நாட் டடிப்படை"
என்றனன்; உண்மையை எண்ணுவீர் நீரே!

சிற்பம் ஒவியம் செழுங்கலைக் கோபுரம்
மேலை நாடு வியப்பது தம்மொடு
கைகோர்த் தொருமையில் கலந்து திகழும்
இரசபுத் திரரின் இரவிவர் மாவின்
தாசும கானின் தகுதியே யாகும்!
ஆனல் இவற்றின் அடிப்படை யாவும்
சிற்றன்ன வாயில் சென்ருல் புரியும்!
கடல்மல்லை காஞ்சி தஞ்சை மதுரை
சென்ருல் கீழ்மேற் றிசைநாட் டொருமை
இன்று மிருப்பதை யாரே மறுப்பார்?

சாக்கைக் கூத்து துன்பியல் முடிவாம்;
ஓட்டந் துள்ளல் இன்பத் துயர்வாம்;
கதைகளி இரண்டும் கலந்ததே யாகும்!
இந்நிலை கலவாக் கூத்தெங் கிருக்கும்?

பிள்ளைக் கிட்டுப் பிணியைப் போக்க
வாழைப் பழத்தில் மருந்தை மறைத்துத்
தாய்தரு பழமே சான்ருேர் இலக்கியம்:

"நிலத்தினும் பெரிதே; வானினும் உயர்ந்தன்று;
நீரினும் ஆரள வின்றே; சாரல்
கருங்கோல் குறிஞ்சிப் பூக்கொண்டு
பெருந்தேன் இழைக்கும் நாடனொடு நட்பே!"
குறுந்தொகை கூறும் காதலிலக் கணமே!

"மூலமும் முடிவும் அற்றதே காதல்!"
பால்சாக்கு[3] பகர்ந்த காதல் இலக்கணம்!

"யாயும் ஞாயும் யாரா கியரோ?
எந்தையும் நுந்தையும் எம்முறை கேளிர்?
யானும் நீயும் எவ்வழி யறிதும்?
செம்புலப் பெயல்நீர் போல
அன்புடை நெஞ்சந் தாங்கலந் தனவே!"

இக்கூற் றையே பால்சாக் கென்போன்
இயம்பும் சொற்றொடர் இயம்பக் கேண்மின்!
"வயதை இனத்தை மதியாது காதல்!
அறிவில் அழகில் ஆழாது காதல்!"

நம்மரும் இளங்கோ காளிதா சனுமே
நாட்டிய புகழையே மேலைநாட் டறிஞர்
நாடகப் புலவர் சேக்ஸ்பியர்[4] யூகோ[5]
நாட்டினர்; இலக்கியத் தொருமை காட்டினர்!

வீரச் சுவைக்கு ஓமரை உரைப்பர்;
வேறென் உண்டாம் புறநா னூற்றில்?

காதற் சுவைக்குத் தாந்தே தந்தை;
கற்றோர் ஏற்றும் கலித்தொகை என்னும்?

"பிறந்தார் மூத்தார் பிணிநோ யுற்றோர்
இறந்தார் என்கை இயல்பே யாகும்!"
மேகலை செப்பும் மெய்த்தமிழ் இதுவாம்!
"சாவின் வழியே ஒவ்வோர் உயிரும்
சார்ந்தே ஆகும் தப்பா தென்றும்!"
மேலைநாட் டறிஞன்[6] விளம்பியே உள்ளான்!

''வில்லே ருழவர் பகைகொளினும் கொள்ளற்க
சொல்லே ருழவர் பகை''எனும் திருக்குறள்!
''வாளின் வலிதே எழுதுகோல்!'' என்றே
மேலை நாட்டு வால்டேர்[7] விளம்பினன்!

''பொய்யுடை ஒருவன் சொல்வன் மையினால்
மெய்போ லும்மே மெய்போ லும்மே!''
என்றோர் அரசன்[8] இயம்பினன் இங்கே!
''வலிமை யுடையான் வார்த்தை என்றும்
உண்மை!'' லபோந்தேன்[9] உரைத்த கவியிது!

''உற்றுழி உதவியும் உறுபொருள் கொடுத்தும்
பிற்றைநிலை முனியாது கற்றல் நன்றே!''
புறப்பாட் டுரைக்கும் பொன்மொழி இதுவாம்!
''உண்டிக் கடுத்தது ஒப்பிலாக் கல்வி
கொண்டு வாழ்தல் குடிமகன் கடமை!''
என்றான் ழுய்ல்பெரி[10] மேலைநாட் டமைச்சன்!

''நிலத்தியல்பால் நீர்திரிந் தற்றாகும் மாந்தர்க்(கு)
இனத்தியல்ப தாகும் அறி(வு)''எனும் தமிழ்மறை!
''பழகு மிடத்தைப் பகர்வாய், நீயார்
என்றே நொடியில் இயம்புவன்!''[11] என்று
மேலைநாட் டொருவன் விளம்பியே உள்ளான்!

''யாதும் ஊரே! யாவருங் கேளிர்!''
கோதிலாத் தமிழன் கொள்கை இதுவாம்!
''நாற்றிசைக் கடல்சூழ் நல்லுல கத்தில்
பிறந்தோர் யாவரும் ஒருதாய்ப் பிள்ளைகள்!''[12]
என்பது மேலை இலக்கியத் துணிபாம்!

இருவே றுலகத்து இலக்கியம் வளர்ந்த
இயல்பினும் ஒருமை இருப்பதைக் காணீர்!

வீர இலக்கியம் விரும்பினர் மக்கள்;
காதலும் அதனுடன் வளர்ந்தே வந்த(து)!
இயற்கை வளத்தை இயம்பினர் பின்னர்;
இடையிடை அறத்தை எழுதத் தொடங்கினர்;
குடியரசாட்சிக் கொள்கை விளக்கி
முடியரசாட்சிக்கு முடிவு கண்டனர்!
இதுவே மேலை நாட்டார் இலக்கியம்!
தமிழகம் தந்த அகமும் புறமும்,
தமிழ்மறை கண்ட திருக்குறள் வளமும்,
"தனியொரு வனுக்குண விலையெனில் சகத்தினை
அழித்திடு வோ"மென் றுரைத்த பாரதியும்,
"புதியதோர் உலகம் செய்வோம்; கெட்ட
போரிடும் உலகை வேரொடு சாய்ப்போம்!"
என்றவென் ஞான் பாரதி தாசன்
இடித்து முழக்கிய இன்றமிழ்ப் பாட்டும்
இலக்கியம் வளர்ந்ததை எடுத்தியம் பாதோ?

மொழிவே றுண்மை மொழிதரு பொருள்பொது;
முந்நீர் உலகக் கலையிலக் கியங்கள்
மக்கள் படைப்பாம்! மறுப்பார் இல்லை!
ஆற்றங் கரைபோல் அழியும் கலையும்
அலைகடல் போல அழியாக் கலையும்
நீரில் குமிழிபோல் நிலையா இலக்கியம்,
நெடுவான் பரிதிபோல் நிலைத்த இலக்கியம்
இருவே றுலகில் என்றும் உண்டாம்!

மக்கட்கு வகுத்த கலையிலக் கியங்கள்
எக்கா லத்தும் நிலைத்தே நிற்கும்!
எக்கா லத்தும் நிலைத்த இலக்கியம்
இருவே றுலகில் இன்பம் பயந்தே

ஒருமைப் பாட்டோ டொன்றிச்
சிறந்து வாழ்தல் தெளிந்தபே ருண்மையே!

○

நாள்: 15-1-1959.

இடம்: திருச்சி வானொலி நிலையம்.

தலைவர்: திரு. தொ. மு. பாஸ்கரத் தொண்டைமான், எம்.ஏ., பி.எல்.,

தலைப்பு: இரு வேறு உலகு—ஒருமைப்பாடு.

குறிப்பு: திருச்சி வானொலியில் 'ஆகாசவாணி' என்று கூறி வந்ததை எதிர்த்துப் போராட்டம் நடந்து வந்தது. அதன் காரணமாகக் கவிஞர் இவ் விழாவில் கலந்துகொண்டாரில்லை! வானொலியாரின் போக்கை எதிர்த்துச் செய்தித் தாள்களுக்கு அறிக்கை விட்டுத் தாம் கலந்துகொள்ள இயலாமையைத் தெரிவித்துவிட்டார். அதனால், இது அரங்கேற்றம் பெறவில்லை.

1. கலை-கல்வி; நுண்கலைகள். 2. கலை-ஆடை.

3. பால்சாக்-பிரெஞ்சு நாட்டுப் புதினக் கதை எழுத்தாளர்.

4. சேக்ஸ்பியர்-இங்கிலாந்து நாட்டு நாடகக் கவிஞர்.

5. யூகோ-விக்டர் யூகோ; பிரெஞ்சு நாட்டு வரலாற்றுப் புதினப் படைப்பாளர்.

6. மேலைநாட்டறிஞன்—மிச்சலே என்னும் பிரெஞ்சு நாட்டரசர்.

7. வால்டேர்—பிரெஞ்சு நாட்டின் புரட்சிக்கு அடிகோலியவர்.

8. அரசன்-நறுந்தொகை இயற்றிய அதிவீரராம பாண்டிய அரசன்.

9. லபோந்தேன் - பிரெஞ்சு நாட்டுச் சீர்திருத்தக் கவிஞர்.

10. மூய்ல்பெரி-பிரெஞ்சு நாட்டு அமைச்சன்; கட்டாயக் கல்விச் சட்டத்தைக் கொண்டு வந்தவன்.

11, 12. பிரெஞ்சுப் பழமொழி.

# 5. அண்ணாமலைப் பல்கலைக் கழகம்

(எண்சீர் விருத்தம்)

உலகத்தில் இயற்கையினை அடக்கி மக்கள்
உறுதுணைக்கே பயன்படுத்தும் ஆன்ற செய்கை
பலகலைமா மன்றங்கள் விளக்கும் ஆற்றல்
பகுத்தறிவாம்! அவ்வறிவை நல்கும் அண்ணா
மலையரசர் பல்கலைமா மன்றம் வாழும்
மாப்புகழ்சேர் துணைவேந்தே![1] புலமை மிக்கீர்!
விலையில்லாக் கவிதைவிருந் தேற்க வந்த
மேலோரே! உளங்கனிந்த வணக்கம் ஏற்பீர்! 1

தேன்கலந்த செஞ்சொல்லால் தமிழர் நாட்டைச்
சீர்படுத்தும் எதிர்காலக் கவிஞர், என்றன்
ஊன்கலந்த உயிர்கலந்த தமிழாற் பாடி
உளங்கவரப் போகின்ற கவிய ரங்கில்,
நான்கலந்து கொள்ளுகின்ற வாய்ப்ப ளித்த
நல்லோரே! முதுபுலவீர்! ஊர்வாழ் மக்காள்!
வான்கலந்த மின்னிடையீர்! இங்குச் சூழ்ந்த
மாணவர்காள்! யாவர்க்கும் வணக்கம்! நன்றி! 2

காராடும் நீள்வானம் பொய்த்த போதும்
காத்தளிக்கும் நற்றாயாம் வற்றாப் பொன்னி
நீராடும் தமிழ்நாட்டில் பிறந்த அண்ணா
மலையரசர் மலையரசர் நினைவால் கல்விச்
சீராடும் பல்கலைசேர் கழகம் கண்டார்;
செந்தமிழ்போல் நீள்புகழைக் கண்டார்! அன்னார்
பேராடும் பல்கலைமா மன்றம் நாட்டில்
பெறற்கரிய பெரும்பேறே! வாழ்க! வாழ்க! 3

மலைபிறந்த முத்தருவி குறிஞ்சி முல்லை
மருதம்நீள் பாலைநெய்தல் ஊட்டும் அண்ணா
மலைபிறந்த முத்தய்யா அரசர், 'கெட்டி
முத்தய்யா' எனமக்கள் வாயாரந் தேற்றக்
கலைபிறந்த குடிப்பிறந்து தந்தை போலக்
கடல்சூழ்ந்த தென்னாடும் வேற்று நாடும்
குலைபிறந்த முக்கனியும் தேனும் போலக்
கொடுத்துதவி வாழ்கின்றார்! வாழ்க நீடே! 4

கலைசூழ்ந்த எதிர்காலத் தமிழர் நாட்டுக்
கன்னியரைக் காளையரை விளைத்து, முந்நீர்
அலைசூழ்ந்த திருநாட்டை ஈன்ற நாட்டை
ஆளுகின்ற அறிவியலை விளக்கும் அண்ணா
மலைசூழ்ந்த பல்கலையை நடத்தும் வாய்மை
மறத்தமிழர் துணைவேந்தர் நேர்மை யாளர்
விலைசூழ்ந்த ஒளிமணியாம் திருச்சி நாரா
யணசாமி விரிபுகழ்சேர் இனியர்! வாழ்க! 5

வான்பிறந்த செங்கதிராம் இராம நாதர்[2]
பண்டிதமா மணிவழியோர்; வித்த கர்;செந்
தேன்பிறந்த தீஞ்சொல்லார்; குளிர்ந்த நோக்கார்;
சிரித்துவர வேற்கின்ற அரிய செம்மல்;
கான்பிறந்த பூவாடிச் சோலை தங்கிக்
களிப்பூட்ட வருகின்ற தென்றற் காற்று;
'நான்பிறந்தேன் தமிழுக்கே' என்றே வாழும்
நல்லறிஞர்; தமிழ்க்கடலாம்! வாழ்க! வாழ்க! 6

திருவாலே அழியாத திருவைச் சேர்க்கும்
செயல்புரிந்தார் மலையரசர்; அன்னேர் உள்ளக்
கருவாகி உருவாகி வளத்தை நல்கும்
பல்கலைமா மன்றத்திற் கற்போர் தம்மை

உருவாக்கும் திருஇராம நாதர் அண்ணா
மலைகவரும் சான்றோரை உதவு கின்றார்!
பெருகவவர் நற்றொண்டு! வாழ்க! அண்ணா[3]
மலைக்கவரும் தம்பியரும் பின்விட் டாரே! 7

விண்தாவும் நீள்தென்னை விரிந்த பாளை
வெண்குருகென் றேசேல்கள் நீரில் தாவும்;
மண்தாவும் நெற்கதிர்கள்; பழுத்த வாழை
மரந்தாவும் வயல்பூத்த கரும்பின் மீது;
பண்தாவும் சோலையிலே பாடும் வண்டு
பனிமலரின் மேல்தாவும்; காணும் மக்கள்
கண்தாவும் மணிமாடத் தில்லை அண்ணா
மலைநகரத் தமிழ்மன்றில்; கவிய ரங்கில்! 8

கல்லெழுந்து மண்தோன்றாப் பழங்கா லத்துக்
குடிவழியில் வாழ்ந்தபெருங் கவிஞர் கூட்டம்
சொல்லெழுந்த இலக்கியமும் யாப்பும் தோன்றச்
சுவைமிகுக்கும் செந்தமிழை உயிரை வாழ்வை
எல்லெழுந்து வருகின்ற ஒளியைப் போல
என்றென்றும் நிலைத்திருக்கப் படைக்க லானார்!
அல்லெழுந்து வருநிலவே கவிஞர் கூட்டம்!
அவர்புகழோ வெண்ணிலவே! பாடக் கேளீர்! 9

O

நாள்: 18-2-1960.
இடம்: அண்ணாமலைப் பல்கலைக் கழகத் தமிழ் மன்றம்.
தலைவர்: புதுமைக் கவிஞர் வாணிதாசன்.

1. துணைவேந்தர் திரு. தி. மு. நாராயணசாமி பிள்ளை.
2. பண்டித, வித்துவான், திரு. லெ. ப. கரு. இராம நாதன் செட்டியார்.
3. பேரறிஞர் அண்ணாதுரை.

# 6. கவித் தூது

(எண்சீர் விருத்தம்)

கற்றவரே! பெரியோரே! கலைக்கழகம் கண்ட
காளையரே! கன்னியரே! காவிரிசூழ் நாட்டீர்!
சுற்றமுடன் கவியரங்க விழாக்காண வந்த
தோழர்காள்! தோழியர்காள்! மணிவயிறு காத்துப்
பெற்றெடுத்த தாய்மாரே! வற்றாத பொன்னிப்
பெருநாட்டை வாழ்விக்கும் கவிஞர்காள்! உள்ளப்
பற்றோடு தலைதாழ்த்திக் கைகூப்பி எண்சீர்ப்
பாப்பாடி வணங்குகின்றேன்! என்வணக்கம் ஏற்பீர்! 1

வான்தாவும் தெங்கிடையில் வாழைமரம் தாவும்;
வயல்பூத்த செங்கரும்பின் அயல்பூக்கும் செந்நெல்;
தேன்தாவும் வண்டோடு செம்மூக்குக் கிள்ளை
செடிதாவும்; தோப்பெங்கும் பூங்கொடிகள் தாவும்;
மான்தாவும் நீண்மாட முன்றிலெலாம் தோறும்
மயில்தாவும்; மங்கையரின் மணிக்குரலைக் காட்டிக்
கான்தாவும் கருங்குயில்கள்; கரைதாவும் வற்றாக்
காவிரிசூழ் சிராப்பள்ளிக் கலைக்கழகம் வாழ்க! 2

அணிமாடப் பேரூராம் சிராப்பள்ளி வாழ்வோர்
அன்பாக்கம் கலைக்கழகம்! அவர்தொண்டு வாழ்க!
பணிவோடு தீந்தமிழைப் பல்கலையைப் பேணிப்
பலர்புகழ வாழ்கின்றார்! வெள்ளிவிழாக் கண்டார்!
துணிவோடு பகையெதிர்த்துத் தூயதமிழ் காத்துத்
துறைதோறும் துறைதோறும் நற்றொண்டைச் செய்தே
மணியோசை போல்நகரக் கலைக்கழகம் நீடு
வாழ்கவென வாழ்கவென வாழ்த்துகின் றேனே! 3

ஒக்கவிருந் துறவாடும் மனையாளும், ஈன்ற
ஒன்றிரண்டு குழந்தைகளும், தோழர்களும், நானும்
முக்கனியும், மலைமூங்கில் முதிர்ந்தசுவைத் தேனும்,
முளைத்தெழுந்த செங்கதிரும், வீசுமிளங் காற்றும்,
சொக்கவைக்கும் முழுநிலவும், கடற்பரப்பும், வானும்,
தோகைவிரித் தாடுகின்ற மயிலினமும், மானும்,
பக்கத்தில் முழவார்க்கும் நீரோடை குன்றும்
பைந்தமிழுக் கீடில்லை; மிகையில்லை; உண்மை! 4

மலைபிறந்த நீளருவி மருதநிலம் பாய்ந்து
மணிமாடப் பேரூரைப் பொருள்வளத்தைச் சேர்க்கும்
குலைபிறந்த தெங்கிளநீர் வாழைபலா மாவும்
சுவைதேக்கும் நாவிற்குப்; பணைவடிக்கும் கொல்லர்
உலைபிறந்த படைக்கலங்கள் அரசழிக்கும்; நாட்டில்
உண்மையிவை! உண்மையிவை! ஆனாலும், முந்நீர்
அலைபிறந்த மலைபிறந்து வாழ்ந்த தமிழ் மக்கள்
அளித்ததமிழ் போலெதுவும் நிலைத்ததுண்டோ? சொல்வீர்!

கல்லெழுந்து மண்தோன்றாக் காலத்தே தோன்றிக்
கற்குகையில் வாழ்ந்திருந்த தமிழ்நாட்டு மக்கள்
நல்லிதழில் நீபிறந்தாய்; தமிழே! நீ வாழி!
நானென்றும் உனைமறவேன்! நீயின்றேல் வாழ்வு
செல்லாத காசாகும்! உன்புகழைக் கேட்கச்
செவிபோதா! வாணாளும் போதாதே! கன்னி
நல்லாயே! கடல்சூழ்ந்த உலகத்(து) யாயே!
நான்சிறியன்! உன்பெருமை நாடறிந்த உண்மை! 6

சுத்துகடல் ஓரத்தில் உன்னொலியைக் கேட்டேன்;
கடல்தாண்டி வந்தவர்கள் மேனாட்டார் அன்னோர்
தத்தமது தாய்மொழியை மறந்துன்றன் சீர்மை
தனைப்புகழ, அடடாவோ! எனைமறந்து போனேன்!

செத்தமொழிக் காரருணைச் சீர்குலைய வைத்தால்
செங்குருதி நான்தருவேன்! உனையழிக்க எண்ணின்
பெற்றவென் றன் முதற்குழந்தை, ஆசைமனை யாட்டி
பிணமாவர்! உன்தாழ்வே தமிழினத்தின் தாழ்வாம்! 7

மூவரசர் உனைவளர்த்தார்! உன்னாலே அந்த
முடிமன்னர் வாழ்ந்தார்கள்! தமிழ்மக்கள் வாழ்ந்தார்!
மாவரசு வாழ்விக்கும் எனச்சொல்லி நம்மை
வந்தவர்கள் கெடுத்தார்கள்! மதிகெட்டுப் போனோம்!
பாவரசு வழிவந்த நானென்றன் கன்னிப்
பைந்தமிழுக் கேயாவும் படைத்திட்டேன்! மீண்டும்
'தாவரசு எம்முரிமை' எனச்சொல்லி இன்று
தமிழ்முழக்கம் செய்கின்றார்! தூங்குகின்றார் சில்லோர்!

தூங்குகின்ற தமிழர்க்கே தூதோலை நீட்டத்
தூதனுப்பும் இலக்கணத்தை நான்தேடிப் பார்த்தேன்;
ஏங்குகின்றேன்; கிளியன்னம் குயில்வண்டு யாவும்
என்னேவல் செய்யாவே! குறையிருக்கக் கண்டேன்!
தீங்கவிதை விடுக்கின்றேன்! செவிசாய்த்தே என்றன்
செந்தமிழைக் காப்பதற்கே ஓடோடி வாரீர்!
ஓங்குபுகழ் தமிழ்காக்க ஓடோடி வாரீர்!
உலகத்தார் உமிழாமுன் ஓடோடி வாரீர்! 9

அன்றுமுதல் இன்றுவரை அழியாத கன்னி
அருந்தமிழை நம்முயிரை நம்விழியை வாழ்வைக்
கொன்றொழிக்க விடுவதுவோ? திரிகல்லை ஒத்த
கொட்டுபறை கேட்டவுடன் தோள்குலுக்கி ஆர்த்தே
சென்றகளம் மறந்தீரோ? சிலைசெய்யக் கல்லும்,
தென்னாட்டீர்! கங்கைகொண்ட தினவெடுத்த தோளும்
இன்றெங்கே? இன்றெங்கே? கொல்புலிகாள்! சீறி
எழுந்திருப்பீர்! பகைமுறிப்போம்! தமிழ்காப்போம்! வாரீர்!

எனக்குப்பின் பலகவிஞர் பாடப்போ கின்றார்!
இனம்நாடு மொழிசமயம் இயலிசைகூத் தென்ற
தமக்களித்த தலைப்பினிலே தீந்தமிழில் பாடித்
தகுபுகழை நிலைநாட்ட வாருங்கள் என்றே
மனக்களிப்போ டழைக்கின்றேன்! அவர்பாடக் கேட்டே
வாயார வாழ்த்துங்கள்! வாழ்த்துகின்றேன் நானும்!
எனக்களித்த கவியரங்கத் தலைமைக்கு நன்றி!
எல்லார்க்கும் என்நன்றி! வாழ்கதமிழ் நீடே! 11

நாள்: 9—7—1960.
இடம்: திருச்சி நகரக் கலைக்கழக வெள்ளிவிழா.
தலைவர்: புதுமைக் கவிஞர் வாணிதாசன்.
குறிப்பு: குறிப்பிட்டபடி இவ்விழா ஏதோ காரண நடைபெறாது போனதால், இக்கவிதை எழு. வோடு நின்றுவிட்டது.

# 7. நிகழ்காலத் தமிழகம்

(எண்சீர் விருத்தம்)

அலைவாழ்த்த எழுங்கதிர்போல் ஆன்றோர் வாழ்ந்த
அருந்தமிழர் கலையரங்கில், கவியரங்கத்
தலைமையுறு கவியரசே! புரட்சி வேந்தே!
தமிழருளம் குடிகொண்ட தமிழ மேலோய்!
விலையில்லாத் தமிழ்க்கவிதை பாடு கின்ற
மேன்மக்காள்! கலைபயிலும் தமிழ்நாட் டீரே!
தலைதாழ்த்திக் கைகூப்பி உங்கட் கென்றன்
தமிழ்வணக்கம் படைக்கின்றேன்; ஏற்பீர்! ஏற்பீர்!

நிகழ்காலத் தமிழகத்தை நினைத்தேன்; நெஞ்சில்
நீளின்பம் மிகக்கண்டேன்; பண்டு வாழ்ந்தோர்
புகழெல்லாம் பனிபடர்ந்த வானைப் போலப்
பொலிவிழந்து போனதுண்டு மாற்றார் கூற்றால்;
அகழ்ந்தெடுத்தோம் பொதுப்பகையை; அறத்தால்
[வென்றோம்;
அரசியலை மக்களெலாம் அடைந்தோம்; கண்டோம்
முகமாற்றம்; முழுமாற்றம் கண்டோம் இல்லை!
முயல்கின்றோம்! தமிழ்வாழ்வே முடிவில் வெல்லும்! 2

பண்டிருந்த தனித்தமிழைத் தமிழர் பண்பைப்
பன்னெடுநாள் மறந்திருந்தோம்; உணர்ந்தோம் இன்று!
தொண்டுசெய்ய முனைந்துவிட்டார் இளைஞர் கூட்டம்!
துறைதோறும் மறுமலர்ச்சி துளிர்க்கக் கண்டோம்!
வண்டலிடு காவிரிபோல் என்றும் வற்றா
வளர்தமிழைக் காப்பதற்குப் புலவர் கூட்டம்
உண்டென்றும் என்பதற்குத் தலைமை தாங்கும்
கவியரசர் எமதாசான் ஒருவர் போதும்! 3

பன்னூலைப் பலமொழியைப் பயின்றே இந்நாள்
பகுத்தறிவைப் பெற்றுவிட்டோம்; பாரோர் மெச்ச
இந்நாளில் வாழ்கின்றோம்! உலகம் போற்றும்
எதிர்காலம் பொற்காலம்! இடையில் வந்தோர்
தென்னகத்துத் தாய்மொழியைத் தமிழர் வாழ்வைச்
சிதைப்பதற்கு முனைகின்றார்; முனைந்தோர் எல்லாம்
என்னானார்? இன்றுநமக் காக வுள்ள
இலக்கியங்கள் எடுத்துரைக்கும்! தமிழே வெல்லும்! 4

அன்றிருந்த வீரமின்றும் அழிய வில்லை!
அன்னையர்கள் பொதுப்பணியும் குறைய வில்லை!
மன்றுபயில் நற்கலைகள் கலப்பில் தோய்ந்தும்
மாத்தமிழின் பண்பைவிட்டு விலக வில்லை!
இன்றுள்ள தமிழகத்தில் கருத்து மாற்றம்
இருந்தாலும் தமிழ்மொழிக்கிங் கின்னல் என்றால்
ஒன்றாகும் நிகழ்காலத் தமிழ கத்தை
உலகறியச் செய்திடுவோம்! வாழ்த்து வோமே! 5

O

நாள்: 20—10—1961.

இதழ்: 'கலை' இதழின் சிறப்பு மலர் ஒன்றில் இடம் பெற்ற கவியரங்கம்.

தலைவர்: பாவேந்தர் பாரதிதாசன்.

தலைப்பு: நிகழ்காலத் தமிழகம்.

குறிப்பு: தலைவர் பாவேந்தர் பாரதிதாசன் அவர்கள், இப்பாடல்கள் குறித்து இரண்டு வெண்பாக்கள் எழுதியிருந்தார்கள். அவையாவன:

"எல்லாரும் நல்லாரென் றெண்ணுவார் இன்றமிழ்
வல்ல கவிவாணி தாசனார்—அல்லும்
பகலும் தமிழர்தம் பண்பாடு பற்றிப்
புகலும்பாட் டொவ்வொன்றும் பொன்!" 1

"சார்நிகழ் காலத் தமிழகம் பற்றி
யாரும் தெளிய இனிதுரைத்தார்—பாரில்
கலையின் கவியரங்கின் மேன்மையைக் காத்தார்;
நிலையுணர்ந்து வாழ்க நிலைத்து!" 2

# 8. போர்ப்பரணி

(எண்சீர் விருத்தம்)

வான்தோன்றி, வளிதோன்றி, நெருப்புத் தோன்றி;
மண்தோன்றி, மழைதோன்றி, மலைகள் தோன்றி,
ஊன்தோன்றி, உயிர்தோன்றி, உணர்வு தோன்றி,
ஒளிதோன்றி, ஒலிதோன்றி வாழ்ந்த அந்நாள்
தேன்தோன்றி யதுபோல மக்கள் நாவில்,
செந்தமிழே! நீதோன்றி வளர்ந்தாய்! வாழி!
கான்தோன்றி மணக்கின்ற மலர்வண் டைப்போற்
கவிபாடி உனையென்றும் வணங்கு வேனே! 1

கடலோர நீளலைகள் இரைந்தெ ழுந்தே
கரைமோதும்; முரசார்க்கும்; கரையோ ரத்து
மடற்றுழை யிடைப்புன்னை மலர்கள் தூவி
'மாற்றானை வெல்க!'வென அலையை வாழ்த்தும்
இடமகன்ற சீர்ப்புதுவை முதல மைச்சே!
இன்கவிதைக் கவியரங்கத் தலைவ! என்றன்
படைப்பான போர்ப்பரணி கேட்க வந்த
பாவலரே! பெரியோரே! வணக்கம் ஏற்பீர்! 2

உலகத்தில் பலநாட்டை வெளவி, வான
உயர்பரிதி சாயாத நாட மைத்துத்
தலைநிமிர்ந்தே அரசாண்ட ஆங்கி லேயத்
தனியரசைப் பாரதத்தில் முறிய டித்தோம்!
விலையுயர்ந்த தாயகத்தின் விடுத லைக்கே
வெற்றிமுர சடித்தவர்நாம்! எங்கும் என்றும்
மலையெதிர்த்து வந்தாலும் அஞ்ச மாட்டோம்!
வந்தபகை விடமாட்டோம்; வலியச் செல்லோம்! 3

பாரதத்தின் வளத்தினிலே நாட்டங் கொண்டு,
பலதுறையில் மெல்லமெல்ல ஏற்றங் கொண்டு
சீராக வளர்ந்திருந்தோம்! பெருமை கொண்ட
செஞ்சீனன் படையெடுத்தான்! சளைத்தா போனோம்?
நேராக எதிர்க்காத ஈனக் கோழை
நெறிகெட்ட பாகித்தான் படையை யெல்லாம்
ஊரோர எல்லையிலே உருவை மாற்றி
நுழையவிட்டான்; உதைபட்டான்; உதைபட் டானே.

முன்னாளில் பாரதத்தை அரபு நாட்டார்
வெல்வதற்கு முனைந்தார்கள்; தோற்றுப் போனார்!
பின்னாளில் வெள்ளையர்கள்; அவர்கட் குள்ளே
பெரும்போரே நிகழ்ந்ததுண்டு; பின்னர்த் தோல்வி!
இந்நாளில் பாகித்தான் வலியச் சண்டைக்(கு)
இழுக்கின்றான்; மறைந்திருந்து தாக்கு கின்றான்!
எந்நாளும் தூங்குகின்ற புலியைக் காலால்
இடறியவன் எவனேனும் பிழைத்த துண்டோ? 5

அல்லாடும் மதிமுகத்தார் நமது பெண்கள்
ஆமைகளா? ஊமைகளா? பகைவர் முன்னர்
சொல்லாடப் பயிலாத நாவோ நம்நா?
துயர்தாங்காச் சிற்றுளமோ நம்மோர் உள்ளம்?
மல்லாடப் பயிலாத தோளா நம்தோள்?
வாளேந்தப் பயிலாத கையா நம்கை?
கொல்லேறு பாரதத்தார்! பாகித் தானைக்
கொன்றுகுவித் தேவாகை சூடு வோமே! 6

அமைதியே நம்கொள்கை! நம்மைப் போல
அண்டையயல் நாடெல்லாம் வாழ வேண்டி
இமியேனும் வழுவாது நடந்து வந்தோம்!
இதுதவறு? பாகித்தான் நம்மை யெல்லாம்

உமியென்று நினைத்துவிட்டான்? நமது வீரர்
    உதைதாங்க முடியாமல் ஓடு கின்றான்!
நமையீன்ற தாயகமே வெற்றி கொள்ளும்!
    நாமெல்லாம் போர்ப்பரணி பாடு வோமே! 7

போரென்று கேட்டவுடன் தோள்கள் வீங்கும்
    புலிக்கூட்டம் நம்கூட்டம்; உடலில் தைத்த
கூரில்லா வேலெடுத்தும் பகையை வீழ்த்தும்
    குறிதவறாச் செயல்வீரர்; வானில் மோதும்
கார்போன்ற களிறெறிவோர்! அன்னோர் முன்னர்
    கள்ளநரி பாகித்தான் பிழைப்ப துண்டோ?
சீர்மிகுந்த பாரதமே வெற்றி கொள்ளும்!
    செந்தமிழில் போர்ப்பரணி பாடு வோமே! 8

தேரோட்டிப் படைநடத்திச் செருக்க ளத்தில்
    செங்குருதி வெள்ளத்தில் நீச்ச லிட்டுப்
போரிட்டு வாழ்ந்தவர்நாம்! நமது நாட்டில்
    புகநினைத்தான் பாகித்தான்! ஈனக் கோழை!
நேரிட்டே உதைகொடுக்கும் நமது வீரர்
    நெடும்படைமுன் பகைக்கூட்டம் தூள்! தூள்! தூளே!
போரிட்ட களமிருந்தே மக்கள் எல்லாம்
    புதுப்பரணி போர்ப்பரணி பாடு வோமே! 9

களிறேறி வேலெறிந்து களத்தில் வந்த
    கற்குன்றம் போலிருக்கும் வெறிபிடித்த
களிறெல்லாம் கண்டதுண்ட மாக வெட்டிக்
    களவேள்வி செய்தவர்நாம்! நம்முன் இன்று
புளிமூட்டைப் பாகித்தான் எதிர்க்க வந்தான்;
    புலிமுன்னர்க் காட்டெருமை போரா செய்யும்?
களிப்போடு தாயகத்தை வாழ்த்தி வாழ்த்திக்
    கற்றோரே! போர்ப்பரணி பாடு வோமே! 10

காற்ருகப் பறக்கின்ற குதிரை ஏறிக்
கண்ணகன்ற இடம்வந்து நமையெதிர்த்த
மாற்ருனைப் புறங்கண்டோம் முன்ஞள்! இன்ருே
வாலாட்டிப் பார்க்கின்ருன் பாகித் தானும்!
கூற்ருெத்த தாயகத்து வீரர் முன்னர்க்
குறுந்தாடிப் பாகித்தான் துச்சம்! துச்சம்!
போற்றிடுவோம் தாயகத்தின் வெற்றி! வாழ்க!
போர்ப்பரணி புதுப்பரணி பாடுவோமே! 11

வெள்ளம்போற் காலாட்கள் படைநடத்தி
வெற்றிகண்ட தாயகத்தின் மறவர் கூட்டம்
குள்ளர்கள் செஞ்சீனர் மிரட்டல் கேட்டுக்
குறுநகையே செய்வதலால் வேறென் செய்வோம்!
தள்ளாத வயதினிலும் மகனைக் கூவித்
'தாயகத்தைக் காக்கவெழு; செல்க!' என்னும்
உள்ளத்தார் நம்தாய்மார்! முரசறைந்தே
ஊரெங்கும் போர்ப்பரணி பாடுவோமே! 12

பனிப்படலம் பகலவன்முன் என்ன ஆகும்?
பாகித்தான் பாரதத்தில் நுழைந்து பார்த்தான்!
தனியொருவன் மாற்ருனின் படையையெல்லாம்
தடுத்தெதிர்த்து முறியடித்தான்! வெற்றி! வெற்றி!
இனியஞ்சோம் எந்நாட்டு மிரட்டலுக்கும்!
எவர்வரினும் எதிர்நின்றே ஒருகை பார்ப்போம்!
கனிகுலுங்கும் பழக்காட்டுக் குயிலைப் போலக்
கவிஞர்காள்! போர்ப்பரணி பாடுவோமே! 13

கடலோடிக் கலஞ்செலுத்தி வெற்றி கண்ட
கன்னெஞ்சப் பெருமறவர்; அன்ஞேர் தந்த
உடலோடு வாழுகின்ருேம்! பாகித் தானை
ஒடுக்குவது நமக்கென்ன மலையா? வெற்றி!
அடலேறு நம்மறவர்! தரையில் வானில்
அஞ்சாது போர்புரிவர்! வாழ்க! வாழ்க!

படைவெல்லும்; பாரதத்தின் படையே வெல்லும்!
பகையொழித்துப் போர்ப்பரணி பாடு வோமே! 14

தாயகத்தில் மாற்றானின் படைபு குந்தால்
தந்தைதாய் தம்பியர்கள் தங்கை மார்கள்
வாய்மூடிக் கிடப்பாரோ? அன்னோர் கைகள்
மலர்கொய்யு மோ?சொல்வீர்! நாமெல் லோரும்
பாயாத வேங்கையல்லோம்! எங்கி ருந்து
பகைவரினும் பாரதமே என்றும் வெல்லும்!
ஓயாவே நம்கைகள்! தாயகத்தின் வெற்றி
ஓங்குகவே! போர்ப்பரணி பாடு வோமே! 15

குண்டுக்கு நாமஞ்சோம்; நம்மை யெல்லாம்
கொல்லவரும் குன்றொத்த 'டாங்கி' என்னும்
வண்டிக்கும் நாமஞ்சோம்! நமது வீரர்
தாயகத்தின் வாழ்விற்கே வாழ்வோர் ஆவார்!
சுண்டைக்காய்ப் பாகித்தான் தூள்! தூள்! தூளே!
துளிகுருதி நம்முடலில் உள்ள மட்டும்
கொண்டிடுவோம் போர்க்கோலம்! நமக்கே வெற்றி!
கொல்புலிகாள்! போர்ப்பரணி பாடு வோமே! 16

வடக்கினிலே நாயுண்ணும் குள்ளச் சீனன்
மலையெட்டிப் பார்க்கின்றான்; மிரட்டு கின்றான்!
கிடக்கின்றான்; நம்படைமுன் அவனென் செய்வான்?
கிரியின்முன் பாம்பாவான்! எந்த நாளும்
அடக்கமாய் இருக்கின்ற புலியும் பாயும்!
அழிவுக்கு வித்திட்டால் அழிவே கிட்டும்!
முடக்குவோம் கொடும்பகையை! இன்றே வெற்றி
முரசார்ப்போம்; போர்ப்பரணி பாடு வோமே! 17

வேற்றுமையை நாமெலலாம ஒதுக்கித் தள்ளி
வெகுண்டெழுவோம்; தாயகத்தில் இன்று வந்த

மாற்றானைப் புறங்காண்போம்; காலை மாலை
மணிக்கருதா துழைத்திடுவோம்; நமது மக்கள்
ஏற்றத்திற் குழைக்கின்ற பாரதத்தின்
இன்றுள்ள அரசுக்குக் கட்டுப் பட்டுப்
போற்றிடுவோம்; புதுத்தெம்பை அளிப்போம்; ஆன்ற
பொருள்தருவோம்; போர்ப்பரணி பாடுவோமே! 18

கன்னியர்கள் காளையர்கள் தாயகத்தைக்
காப்பதற்கே திரண்டெழுந்தார்; கடலைப் போன்று
முன்னெழுந்து மாற்றானின் படைவந் தாலும்
முறியடிப்பர்! பாரதமே வெற்றி கொள்ளும்!
என்னருமைத் தாயகமே! உன்னைக் காக்க
இருக்கின்றோம் நான்குபத்துக் கோடி மக்கள்!
முன்வைத்த கால்பின்னுக் கிழுக்க மாட்டோம்!
மூண்டபகை வீழ்த்திடுவோம்! வாழ்த்து வோமே! 19

திங்களொளி மாடத்தே கன்னிப் பெண்கள்
சேல்பாய வேல்பாயும் புதுவை மூதூர்
இங்குள்ள பெரியோரே! தாய்க்கு லத்தீர்!
என்னருமைத் தோழர்களே! இளஞ்சிங் கங்காள்!
தெங்கிளநீர்ச் சுவைமீறக் கவிதை பாடிச்
செவிகுளிரச் செய்வோரே! முதல மைச்சே!
எங்களருங் கவியரங்கத் தலைவ! உங்கள்
எல்லாரிக்கும் என்வணக்கம்! நன்றி! வாழ்த்தே! 20

○

நாள்: 23—9—1965.
இடம்: புதுச்சேரி வேதபுரீசுரர் நூல் நிலையம்.
தலைவர்: நீதிபதி திரு. எஸ். மகராசன், பி.ஏ., பி.எல்.
தலைப்பு: பாகித்தான் படையெடுப்பை முறியடிக்கப் பதினான்கு கவிஞர்களின் போர்ப்பரணி.
நடத்தியோர்: புதுவை அரசின் செய்தித் துறையினர்.

# 9. வேளாண்மை

(எண்சீர் விருத்தம்)

பாரிமுழுதும் நல்வாழ்வு வாழ்வ தற்குப்
பகுத்தறிவு நனிதேவை! வளம்பெ ருக்கும்
ஏர்முனைக்கும் அதுதேவை! ஏற்றம் சேர்க்கும்
எத்தொழிற்கும் அதுதேவை! பகைநொ றுக்கும்
போர்முனைக்கும் அதுதேவை! உயிரின் மேலாம்
புகழ்முனைக்கும் அதுதேவை! என்றும் எங்கும்
சீர்முனைக்கும் பகுத்தறிவே! அறிவின் ஊற்றே!
செந்தமிழால் உனைப்பாடி வாழ்த்து வேனே! 1

கவியரங்கப் பெருந்தலைவ! கற்றறிந்த மேலோய்!
கத்துகடற் சீர்ப்புதுவை முதலமைச்சே! இந்தப்
புவியரங்கப் பெரியோரே! தாய்மாரே! ஆன்ற
புலவர்காள்! தாய்நாட்டுப் போர்மறவ ரேறே!
செவியரங்கில் தீந்தமிழைத் தாய்மொழியை இன்பச்
செந்தேனைப் பாய்ச்சுகின்ற கவிக்கூட்டத் தோரே!
கவியரங்கில் என்பாட்டைப் பாடுதற்கு முன்னர்த்
தலைதாழ்த்திக் கைகூப்பி நான்வணங்கு வேனே! 2

பாற்கடலின் தலையிருந்தான் சீநி வாசன்!
பைந்தமிழர் கவியரங்கில் இங்குச் சூழ்ந்த
பாற்கடலின் தலையிருந்தான் சீநி வாசன்!
பாடவந்த வேளாண்மை எனது பாட்டின்
பாற்கடலின் தலையிருந்தான் சீநி வாசன்!
பண்படுத்தும் முறையுணர்த்தி உழவு செய்யப்
பாற்கடலின் மேலிருந்தான் சீநி வாசன்!
பகுத்தறிவால் வேளாண்மை வளர்ந்த தாமே! 3

வான்தோன்றி, மலைதோன்றி, மலைமுகட்டில் மோதும்
வளிதோன்றிக், கடல்தோன்றிக், கடலிடையில் நீண்ட
கூன்தோன்றி, மூளைமதியும் செங்கதிரும் தோன்றிக்,
குளிரடைந்த இவ்வுலகில் உயிரினங்கள் தோன்றிக்,
கான்தோன்றி நீளாற்றங் கரையினிலே வாழ்ந்தோர்
கடும்பசிக்குப் போராடி உழைத்துவழி கண்ட
தேன்தோன்றும் நல்லுழவைப் பாடுகின்றேன் உம்முன்!
தெள்ளுதமிழ் நாட்டவரே! கேட்பீரென் பாட்டே! 4

(அறுசீர் விருத்தம்)

வாழும் மக்கட் கறிவூட்டி
வருவதும் உழவின் நற்பயனே!
தாழும் மக்கட் பிணியோட்டித்
தருவதும் உழைப்பின் நற்பயனே!
சூழும் பொருளைப் பெற்றிடவும்,
தூர நாடு சென்றிடவும்;
ஏழை யில்லாச் சமுதாயம்
இயங்கச் செய்வதும் உழவாமே! 5

(எண்சீர் விருத்தம்)

முடியரசர் அந்நாளில் மக்களெல்லாம் ஏய்த்து
முதலில்லா வணிகர்போல் பொருள்பறித்து வாழ்ந்தார்!
தடியரசர் மிரட்டலெலாம் எத்தனைநாள் செல்லும்?
பகுத்தறிவு தலையெடுக்கத் தலையெடுக்க நாட்டில்
குடியரசர் வெகுண்டெழுந்தார்; கொடுமைகளை மாய்த்தார்;
குறையில்லாப் பெருவாழ்வே மக்களரசு சென்றார்!
குடியரசே அன்றுமுதல்! குடியரசு வாழ்க!
வேளாண்மை முன்னேற்றம் கூறமுனை வேனே! 6

மின்கண்டு வித்திட்டார் முன்னாளில்; செந்நெல்
மிகுவிளைவு கண்டதில்லை! மழைபொய்த்த துண்டாம்!
பின்கண்டார் மழைநாளில் பெய்யுமழை நீரைத்
தேக்குதற்குப் பேரேரி குளங்குட்டை தாங்கல்!

என்கண்டார்? கோடையிலே ஏரிவற்றக் கண்டார்;
எண்ணத்தின் பெருவிளைவால் கிணறுவெட்ட லானார்!
முன்கண்ட நிலையினிலும் முன்னேற்றம் வேண்டி
முயன்றார்கள்! குடியரசில் புழை[2] நீர்கண் டாரே! 7

மலையிணைந்த அணைகட்டி நீர்தேக்கி வைத்து
வாழ்வளிக்கும் மின்சாரம் வருவழியைக் கண்டார்!
தலைகனத்த முடியரசர் காலத்தில் மக்கள்
சாதிக்கும் வாழ்வுக்கும் வழிவகுத்த துண்டோ?
விலையில்லாப் பெருஞ்செல்வம் மின்சாரம்! இன்று
விண்பொய்த்துப் போனாலும் மண்விளைந்து போகும்!
அலைகடலின் உவர்நீரும் நன்னீராய் ஆக்கும்
அறிவடைந்து வருகின்றோம் குடியரசி னாலே! 8

அந்நாளில் வயலுழுது விதையைத் தூவி
ஆனமட்டும் விளைவறுத்துக் கொண்டு வந்தோம்!
இந்நாளில் குடியரசால் வேற்று நாட்டார்
எந்தெந்த முறையினிலே விளைவைச் செய்து
பொன்விளைத்து வருகின்றார் என்று கண்டோம்;
புதுமுறையைக் கைக்கொண்டோம்; வளரு கின்றோம்!
முன்னேற்றம் கைவிட்டோம் இல்லை! நெல்லின்
முடியேற்றம் குடியரசின் ஏற்ற மாமே! 9

மாட்டோடு மாடாக மக்களெலாம் அன்று
வயலுழுது வளஞ்சேர்த்தார்! குடியரசில் இன்று
கூட்டாக உழைக்கின்றோம்; விளைவுகுவிக் கின்றோம்!
குறையுழைப்புப் பெரும்விளைவு குடியரசின் மாட்சி!
பாட்டாளி நல்வாழ்வு வாழ்கின்றான்! நாட்டில்
பஞ்சத்தின் சிறுவாடை வீசுவதைக் கண்டோம்!
கூட்டாளி நல்லுழவன் வளஞ்சேர்க்கும் நாட்டில்
குனிந்துவரும் எப்பகையும் தூளாகிப் போமே! 10

மண்ணுழுது பிளப்பதற்கே இயந்திரங்கள்,
மலையுடைத்து நீர்பாய்ச்ச இயந்திரங்கள்,
கண்ணுக்குத் தெரியாத செந்நெல் நோயைக்
காப்பதற்கு நன்மருந்து யாவும் தந்தே
உண்ணுதற்கே உணவளிக்கும் உழவர் வாழ்வை
உயர்த்துவதே குடியரசின் உயர்ந்த நோக்கம்!
மண்ணுழுவோம்; விளைவடைவோம்! இஃதே இந்த
மாநிலத்தில் நாமடையும் இன்ப வாழ்வாம்! 11

(முச்சீர் இரட்டை)

உழத்தி :

கருக்கலிலே எழுந்துவந்த மச்சானே!—நம்ப
கழனியெலாம் உழுதாச்சா மச்சானே?

உழவன் :

கருக்கலிலே எழுந்துவந்தேன் பொன்னுத்தா!—நம்ப
கழனியிலே தண்ணியில்லே பொன்னுத்தா! 12

உழத்தி :

இரவெல்லாம் தூங்கிவிட்ட மச்சானே!—கழனியிலே
எப்படித்தான் தண்ணிபாயும் மச்சானே?

உழவன் :

இரவெல்லாம் கண்விழிச்சி வைச்சேண்டி—தண்ணி
எங்கெங்கோ பாய்ஞ்சிடிச்சு! தப்போடி? 13

உழத்தி :

கஞ்சிவந்து குடிச்சுவிட்டு மச்சானே!—நீ
காரியத்தைப் போய்ப்பாரு மச்சானே!

உழவன் :

கஞ்சிவேண்டாம்; காம்புகொடு பொன்னுத்தா!—நான்
களைக்கமாட்டேன்; சளைக்கமாட்டேன் பொன்னுத்தா! 14

உழத்தி ;

ஆழஉழு; ஆழஉழு மச்சானே!—நெல்
அப்பத்தான் பச்சைகொள்ளும் மச்சானே!

உழவன் :

நீழலிரு; நீழலிரு பொன்னுத்தா!—நீ
நின்றிருந்து வேலையைப்பார் பொன்னுத்தா! 15

(நாற்சீர் இரட்டை)

உழத்தி :

அரிஎடுத்து நெல்லடிக்கும் ஆம்பளே சிங்கம்!—காலை
அகட்டிவச்சி நீட்டியடி ஆம்பளே சிங்கம்!
இரையாதே முதல்சிதறும் ஆம்பளே சிங்கம்!—அதை
எண்ணிப்பார்த்து நல்லாஅடி ஆம்பளே சிங்கம்! 16

உழவன் :

அள்ளிஅள்ளிக் கொடுத்துவாடி பொம்பளே சிங்கம்!—கை
ஆட்டி நீட்டிக் குலுக்கிடாதே பொம்பளே சிங்கம்!
வள்ளியம்மா கொடுப்பதைப்பார் பொம்பளே சிங்கம்!-அந்த
வரிசையிலே எடுத்துப்போடு பொம்பளே சிங்கம்! 17

உழத்தி :

பொதிஏறப் பொதிஏற ஆம்பளே சிங்கம்!—நீ
பொறுமையாக அடிக்கவேண்டும் ஆம்பளே சிங்கம்!
மிதிக்காதே நெல்சரியும் ஆம்பளே சிங்கம்!—நீ
வேலைமேலே கண்ணைவையி ஆம்பளே சிங்கம்! 18

உழவன் :

வேலைசெய்யும் அழகைப்பார் பொம்பளே சிங்கம்!—[அதற்குள்
வெற்றிலைக்குப் போனாளாம் பொம்பளே சிங்கம்!
ஆலைச்சங்கு கூவுதடி பொம்பளே சிங்கம்!—நம்ப
ஆண்டைவரும் நேரமாச்சு பொம்பளே சிங்கம்![8] 19

(எண்சீர் விருத்தம்)

குடிமக்கள் நல்வாழ்வே குடியரசின் நோக்கம்!
நல்லுணவு குடியிருப்பு மக்கட்குத் தேவை!
குடியரசால் இல்லையெனில் செயவல்லார் யாரே?
கொடும்பசிதான் இல்லாத உயிரினங்கள் உண்டோ?
மடிசுரந்தால் பால்சுரக்கும்! பசியற்றுப் போகும்!
மக்களெல்லாம் குடியரசை வலுப்படுத்த வேண்டும்!
மிடியரசின் வலியடங்கும்! வேளாண்மை செய்வோம்!
விளைவோங்கின் ஓங்காத வேறேதும் உண்டோ? 20

உண்டியினைக் கொடுக்கின்ற நல்லுழவன் நாட்டில்
உயிர்கொடுக்கும் கிழவனென்றும், பொருள்
[கொடுப்போன் என்றும்
பண்டிருந்த புலவரெலாம் பறைசாற்றிப் போனார்!
படிக்கின்றோம்; பார்க்கின்றோம்! எந்நாளும் உண்மை!
மண்டிணிந்த நிலம்வாழ, மக்களினம் வாழ,
வானுக்கும் மண்ணுக்கும் வழிப்பாட்டை போட
எண்டிசையும் வேளாண்மைப் பெருந்தொழிலைப் பேணி
இமைபோலக் காத்திடுவோம்; ஏற்றமடை வோமே! 21

உழவாக்கம் இல்லையெனில் உயிராக்கம் உண்டோ?
உயிராக்கம் இல்லையெனில் ஊராக்கம் உண்டோ?
விழவாக்கம்; பொருளாக்கம், வெற்றிமுர சாக்கம்,
வீரர்களின் தோளாக்கம், வெளியுலக நட்பு,
பழகுமொழிச் சொல்லாக்கம், பகுத்தறிவின் ஆக்கம்,
பறந்துசென்று நிலவுலகைப் படம்பிடிக்கும் ஆக்கம்
அழகுவயல் செந்நெல்லின் அறுவடையால் அன்றி
ஆகாதே! ஆகாதே! ஆகா தாமே! 22

நீர்பாயும் மடையோரம் வந்திருந்து பார்நம்
நீலமலர், சிறுகெண்டை மனைவிவிழி காட்டும்;
கார்நெல்லோ குழல்காட்டும்; கதிர்காட்டும் நெற்றி;
காற்றினிலே அசைந்தாடும் வாழைபலா மாவும்
ஊரினிலே இல்லத்தாள் பரிவோடே ஊட்டும்
உணவுதரு நற்சுவையை வயலிருந்து கூட்டும்;[4]
ஏர்பாயும் வேளாண்மை வயலினிலே மக்கள்
எதிர்பார்க்கும் இன்பமெலாம் குறைந்திருக்கப்
[போமோ? 23

(வேறு)

தமிழ்போல இனிக்கின்ற வாழை மாவைத்,
தனிவீட்டாள் சொற்போன்ற பலாப்ப ழத்தை,
அமிழ்தொத்த குழந்தைகளின் மழலைப் பேச்சாம்
அருந்தேனை, இளநீரை விளைப்போம்! மூக்கில்
கமழ்கின்ற பூவளர்ப்போம்! அந்தப் பூக்கள்
காட்டுகின்ற கண்களிலே கண்ணை வைப்போம்!
நமையாரே எதிர்த்திடுவார்? எந்த நாட்டு
நரியினமும் வாலறுந்து நசிந்து போமே! 24

தோட்டத்துக் காய்கறிகள், கொத்துக் கொத்தாய்த்
தொங்குகின்ற பழமரங்கள் மனத்தில் மூளும்
வாட்டத்தைப் போக்காவோ? வாழ்வில் தோன்றும்
வறுமையினை நீக்காவோ? பயிர்வி ளைத்தே
ஈட்டத்தைச் சேர்த்திடுவோம்; இதுநம் வேலை!
இல்லையெனில் பிறநாட்டிற் கையை ஏந்தி
நாட்டிற்குப் பழிசேர்க்கும் கயவர் ஆவோம்!
நம்நாடு நிறைவுபெற உழைப்போம் நாமே! 25

ஏர்பிடித்து நிலமுழுது நன்னீர் பாய்ச்சி
 இயல்பான உரமிட்டு வரப்புக் காத்துக்
கூருடையா விதைநட்டுக் களையை நீக்கிக்
 கூன்கதிர்கள் விளைந்தவயல் அறுத்தெ டுத்துப்
போர்குவித்த நல்லுழவர் வாழு கின்ற
 பொன்னுடாய் நம்நாட்டைச் செய்வோம்! நம்மை
ஆரெதிர்ப்பார் உலகத்தில்? பகைப்பார் ஆனல்
 அழிவன்றி வேறென்ன அடைவார் தாமே? 26

குடியரசு நாட்டினிலே மக்கள் ஈன்ற
 குலமொன்றே; தொழிலொன்றே; குடிமை ஒன்றே!
நெடுநேரம் அவரவர்கள் ஆற்றல் காண
 நீளுழைப்பைத் தந்திடுவோம்; ஓய்வில் தத்தம்
குடியிருப்புத் தோட்டத்தில், தோட்டம் சார்ந்த
 குறுநிலத்தில் பயிர்விளைப்போம்! வெட்கம் வேண்டாம்!
விடுபடுவோம்; பசிவறுமை வேர றுப்போம்;
 வெளிப்பகையை முறியடிப்போம்; வாழு வோமே! 27

நானுழவன் என்பதிலே மகிழ்ச்சி கொள்வேன்!
 நாடாளும் அமைச்சுக்கும், அறிஞர் கட்கும்,
மானுழுத தோலிருந்தே பரத்தைத் தேடி
 வழிபார்க்கும் முனிவர்க்கும், இல்லத் தோர்க்கும்,
தேனுழுத சொற்குழவி, என்னைப் போலச்
 செந்தமிழில் கவிபாடும் வறிய வர்க்கும்,
கூன்குருடு உண்பதற்கும் கொடுப்ப தாலே
 குடியரசுத் தலைவன்நான்! அரங்கன்[5] ஆமே! 28

○

நாள்: 25—1—1966

இடம்: புதுவை வேதபுரீசுவரர் நூல் நிலையம்.

தலைவர்: தூத்துக்குடி வ. உ. சி. கல்லூரி முதல்வர், பேராசிரியர் திரு. அ. சீநிவாசராகவன், எம். ஏ.

தலைப்பு: நமது குடியரசில் — வேளாண்மை.

நடத்தியவர்: புதுவை அரசுச் செய்தித் துறையினர்— குடியரசு நாள் விழாக் கவியரங்கம்

குறிப்பு: புதுவை மாநில ஆளுநர் மாண்புமிகு சீலம் அவர்களும், புதுவை அமைச்சர்களும் கலந்து கொண்டனர். ஆளுநர், கவிஞர் பாடலைக் கவியரங்கத் தலைவரால் ஆங்கிலத்தில் மொழிபெயர்த்துச் சொல்லச் செய்து, கேட்டுச் சுவைத்து மகிழ்ந்தார்.

1. பாற்கடல் முறையே, திருப்பாற் கடல், நன்னெறிக் கடல், பக்கக்கடல், பால் கடல்.

சீநிவாசன் முறையே, திருமால், சீநிவாசராகவன், சீநிவாசராகவன், சீனியில் வாசம் செய்யும் எறும்பு.

2. புனைநீர்-நிலத்தைத் துளைத்தெடுக்கும் நீர்.

3. உழவன்-உழத்தி உரையாடற் பாடல்களில் இடக்கரடக்கர்ப் பொருளும் உள்ளமை கண்டுணர்ந்தின்புறுக. இவை எழுத்தளவேயன்றி, அரங்கேறப்பெறுதவை எனவும் அறிக.

4. கூட்டும் – ஒன்று சேர்க்கும்.

5. கவிஞரின் இயற்பெயர் அரங்கசாமி. அதன் குறுக்கம் அரங்கன். இதுவும் ஒரு பொருள் என அறிக.

# 10. நானிலம்

## தமிழ் வாழ்த்து

(குறள் வெண்பா)

நாகாக்கும்[1] செந்தமிழே! நானுன்னைப் பாடவே
காகா[2] எனக்கரைந் தேன்.

## குறிஞ்சி

(பஃறொடை வெண்பா)

கார்தவழ் நீண்ட கழைவளர் மாமலையின்
சாரல் அருகில் சரிந்த சிறுபாறை
மேலுதிர்ந்த பூக்கள் விலையுயர்ந்த கம்பளத்தை
ஆடரங்கின் மேலே அமைத்ததைப் போலிருக்கும்!
உச்சி மலையின் ஒருபுறத்தில் தேனடையில்
நாவற் பழவண்டு நல்யாழ் இசைத்திருக்கும்!
வேரிற் பழுத்த பலாத்தூக்கும் மந்தியெலாம்
சேர முழவோசை சேர்க்க வருவோராம்!
மான்களோ பார்க்க வருவோரை மானுமே!
மயிலாடு பாறை மகளிர் கலைமன்றம்!
என்றும் அழியா இயற்கையின் பேரழகு
குன்றுக் குறிஞ்சி நிலம்!

## முல்லை

கொல்லைப் புதரெல்லாம் 'குக்குக்கூ' என்றுகுயில்
வல்லார் தமிழை வழங்கி வரவேற்கும்!
பச்சை மரத்தில் பசுந்தழைக் கொம்பிருந்து
'கிச்சுக்கிச்' சென்னும் கிளிப்பிள்ளை! புறவு
பறந்து பறந்து பகலெல்லாம் சுற்றி
இறைந்த தினையை எடுத்தேகும் கூட்டிற்கே!

கூனல் மரமேறிக் கொத்துக்கொத் தாய்மலரை
வானுக் களிக்க வளரும் மலர்க்கொடிகள்!
ஆட்டின் மணியோசை, ஆயன் குழலோசை
காட்டில் எதிரொலிக்கும்! காதுக்கோ பேரின்பம்!
கொல்லை வரகும், குளிர் தயிரும் எந்நாளும்
முல்லை நிலத்தின் முதல்.

மருதம்

பச்சைப் பசும்பாய் பரப்பியதைப் போல்நன்செய்
உச்சிக் கதிர்கள் ஒசிந்தாடும் காற்றினிலே!
வாழைக் குலையீன்று மாவின்மேல் சாய்ந்திருக்கும்!
கூழைப் பலாதென்னை குளத்தோரம்! காட்டில்வாழ்
வேழச் செவிபோல் விரியும் மரையிலைகள்!
வாழ்வளிக்கும் இல்லத்து மாமணியாம் மங்கைபோல்
நீண்டிருக்கும் காம்பில் நிமிர்ந்திருக்கும் தாமரைப்பூ!
கூண்டுக் கருகில் குரல்கொடுக்கும் சிட்டினங்கள்!
கிள்ளை சிறகடிக்கும் கீழ்வானத் தோற்றம்போல்
பள்ளத்தே தேங்கும்நீர்! பாட்டிசைக்கும் கால்களெலாம்!
நாளும் உணவளிக்கும் நன்செய் மருதநிலம்
ஆளரசுக் கச்சாணி ஆம்!

நெய்தல்

பொன்னைப்போற் பூத்த புதர்த்தாழை புன்னையிலே
சின்னக் குருகிருக்கும்! சீறும் கடலலைகள்!
நண்டோடிப் பாயும்! நடுக்கடலின் மீன்வளத்தைக்
கொண்டுவரும் கட்டுமரம்! கூழளிக்கும் செல்வமாம்!
நீலக் கடல்மேல் நெளிந்தாடும் பாய்மரங்கள்
காலைக் கதிரினிலே கண்ணைப் பறித்திருக்கும்!
பாயும் கடலலையின் பக்கத்து மேட்டினிலே
காயும் கருவாடு! காக்கைகள் வட்டமிடும்!
ஓயா அலைகளோ ஊரிரைச்சல் போலிருக்கும்!
வேயாத வீட்டு வெளியெலாம் கன்னிவலை[3]

வீசிக்கிடக்கும்! விலைபோகும் மீன்கூடை!
ஓசை உயர்நெய் தலே!

### புதுவைச் சிறப்பு

(நேரிசை ஆசிரியப்பா)

இந்த நான்கு நிலத்தினும் இயைந்த
இனிய தாயகம்! தாயகம்[4] அதனில்
இணைந்த மாநிலம் என்னரும் புதுவை!
தமிழர் வாழ்வினில் சழக்கரை வீழ்த்தித்
தழைத்த சங்க கால முதற்றே
வீரை வெளியனை[5] ஈன்றது புதுவை!
விடுதலை வீரன் பாரதி யாரைச்
சீர்ப டுத்திச் சிறந்தது புதுவை!
பாட்டில் பைந்தமிழ்த் தேன்சுவை தேக்கிப்
பாருக் களித்தநம் பாரதி தாசனை
நாட்டுக் களித்தது நாம்வாழ் புதுவை!
ஆளும் அமைச்சருள் முதன்மை அமைச்சை
வேங்கட சுப்பை[6] விளைத்ததும் புதுவை!

### பாகூர்ச் சிறப்பு

பொங்கு நீள்புகழ் புதுவையைப் போலப்
பங்கு பெற்றதாம் பல்லவப் பாகூர்!
தொண்டை நீள்வலி தோற்றிடச் செய்யும்[7]
கவிஞர் நாலுன்கு கண்டதும் பாகூர்!
பாகூர் மாப்புகழ் பாடுதற் கெளிதோ?

இன்னும் எத்தனை எத்தனை யோவென
எண்ணச் சேர்ந்தே இணைந்த மாநிலம்
தன்னில் கொண்டதே தாயகம் ஆகுமாம்!

### வேங்கடப் பெருமை

இனிய தாயகத் தலைமை வேங்கடம்![8]
இந்த வள்ளுவர்க் கெடுக்கும் விழாவில்
இருக்கும் மக்களின் தலைமை வேங்கடம்!
இந்த நாட்டின் அரசில் வாழ்ந்தே
இருக்கும் மக்களின் தலைமை வேங்கடம்!
அந்த வேங்கடத் தலைமைக் கெனதே
அகங்க னிந்த வணக்கம் முதற்றும்!

இந்த மன்றினில் இருக்கும் மேலோர்,
இங்குச் சூழ்ந்த தந்தை தாய்மார்,
வந்து பாட வல்ல கவிஞர்,
வாழ்த்தும் மாநகர்த் தந்தையர்,[9]
மற்றும் யாவர்க்கும் வணக்கம்! வணக்கமே!

### தலைவர் முடிவுரை : வாழ்த்து

(வெண்பா)

எண்[10]ணிரட்டிப் பாடினர்; நால்வரிலே! கேட்டோம்நாம்!
பண்ணுருட்டி மேலோர் பலாச்சுவைத்தோம்!''[11]. மண்ணில்
இளங்கவிஞர் வாழ்க! இதுபோன்ற நல்ல
வளக்கவிதை பாடுக வாய்!

○

நாள் : 27-2-1966.

இடம் : பாகூர்ச் சிவன் கோயில்—வள்ளுவர் விழா.

விழாத் தலைவர் : புதுவை மாநில முதலமைச்சர் மாண்புமிகு திரு. வி. வேங்கட சுப்பாரெட்டியார்.

கவியரங்கத் தலைவர் : புதுமைக் கவிஞர் வாணிதாசன்.

1. நாகாக்கும் - நா+காக்கும் எனவும், நாகு+ஆக்கும் எனவும் பிரித்துப் பொருள் கொள்க. நாகு - இளமை.

2. காகா - கா கா - காப்பாற்று, காப்பாற்று எனவும், காகா - காக்கை கா கா எனக் கரைவது போல எனவும் இரு பொருள் கொள்க.

3. கன்னிவலை - மீன்பிடி சிறுவலை; இளம் பெண்களின் உயிர்களை அகப்படுத்தும் கருவி.

4. தாயகம் - தாய்+அகம்.

5. புதுச்சேரிக்கடுத்த அரியநகர் வீராம்பட்டினத்தில் வாழ்ந்த வீரை வெளியனார் என்னும் புலவர்; 'முன்றின் முஞ்ஞையொடு' எனத் தொடங்கும் 320ஆம் புறப்பாடலைப் பாடியவர்.

6. புதுவை முதலமைச்சர் வேங்கட சுப்பா ரெட்டியார்.

7. தொண்டை வலியெடுக்க; தொண்டை நாட்டின் வலிமை.

8. வேங்கடம் முறையே வடவேங்கடம், வே+கடம் - மணியின் மாசு நீக்குதல், புதுவை முதலமைச்சர் வேங்கட சுப்பா ரெட்டியார்.

9. பாகூர் நகர மன்றத் தலைவர் திரு. எல். சதாசிவ ரெட்டியாரும், துணைத் தலைவர் திரு. ஆர். இராமச்சந்திரனும் ஆவர்.

10. எண் – எட்டு; எண்ணம்.

11. பண்ணுருட்டி – ஓர் ஊர்; பண்+உருட்டி - இசையை உருளச் செய்து. பலா - பலாப்பழம்; பல்+ஆ – பல ஆக்களின் பால்.

# 11. புதியதோர் உலகு செய்வோம்!

## வாழ்த்து

(குறள் வெண்பா)

திருக்கழுக் குன்றத்தில் செந்தமிழைப் பாடத்
திருக்கழு் செய்க திரு.[1]

(அறுசீர் விருத்தம்)

தேன்கழி நீலம் புன்னை
செழுமலர் தாழை யோடு
மான்மதம் மஞ்சள் பூசி
மணப்பொடி உடலில் தேய்த்துக்
கூன்பிறை மகளிர் இல்லில்
குளித்தநீர் கடலிற் சேரும்!
மீனெலாம் மணக்கும் மல்லை
மிகுபுகழ்த் தொண்டை நாடே! 1

சேர்ந்ததால் சீர்த்தி பெற்ற
திருக்கழுக் குன்றம் வாழும்
கூர்ந்தநல் லறிவு சான்ற
குலத்தோரே! தாய்க்கு லத்தீர்!
தேர்ந்தநற் றமிழை ஓதிச்
செந்தமிழ்க் கவிதை பாடச்
சார்ந்தோரே! வாணி தாசன்
தலைதாழ்த்தி வணங்கி னேனே! 2

புதியதோர் உலகு செய்யப்
போகின்றோம் இன்று நாமே!
'புதியதோர் உலகில் இன்றி
வேறெங்குப் புகுந்தோம்?' என்றே

மதியுளோர் கேட்பார்! அன்னோர்
வாக்கிலும் உண்மை உண்டாம்!
புதுமையில் புதுமை காணல்
புதுமையின் போக்கென் பேனே! 3

பழமைத்தாய் ஈன்ற சேயே
பச்சிளம் புதுமை! அந்தக்
குழவியே வளர்ந்து தேய்ந்து
கூனிய பாட்டி யாவாள்!
கிழவியும், கிழவி தந்த
கிளிமொழிக் குமரிப் பெண்ணும்
பழமையும் புதுமை யும்போல்
பாரினில் நிலவக் கண்டோம்! 4

தேவையும், தேவைக் கேற்ற
திறமையும் வாய்க்கப் பெற்ருல்,
பூவையும் பூக்க வைக்கும்
புதுமைக்கு வழியுண் டாகும்!
கோவையும் மாற்றக் கூடும்!
குடிமுறை மாற்றக் கூடும்!
பாவையை மாற்றக் கூடும்!
பழமையில் புதுமை யாமே! 5

புதியதோர் உலகை எண்ணிப்
புறப்பட்டேன்! இன்பக் கிள்ளை
மதுமலர்க் குழலி இல்லாள்,
'வயலுக்கா?' என்ருள்! 'இல்லை;
அதுவொரு செய்தி!' என்றேன்!
அருகினில் முன்கை ஊன்றி,
'மெதுவாகச் சொல்க!' என்ருள்;
உடம்படு மெய்யள் ஆனுள்! 6

(கலிவெண்பா)

அன்பே! இதைக்கேள்: அழகுத் திருநாட்டில்
இன்பப் பெருவாழ்க்கை எல்லோரும் வேண்டுமெனில்
என்செய்ய வேண்டும் எனவெண்ண லாஞரர்கள்;
நன்செய் வயலும் நனிபுன்செய்க் காடும்

இருந்தும் பயனென்ன? எந்நாளும் இல்லில்
அருந்தும் உணவுக்(கு) அளவேடே[2] கண்டனரே!

குன்ற மணிகண்ட[3] முத்தமிழ் மன்றத்துக்
குன்ற மணிகண்ட[4] கொள்கைப் புலவர்

பதின்மர் புதிய உலகைப் படைக்க
எதிரில் எழுந்தே இருக்கும் அறிஞர்முன்

தொண்டைவலி[5] காட்டத் துடிக்கின்றார் ஐயிருவர்!
தொண்டைவலி[6] காட்டத் தொடங்குமுன், என்னுயிரே!

ஆசை மனையாட்டி! அன்றலர்ந்த தாமரையே!
பேசும் புதிய உலகின் பெருஞ்சிறப்பை

வாயால் உரைப்பேன்; மனங்கொண்ட பின்னரீநீ
வாய்[7]மறுக்கக் கூடாதே! வாய்[8]மறுக்கக் கூடாதே!

புத்துலகம் செய்யும் செயல்புளித் தொக்கன்று!
புத்துலகம் செய்யப் பொறுமை நனிவேண்டும்!

மண்திருத்தும் ஏரோன் வயல்திருத்தல் போலவே
பெண்திருத்தம் வேண்டுமே பிள்ளை திருந்துதற்கே!

கண்[9] திருத்த வேண்டும்;அதில் வேற்றுமை காண்பதுவோ?
கண் திருந்திப் போனலெக் கண்ணும் திருந்திவிடும்;

சாதி முளைக்காது; தான்தனது தோன்றாது,
நீதி நிலைக்கும்; நிலைத்திருக்கும் அஞ்சாமை!

புத்துலக எண்ணப் புதுவிதையைத் தூவிவிட்டால்
கொத்தாய்த் துளிர்க்கும்; குலைபழுக்கும் நல்வாழ்வு!

இத்தனையும் செய்ய எதிரில் வரும்பகைகள்
அத்தனையும் தாங்கும் அறிவுத் திறம்வேண்டும்!
தாய்மாரின் பங்கு சரியாங்கே என்பேன்நான்!
ஆய்மார்கள் இல்லத்தின் ஆய்மார்கள் ஆகாதீர்!
இன்னுங்கேள்: பாடல் இசைக்கும் சிறுகுயிலே!
முன்னுக்கே ஏற முயல்வதுவே புத்துலகம்!
வாழும் உயிரினங்கள் எல்லாம் ஒருசாதி!
சூழ்ந்திருக்கும் ஆண்பெண் தொகுப்பில்லை அவ்வுலகில்!
தேவை பொதுவாங்கே! செய்யுந்தொழில் பொதுவாம்!
காவல் பொதுவாங்கே! காசு பொதுவாங்கே!
ஆன்ற அறிவே அவரவரின் வேற்றுமையாய்த்
தோன்றினும் வேறொன்றும் தோன்றாதே அவ்வுலகில்!
தாய்மொழியில் ஆட்சி தருபுலவர் நல்விளைவு
தாய்மொழியில் கொண்டு தருவார் உலகில்
இயற்கை எதிர்த்தாலும், இன்னல் நேர்ந்தாலும்
செயற்கை முறையிற் செயற்படுவர்; வெற்றிகொள்வர்!
எங்கும் தொழிற்பெருக்கம்! இல்லாமை இல்லையாங்கே!
தங்கட்குப் போகத் தருபொருளை மற்றவர்க்கும்
பங்கிட்டுத் துய்க்கின்ற பண்பாளர் புத்துலகில்!
தெங்கிளநீர்ச் சொல்லுடையோர், ஈன்ற திருநாட்டைத்
தங்கள் உயிர்கொடுத்துங் காக்கத் தயங்காதார்
எங்கும் அயலுக்(கு) இருகையை நீட்டிடுவர்!
சண்டை கிடையாது; தன்மானம் நீங்காது;
மூண்டுவந்த எப்பகையும் மூச்சோடு போகாது!
கொண்டல் தவழும் குளிர்மலையும் நீள்கடலும்
அண்ட வெளியும் அரசோச்சும் நல்லறிவு!
நான்பாடும் பாடலினால் நாழிகை ஆகிறது!
தேன்கொழிக்கும் புத்துலகச் செய்தியை நம்கவிஞர்

*கானக் குயில்போற் கவிதை இசைத்திடுவர்!*
*வானிலவே கேட்டு மகிழ்!*

## முடிவுரை

(வெண்பா)

*ஐ[12]யிரட்டிப் பாடினூர் பாவலர்கள்! வாழ்கவே!*
*கை[13]யிரட்டிப் புத்துலகம் காட்டினர்!—வையத்தில்*
*பாட்டின் திறத்தாலே பல்வளமும் பெற்றென்றும்*
*நாட்டுக நல்ல புகழ்!*

○

நாள்: 4-4-1966.

இடம்: திருக்கழுக்குன்ற மலையடிவாரம் – முத்தமிழ் இலக்கிய மன்ற மூன்றும் ஆண்டு நிறைவு விழாக் கவியரங்கம்.

தலைவர்: புதுமைக் கவிஞர் திரு. வாணிதாசன்.

தலைப்பு: புதியதோர் உலகு செய்வோம்.

1. திருக்கழுக்குன்றம் – ஓர் ஊர். திருக்கு+அழு – மாறுபாடு கெட.
2. உணவுப் பொருள் வழங்கும் அட்டை; பங்கீட்டுச் சீட்டு; ரேஷன் கார்டு.
3. திருக்கழுக்குன்றத்துப் புலவர் திரு. எம். எஸ். மணி.
4. மலையிடைப் பிறந்த மணி - இரத்தினம்.
5. தொண்டை நாட்டின் வலிமை; பற்றுக்கோடு.
6. தொண்டை நோய்.
7. வாய் – உண்மை.
8. வாய் - உதடு; வாய்
9. கண் முறையே விழி, அறிவு, இடம்.
10. ஆய் முறையே தாய்; அழகு.
11. காசு-குற்றம், பொருள்.
12. ஐ–ஐந்து; அழகு; மேன்மை.
13. கை-ஒழுங்கு; ஆற்றல்.

# 12. வயிரவாள்

## தமிழ்த்தாய் வாழ்த்து

(சிந்து கண்ணி)

தமிழே அமுதெனச் சாற்றுவோம்!—அந்தத்
தமிழே உயிரெனப் போற்றுவோம்!—அந்தத்
தமிழே நிலவென ஏற்றுவோம்!—அந்தத்
தமிழே விளைவுநீர் ஊற்றுவோம்!
தமிழ்வாழ்க! வாழ்கவே!

தமிழே மதுவுண்டே ஆடுவோம்!—அந்தத்
தமிழே வாழூர் நாடுவோம்!—அந்தத்
தமிழே உரிமையெனத் தேடுவோம்!—அந்தத்
தமிழே இளமைத்தாய் கூடுவோம்!
தமிழ்வாழ்க! வாழ்கவே!

புலவர்க்குத் தமிழேகை வேலாம்!—இந்தப்
புலத்தின்சீர் உயர்வுக்கே வேளாம்![1]—நெஞ்சம்
அலைவுற்ற வர்க்குச்செந் தேனும்!—எங்கும்
அறிவுக்குத் துணைநிற்குந் தோளாம்!
தமிழ்வாழ்க! வாழ்கவே!

புவிவாழும் யாவினும் மேலாம்!—ஆன்றோர்
போற்றுதற் குரியநன் னூலாம்!—என்றன்
கவிதைக்கு வயிரத்தின் வாளாம்!—நாமெலாம்
கைகூப்பி வணங்குவோம் கோளாம்!
தமிழ்வாழ்க! வாழ்கவே!

## அவையடக்கம்

(அறுசீர் விருத்தம்)

அலைக்கையை நீட்டி நீட்டி
அணைக்கின்ற நெய்தற் பெண்ணின்
கோலக்கண்ணும் நீலம் நெய்தல்
குளிர்மலர்த் தேனை உண்டே
சலித்திட்ட அறுகாற் புட்கள்
தாழையில் துயிலும்! ஆன்றோர்
நிலைத்திடு புதுவைக் கென்றன்
நெடுவாழ்த்து! வணக்க மாமே!

(கலிவெண்பா)

சித்திரைத் திங்களைக் கண்டேன்; திகைத்தேன் நான்!
புத்தரைப் போலப் புறப்பட நான்நினைத்தேன்!

ஊர்தீய்க்கும் வெய்யில் உடல்தீய்க்க, மேனியிலே
வேர்தீய்க்கத் திண்ணை வெளியினிலே வந்தேன்நான்!

வெப்பத்தி னோடுநல் வெய்யோன் சுடுமண்ணை
அப்பியது காற்றும்! அடடா! இதுவென்ன?

'தென்றல் தவழும் திருநாட்டில் வாடைவந்து
மன்றல் புரிந்த வளம்போலும்!' என்றுநான்

எண்ணி இருக்கின்ற வேளையிலே, என்மனைவி
திண்ணை அருகில் சிரித்துமுகம் காட்டிநின்றாள்!

கொல்லன் உலைபோல் கொதிக்கின்ற மேல்வானில்,
இல்லை! இல்லை! என்மனம்போல் மேல்வான் எரிமூழ்க

ஆழ்கடலில் கன்னி அமுத்த உருள்செப்புத்
தாழிபோல் வெய்யோன் தலைமறைத்துக் கொண்டிருந்தான்!

'என்னத்தான்! என்னத்தான்!' என்றகுரல் கேட்டேன்!
கன்னங் குழிவீழ்ந்த கார்க்கூந்தல் என்மனைவி

பிள்ளை மதிநெற்றிப் பேரழகி, 'சிந்தனையின்
வெள்ளத்தில் மூழ்கி மிகநேரம் ஆனதுவோ?
பக்கம் இருக்கும் பாவைமேல் கண்ணின்றித்
திக்குத் தெரியாத் திசையாதோ?' என்றாள்!

'வயிரவாள்!' என்றேன்! மகிழ்ச்சி! மகிழ்ச்சி!
வயிரவாள்கண்டிங்கே வாய்திறக்காப் பெண்ணுண்டோ?
'காதுக் கணி'[2] என்றாள்! 'காதுக் கணி' என்றேன்!
'ஏது? மதிமயக்கோ? என்சொல்லை மீண்டுமே

சொல்லும் குறும்போ? குறும்பு தவிர்க!' என்றாள்!
'அல்போலும் கூந்தல் அழகே! எனதுயிரே!
இந்தா! இதைக்கேள்! எனதாசான் பாவேந்தன்
தந்த வயிரவாள்! சற்றேநீ கேளேடி!

முன்னாள் முடிவேந்தர் முண்டி வரும்பகையைத்
தன்னிடையில் ஒம்பித் தலைவீழ்த்தி வந்ததுவாம்!
பின்னாளிற் சாதி மதக்கொடுமைப் பேர்சொல்லி
இன்னல் இழைத்தோர், இடைப்புகுந்து நல்வாழ்வைச்

சாய்த்தோர், உழைப்பெல்லாம் தான்தன தென்றுமே
ஏய்த்தோர்கள், இன்றமிழைக் கல்லாமல் ஏப்பமிடும்
குட்டை மனத்தோர், குறுநரிகள் யாவரையும்
நெட்டை மகனே! நினதுதோள் நானறிவேன்!

வெட்டிநீ வீழ்த்தியே வெற்றிகொள் என்றிடையில்
கட்டும் வயிரவாள் காண்நீ! எனதாசான்
இன்றில்லை! உண்மை! இருந்தாலும் என்வாழ்வில்
என்றும் மறவேன்! எதிர்த்துவரும் எப்பகையும்

நின்று தனித்தெதிர்ப்பேன்! நீஎனது தோள்கண்டு
குன்றாதே! இவ்வயிர வாள்கூர்மை குன்றவில்லை!

பண்டைத் தமிழர் பயின்ற மொழிவளத்தைக்
கொண்டுவந்துசேர்ப்பேன்! குறுக்கிட்டால் கொல்வேன் நான்!
ஆடலிற் பாடலில் ஆன்ற உரைநடையில்
கேடெங்கு நேர்ந்தாலும், திங்களே! செந்தமிழே!

வான்மின்னல் போலக் கவிதை வயிரவாள்
மானே! உறை[3]நில்லா! மக்களுறை நில்லாதே!
தேன்கொழிக்கச் செய்வேன்; திருநாட்டில் எத்துறையும்
ஈன மிலாமல் நான் ஏற்றமுறச் செய்வேன்;

செழுமை நிறைந்த, திறமை மிகுந்த,
முழுமை அறிவடைந்த, மூதறிஞர் வாழ்கின்ற
நன்னாடாம் நாம்வாழும் இந்நாட்டை என்றுமே
பொன்னாடாய்ச் செய்வேன்; புதுமை பலகொணர்ந்து

ஆக்கப் பணிபுரிவேன்! ஆசான்மேல் ஆணையிது!
தேக்கு மரச்சிலையே! தீட்டாத ஓவியமே!
காசு கொடுநீ கவியரங்கம் போக!' என்றேன்!
மாசில்லா வீணை மனையாட்டி கண்கலங்கிப்

'பேசுவீர்! உங்கள் பிழைப்பே இ(து)!' என்றாள்!
'காசறு பொன்னே! களிவண்டே! இன்றுலகைப்
பேச எழுப்பும் பெரும்பணியே நம்பணியாம்!
ஆசை மனையாட்டி! அஃதேநம் வேலையடி!

காசைக் களைவோம்நாம்! காசைப் பொதுசெய்வோம்!
மீசை எனக்கில்லை! மீசை முறுக்குடைய
ஆசானின் உள்ளம்! அதுபோதும், போதுமடி!
பேசாமல் என்னைப் பிரிய விடுகுயிலே!

இன்னுங்கேள்: காதுக் கணியாம் வயிரமணி
பொன்னும் பொருளும் புதுவாழ்வும் மக்கட்கே

*இல்லை எனவெண்ணி ஏங்காதே! எவ்வளனும்*
*வல்ல நமதரசை வாழ்த்துவோம்! யாவும்*
*புவியில் அடைவோம்! பொறுப்போம்! தமிழே!*
*கவிதை[4] வயிரத்தின் வாள்!*

○

நாள்: 21–4–1966.

இடம்: வேதபுரீசுவரர் கோயில்—பாவேந்தர் பாரதிதாசன் நினைவு விழா.

தலைவர்: திரு. கவி. கா. மு. செரீப்பு.

தலைப்பு: பாரதிதாசன்—கவிதைக்கு வயிரத்தின் வாள்.

1. வேள்—வேளாளர்-சிறப்புரிமைப் பெயர்.

2. காதுக்கணி முறையே செவிக்கழகு; கொலைக்கு அணிவகுப்பு.

3. உறை முறையே ஆயுதக்கூடு; இருப்பிடம்.

4. கவிதைக்கு என நான்காம் வேற்றுமை உருபு விரித்துப் பொருள் கொள்க.

# 13. நாடக ஆசிரியர் அண்ணா

தமிழ் வாழ்த்து

(குறள் வெண்பா)

*அன்னைத் தமிழ்த்தாயே! அண்ணாவை நான்பாடும்*
*சென்னைக் கவிசிறக்கச் செய்!*

(நேரிசை வெண்பா)

*அண்ணா பிறந்த அழகு|தமிழகத்தில்*
*அண்ணா[1]|பிறந்த தமிழே!எம்—அண்ணாவைச்*
*செந்தமிழாற் பாடச் செழுங்கவிதை நல்வளத்தைத்*
*தந்தாள்! தலைதாழ்த்தி னேன்!*

*நாடகத்து[2] நற்றமிழே! நானுன்னைப் பாடவே*
*நாடகத் தாசிரியர் நம்மண்ணா—ஈடில்*
*பெருஞ்செல்வம் அண்ணா பிறப்பென்னும் செல்வம்*
*அருகிருந்து காத்தே அருள்!*

அவையடக்கம்

*கடலோர நீளலைகள் இரைந்தெழுந்தே*
*கரைமோதும்; முரசார்க்கும்! கரையைச் சூழ்ந்த*
*இடமகன்ற சென்னைநகர் அமைச்ச ரேறே![3]*
*இன்கவிதைக் கவியரங்கத் தலைவ! அண்ணா*
*படைமறவ! கலைக்கருணா நிதியே! செந்தேன்*
*பரிமாற வந்துள்ள புலவீர்! மன்றத்(து)*
*இடையுள்ள பெரியோரே! ஈன்றெடுத்த*
*என்னருமைத் தாய்மாரே! வணங்கி னேனே!*

(கலிவெண்பா)

'சென்னை நகர்நோக்கிச் செல்கின்றேன்' என்றேன்நான்!
புன்னை மலர்வண்டுப் பூங்கண் மனையாட்டி,

'என்னையும்...!' என்ருள்! இடைமறித்(து), 'என்னன்பே!
பொன்னணிகள் இல்லையே; புத்தாடை வேறில்லை;

கையிற் செலவுக்குக் காசில்லை; கேட்டாலும்
பொய்யுரைப்பார் அன்றிப் பொருள்கொடுப்பார் இல்லையடி!'

என்றுரைத்தேன்! வானத் திடையெழுந்த கார்முகிலில்
சென்ற மதிபோல் சிரித்தமுகம் மாறினளே!

அண்ணுவைப் பாடும் அவையிருந்து கேட்பதற்குப்
பெண்ணுள்நீ கேட்கின்ற பேறில்லை! பேச்சாளர்,

அண்ணுவோர் நாடக ஆசிரியர்! அஃதுண்மை!
பெண்ணே!என் பேரில்லப் பெண்ணரசி! நீவாய்த்த

பேற்றை நினைக்கப் பெருஞ்சிரிப்பாம்! நம்வீட்டுச்
சோற்றைப் பகிர்ந்துண்ணும் சொந்த மகளின்

வழிவந்த மாற்றுச் செழும்பொன்னும் பொன்னி
வழிச்செல்வம் போதாவோ? வேறென்ன வேண்டுமடி?

பூக்குழலி! இல்லத்துப் பொன்வண்டாம் நம்பிள்ளை
நாக்குழறிப் பாடி நகைமுகத்து நீலவிழி

நோக்கால் உடலை நொடிப்பதைப் பார்த்திருப்பாய்!
நோக்கந்தான் என்னவாம்? நோக்கம் குழந்தை

மனக்கருத்தைப் பெற்ருேர் மனம்பதிய வைத்துத்
தனக்குரிய கொள்ளும் தகைமைத்தாம்! அஃதேபோல்

நாட்டகத்து மக்கள் நலிவை, இழிசெயலை
நாட்டகத்துச் சான்ருேர் நசுக்கி ஒழிக்கவே

நாடகத்தைத் தீட்டி அளித்தார் நமக்கெல்லாம்!
நாடகமே! நீவாழ்க! நற்கலையே! நீவாழ்க!

நல்லிசையும் பேச்சும் கதையும் நனிசிறக்க
வல்லோர்கள் ஆக்கியதே வண்டமிழ் நாடகமாம்!

உள்ளத் துணர்வை உடலசைவாற் காட்டியே
உள்ளத்தில் நற்கருத்தை ஊட்டல் அதன்குறிக்கோள்!

நாட்டுக்கு நாடு நடைமுறைகள் வெவ்வேறாம்!
நாட்டுக்கு நாடு கலைமுறைகள் வெவ்வேறாம்!

நாளாக நாளாக மக்கள் மனமாற்றம்
ஆளும் தகைமை அறிந்து திருத்துவது

நாடகத்தால் அன்றி நடவா தெனவுணர்ந்தோர்
ஏடகத்தால் தீட்டி எழுச்சியை ஊட்டினரே!

ஓவியத்தைக் கண்டே உணரலாம்! வேறென்னும்?
காவியத்தைக் கற்றே களிக்கலாம்! வேறென்னும்?

பாடுவதைக் கேட்டுவாய் பார்த்திருப்போம்!
[பின்னென்னும்?

நாடகத்தால் அன்றி நலமடைந்த நாடுண்டோ?

மக்கள் மனத்தை வழிப்படுத்தி மாற்றுகின்ற
சொக்குப் பொடிமருந்து தூயதமிழ் நாடகமே!

பிள்ளை மதிநெற்றிப் பேரழகி! இல்லாளே!
கள்ளத் தனமாகக் காலத்திற் கொவ்வா

அடிமைக் கருத்தும், அறிவை மறைக்கும்
மிடிமைக் கருத்தும் மிகநிறைத்தே நாடகத்தை

நாட்டில் உலவ நமையேய்த்தோர் விட்டனரே!
நாட்டில் இவ்ரெல்லாம் நாடக ஆசிரியர்!
கேட்டாற் சிரிப்பாய்! கிளிமொழியே! இன்னுங்கேள்:
பாட்டெல்லாம் பாட்டாகா! நாடகப் பண்பதுவே!

நாடக ஆசிரியர் நம்மண்ணு அன்றியிங்கே
ஏடெழுது வோரில் எவருள்ளார்? இல்லை!

தனித்தலைவர் நம்மண்ணு நாடகத் தந்தை!
இனிப்பிறப் பார்யாரே? இலவே யில்லையென்பேன்!

கந்தனின் வாழ்க்கைக் களியாட்டம், வானுலக
மைந்தனின் வாழ்க்கை, மறுபிறப்(பு) என்றெல்லாம்

நாடகத்தில் முன்பு, நடுத்தெருவில் நம்மவர்கள்
ஆடுவதே மேன்மைக் கலையென்று கண்டோம்!

தமிழகத்தில் இந்தத் தறிதலை யாட்டம்
தமிழக வாழ்வி னிடையில் தலைக்கப்

புகுத்தினூர்/கண்டே புழுங்கினூர் அண்ணு!
வகுத்தார் புதுவழி! மக்கள் மனங்கவர்

வேலி இழந்த விளைபயிர்போல் தென்னகத்தே
தாலி இழந்தாள் தவிப்பு, தனியிருப்பு,

நாகூர்க் கடவுளுக்கு நாம்வளர்க்கும் ஆட்டினைப்போல்
ஆகாச் செயல்புரிவோர் அம்பலத்தி லேநிறுத்தி

மக்கள் மனத்திரையை மாற்றியதே அண்ணுவின்
சுக்கு மருந்தாகும் தூயதமிழ் நாடகங்கள்!

குப்பன் படுங்கொடுமை, கூலிக் குழைத்துவரும்
அப்பன் கொடுமை,நல் லாண்டான் கொடுமையொடு,

ஐயர் கொடுமை, அறச்சாலை உள்ளிருந்து
மெய்யெல்லாம் வெண்ணீறு, மேலுலகம் கீழுலகம்,

சாதி உயர்வு, தனியுரிமை, சொத்துரிமை
ஆதி முதலே அமைந்ததுவாம் என்றுரைத்தே

ஏய்த்துவந்த கூட்டத் திழிசெயலை, நாடகத்தில்
வாய்த்த இடமெல்லாம் வாதாடும் வீரன்போற்

சிந்திக்கத் தூண்டும் செழுந்தமிழ்ச் சொற்றொடரால்
தந்து, நமக்குப் பகுத்தறிவைத் தந்ததுயார்?

நாடக ஆசிரியர் நம்மண்ணா வல்லவோ?
நாடக ஆசிரியர்[5] நம்மண்ணா வாழ்கவே!

'ஓரிரவு' நாடகமே ஊர்போற்றும் நாடகமாம்!
ஓரிரவில் அண்ணா உயர்வாழ் வடைந்திருந்த

தென்னாட்டில் ஏழை திசைகெட்ட பெண்ணுலகை
முன்னிருத்திக் காட்டி முறைப்படுத்தி அஞ்சாப்

பணக்காரன் செய்யும் படுமோசச் செய்கைக்
கணக்கெல்லாம் மக்கள் கருத்திற் கணக்காக்கிப்

புத்தம் புதுக்கருத்துப் புத்துணர்(வு) ஊட்டியே
சத்தாம் மறுமலர்ச்சி நாடகத்தைத் தந்தனரே!

நல்ல புதுத்திருப்பம்! நாவூறும் சொற்றொடர்கள்!
இல்லாரை வல்லாராய் இந்நாட்டில் ஆக்கிவைத்த

சொல்லேராம் எம்மண்ணாத் தூயதமிழ் நாடகங்கள்
பல்லோர் புகழும் பகைப்புகழும் ஏற்றதுவே!

அண்ணா படைப்பின் அடியொற்றி நாடகங்கள்
எண்ணத் தொலையா எழுந்தனவே! தாயகத்தில்

அண்ணாவோர் நாடக ஆசிரியர்! மக்கள்தம்
கண்ணைத் திறப்போர், கருத்தளிப்போர் பின்யாராம்?

ஆசிரியர் அண்ணா! அறிவுத் திருப்பேழை
ஆசிரிவார் அண்ணா[6] அளித்தபல நாடகங்கள்!

நாடகத்தைக் கண்ணால் களிக்கின்ற நல்லறிஞர்
நாடகத்தைத் தீட்டி நமக்களிக்க வல்லாரோ?

நாடகத்துத் தந்தைநம் நாட்டின் முதலமைச்சர்
நாடகத் தாசிரியர்! நற்றமிழ்போல் வாழியவே!

முன்னாள் முடியரசன் மூதறிவே இன்மையினால்
பன்னாள் பலர்வாழப் பாய்விரித்து விட்டனனே!

பின்னாள் குடியரசர் பேதையரின் மேற்குதிரை
முன்னை விடுதலையின் மூத்தோரின் பேர்சொல்லி

ஏய்த்தார் பலநாட்கள்! இந்நாள் நடந்திடுமோ?
மாய்த்தார் அதை;அண்ணா! மக்கள் துயிலெழுப்பும்

நாடகத்தைத் தந்தார்! நமது பழம்பெருமை
ஏடெழுதும் நல்ல இளங்கவிஞர் தந்தாரே!

அண்ணாநல் லாசிரியர்! ஆக்கப் பணிபுரிந்து
மண்ணாளும் நம்மண்ணா வாழியர் வாழியரே!

அண்ணாவின் நாடகங்கள் அத்தனையும் பொற்குவியல்!
கண்திறக்கச் செய்யும்! கருத்தளிக்கும் நன்மருந்து!

பெண்ணுக் குரிமை,நற் பேச்சுரிமை, நாம்வாழும்
மண்ணுக் குரிமை வழங்கும் மலர்க்கைகள்!

எண்ண இனிக்கும் எழிற்கவிதைச் சொற்றொடர்கள்!
புண்ணுக்கு மாமருந்து! புத்துலகப் பாட்டை!

பசிக்கேற்ற நல்லுணவைப் பார்த்தூட்டும் அன்னை!
புசிக்கத் தெவிட்டாத புத்தமிழ்தாம்! தேனூற்றாம்!
ஆயிழாய்! என்னின்ப ஆசை மனையாட்டி!
தாய்நாடும் சேயாம் தமிழகத்து மக்களெலாம்!

சூழ்ச்சியால் வீழ்த்தலாம் சுத்தமுட் டாளையென்றே
வாழ்க்கை வகுத்தனர் வந்தவர்! அண்ணாவோ

முட்டாளின் உள்ள முதுகெலும்பைச் செஞ்சொல்லால்
தட்டி யெழுப்பநற் றம்பியரைத் தந்தாரே!

தம்பியர்கள் வாழ்க! தமிழ்வாழ்க! எங்களருஞ்
செம்பொற் கருணா நிதிநீடு வாழ்கவே!

நாடகத்தைக் கண்கண்டு நன்குணர்ந்து கொண்டதனால்
நாடகத்தை மீட்கவே நம்மண்ணா கைகொடுத்தார்!

நல்லரசு வாழ்க! நமதரசு வாழ்கவே!
பல்வளனும் பெற்றுப் பசிநீங்கி வாழ்ந்திடுவோம்!

தொல்லை களைவோம்! சுவைத்தமிழை நாம்காப்போம்!
சொல்லை மதிப்போம்! திகழ்மலைத்தோள் அண்ணாவின்

பாடு சிறக்கப் பயன்சிறக்கப் பல்லாண்டு
நீடு சிறக்க நிலைத்து!

○

நாள்: 17-9-1967.

இடம்: சென்னை புரிசை தருமப் பிரகாச மண்டபம்— சென்னை 44வது வட்ட முத்தமிழ் மன்றத்தார் நடத்திய அண்ணாவின் 59வது பிறந்த நாள் விழாக் கவியரங்கம்.

தலைவர்: தமிழகப் பொதுப்பணித்துறை அமைச்சர் மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி.

தலைப்பு: அறிஞர் அண்ணா—நாடக ஆசிரியர்.

1. அண்+நா - உள்நாக்கு.

2. நாடு+அகத்து எனப் பிரித்துப் பொருள் கொள்க.

3. தமிழ்நாட்டரசின் பொதுப்பணித்துறை அமைச்சர் மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி.

4. கவிஞரின் இரண்டாம் மகள் வயிற்றுப் பேத்தி.

5. நாடு + அகம் + ஆசிரியர் — நாட்டில் உள்ளோர் மனத்தைத் திருத்தும் ஆசிரியர்.

6. ஆசு+இரிவார் அண்ணா—குற்றம் நீங்கியவராகிய அண்ணா.

# 14. தமிழன்

தமிழ் வாழ்த்து

(குறள் வெண்பா)

உலகம் பிறக்கப் பிறந்த தமிழே!
தலைதாழ்த்தி னேனருளைத் தா!

(அறுசீர் விருத்தம்)

பாமணக்கும் தமிழ்த்தாயே! பயன்மணக்கும்
திருமகளே!பாவாய்! நாளும்
நாமணக்கும் சொல்மணக்கும் நற்றமிழர்
உளம்மணக்கும் நங்காய்! நீயோ
காமணக்கும் மலர்க்கூட்டம்! கனிமணக்கும்
பழத்தோட்டம்! கனிந்த செஞ்சொல்
வாய்மணக்கக் கவிவாணி தாசனுனை
மணமார வாழ்த்தி னேனே!

அவையடக்கம்

(ஆசிரியப்பா)

"யாதும் ஊரே யாவருங் கேளிர்
தீதும் நன்றும் பிறர்தர வாரா"
என்றபூங் குன்றனார் இதயத் தெழுந்த
பொன்னும் கருத்தைப் புவியில் நிறுத்தும்
உலகத் தமிழர் மாநா டுய்யக்
கலைவளர் தென்னகக் கதிரொளி மானும்
ஆன்றவிந் தடங்கிய அறிவுசால் பல்லோர்
ஈண்டுவந் துளரால்! இதயம் கனிந்த
வணக்கம் அவர்தம் வருகைக்கே! மற்றும்

குணகடல் வேங்கடம் குமரி முதற்றெனும்
தென்னகம் உலகப் பன்மொழி நாட்டுப்
பொன்னகப் புகழைத் தன்னகங் கொண்ட
பல்காப் பியத்துத் தொல்காப் பியத்துள்
சொல்லிய கருத்தின் தொகையே அண்ணு!
அண்ணு, அண்ணு வழிவரு தம்பியர்
கண்ணும் கலைஞர் கருத்தில் விளைந்த
பூம்புகார் கண்டோம்! பொலிதமிழ் கண்டோம்!
பூம்புகார் மன்றப் புலவர் தமிழ்த்தேன்
மாந்த வந்த மக்காள்! கவிதைத்
தீந்தமிழ்த் தேனில் திளைக்குஞ் செம்மல்காள்!
வாணி தாசன் வணங்கி
மாணுறு கவிஞரை வருகவென் றேனே!

(கலிவெண்பா)

முதலில் முளைத்தது யாதெனும் கேள்வி
முதல்இல் விடையாய் முளைத்தது முன்னுள்!
விரிவான் திரண்டு விளங்கிய தீயின்
எரிகதிர் மண்டிலம் எண்ணுக் கடங்கா
நெருப்புப் பெருங்கோள்கள் நீண்ட விசும்பில்
இருப்புக் கொள்ளவும் இயங்கவும் வானிடை
ஈர்ப்பெனும் ஆற்றல் இடையில் புகுதரப்
பார்க்கும் ஒளிமீன் பலதோன் றினவே!
வளியும் மழையும் வழங்கிக் கதிரோன்
ஒளிசெய் உடுக்கள் உருவை உடலைப்
பலமுறை மாற்றிப் பலவுரு வாக்கி
அலைகடல் தேக்கி அடர்தீ அகற்றிச்
சுழலும் உருண்டையைத் தோன்றச்செய் தானே!
சுழலும் உருண்டையில் முன்னர்க் குளிர்ந்தகே

இன்றுநாம் வாழும் எழில்சேர் உலகமே
என்றே அறிஞர்கள் எண்ணலானாரே!

நிலந்தீ வளிவான் மழையெனும் ஐந்தும்
கலந்த துலகெனக் கண்டனர் மேலோர்!

வடமுனை தென்முனை மாற்றம் அடைய
நடுமுனைப் பூமி நலம்பெற் றதுவே!
நடுமுனையில் நாம்வாழ் தமிழகம் உண்டாம்!
கடல்கொடு போனது காலவெள் ளத்தால்!

உலகப் பெருவெளி உள்ள நடுப்பால்
மலைகள் எழுந்தன; வான்மழை தேங்கின;

கல்லும் உடையக் கடலும் கலக்கவே
புல்லும் புதுப்புதுப் பூண்டும் முளைத்தன!

வாழும் உயிர்கள் வளர வளரப்பின்
சூழும் விலங்கும் தமிழனும் தோன்றினான்!

தென்னகத் தோனே நம் சீர்சால் தமிழனாம்!
அன்னோன் புகழை அளவிடல் கூடுமோ?

காட்டில் அலைந்தான்; கனியையும் காயையும்
ஈட்டினான்; உண்டான்; இணையை அடைந்தான்;

குளிரை மழையைக் குகைவழி வென்றான்;
களிற்றை எதிர்த்தான்; கடும்புலி கொன்றான்;
நெருப்பை மலையில் நிமிர்ந்த கழையின்
உரைப்பிடைக் கண்டான்; உயிரினை ஓம்பும்

செறுப்படை[1] கண்டான்; செழுமையாய் வாழும்
பொறுப்பினைக் கொண்டான்; செம் பொன்னிகர்
[மக்கள்தம்

வாயைத் திறந்து வருமொலி கேட்டபின்
தாயையும், தாய்தரு தன்னருஞ் சேயையும்

கண்டான்; களிகொண்டான்; கைக்குழந்தை
[வாய்மொழியில்
கொண்டான்;பே ரின்பம்! குழந்தை பிறந்தவுடன்
அண்டை அயலில் அழகுத் திருமகனும்
வண்டைப்போல் வாழும் வழிக்கு வகைநினைத்தான்!

அன்பு பிறந்ததுவாம்! அஃதே உயிரியக்கம்!
வன்பென்ற சொல்லே வழக்கழிந்து போகாதோ?
தெம்புக்கோ நல்லுணவு! செஞ்சொல் மனையாட்டி
அம்பொத்த கண்கள் அதனால் விளைந்தனவாம்!
கூரைக் குடிசைக் குழவியின் நல்வாழ்வு
பாரைத் திருத்தும் பணியெனவே ஆண்மை
யுடைய தமிழன் உழைத்தான்; உயர்ந்தான்;
கடைவாய் இளஞ்சிரிப்புக் கைக்குழந்தைப் பூவாயின்
செஞ்சொல்அடைத்தேன் எனமகிழ்ந்தான்;அச்சொல்லை
நெஞ்சில் நினைத்தான்; நிலைபுகழை நாட்ட
ஒலிக்கேற்ற நல்ல உருவை அமைக்கப்
பலகுரலைக் கேட்டான்; பழகுதமிழ்ச் செஞ்சொல்
ஒலிக்குறிப்புக் கேற்ற உருவாம் எழுத்தைக்
கலக்க முயன்றான்; முதல்சாரி பெழுத்தெனும்
முப்ப தெழுத்தே மொழிக்கு முதலென
இப்பா ருலகில் இயம்பினன் என்பேன்!
மொழியின் பிறப்பை, மொழிதரு மூக்கு
வழியின் பிறப்பை வகுத்தான் தமிழன்!
அழகினைக் கண்டான்; அழகின் பெருக்கால்
இளகும் உளத்தின் இயல்பினைக் கண்டான்;
இசைத்தான்; இசையின் இடையே எழுந்த
நசையால், உடலின் நரம்பால் இயங்கிடும்

கைகால் விழியால் கருத்தை விளக்கத்தன்
மெய்ப்படு பாட்டை விளக்கினான்; அஃதே
இயலிசை கூத்தென என்றும் இனிக்கப்
பெயல்பொழி வானாய்ப் பிறர்க்குவந் தீந்தான்![2]
கலையிலா வாழ்க்கை கலையிலா வாழ்க்கை!
கலைப்பயன் இன்பக் கலையின் பெருக்காம்!
கிடைத்ததை உண்டே கிடப்பது வாழ்வின்
மடத்தனம் என்றே மனத்தில் நினைத்தான்;
மனையறங் கண்டான்; மனைக்குறு மாட்சித்
தனிமகள் கண்டான்! தழைத்தது வாழ்க்கை!
முதலில் முளைத்த தமிழன் தனக்கு
முதலிடங் கண்டான்! முளைத்ததே இல்லம்!
புதல்வர் மனையாள் பொருளினைக் காக்க
உதவும் வழியை உளத்தினில் எண்ணி
அறிவைத் துணைக்குப் பலநாள் அழைத்தான்;
நெறியை யுணர்த்தி நெடும்புகழ் நாட்டி
இயக்கி உலகை இயக்கிடும் பண்பால்
மயக்கமில் நன்னெறி வாரி வழங்கி
அரசியல் மக்கள் அகம்புறம் என்னும்
முரசொலி கொட்டி முழக்கித் தமிழன்
கடலினைத் தாண்டிக் கயல்புலி வில்லை
இடமகல் அண்டையர் நாட்டின் இடையிலும்
நட்டான்; தமிழன்மெய்க் கீர்த்தியை[3] நட்டானே!
எட்டுத் திசையும் இசையில் மிதந்த
கிளியாம் கிரேக்கக் கிளியோபட் ராவிற்(கு)
அளித்த கடல்முத்தம் யார்முத்தம்? மற்றும்நல்
தேக்கு மரத்தைத் திரைகடலின் வாயிலாய்ப்
போக்கியது யாராம்? புலிகயல் மீனவனே!

"ஈட்டியின் திண்ணி(து) எழுதுகோல்!" என்பதை
நாட்டினுன் பின்வந்த நாளினில் வால்டரே![4]
"வில்லே ருழவர் பகைகொளினும் கொள்ளற்க
சொல்லே ருழவர் பகை!" எனும் முப்பால்!
"பழகு மிடத்தைப் பகர்க! உன் பண்பை
மொழிவேன்!" எனலே பிரெஞ்சு மொழியாம்![5]
"நிலத்தியல்பால் நீர்திரிந் தற்றாகும் மாந்தர்க்(கு)
இனத்தியல்ப தாகும் அறி(வு)" எனும்இன் குறள்!
வெற்பைக் குடைந்தெடுத்தே மேன்மை அழகுதரு
சிற்பம் படைத்தான்; திகழோ வியமளித்தான்;
கார்வானை முட்டும் கலைகொழிக்கும் கோபுரமும்,
தேரும், செழுந்தாது பொற்சிலையும், கண்கவரும்
ஊரும் தெருவும், உணவூட்டும் நன்செய்க்கே
ஏரியும் தாங்கலும் ஈந்தோன் தமிழனன்றோ?
கோட்டையும் கொத்தளமும், கூழுக்கே ஏங்கா நல்
நாட்டையும் கண்டவன் நற்றமிழன் ஆகானோ?

கற்றோரைப் போற்றிக் கருத்தேற்று நல்லதமிழ்க்
கொற்றம் விளைத்தவன்யார்? கூறுமின்! வாழுமிவண்
மற்றோரும் தன்போல் மதித்து மறம்விளக்கி
வெற்றியை நட்டோனும் மேன்மைத் தமிழனன்றோ?
சங்கம் வளர்த்தான்; தமிழ்வளர்த்தான்; சான்றோர்க்கே
எங்கும் பொருளை இறைத்தளித்துக் காத்தவனார்?
மங்காப் பெரும்புகழ்சேர் மாத்தமிழன் கற்றளி
எங்கும் கிடைக்கிறதே! என்ன இதன்பொருளாம்?
கத்து கடல்தாண்டிப் பாயால் கலம்நடத்தி
முத்தளித்தோன், வீர முரசறைந்தோன் நம்தமிழன்!
பண்பிற் கிலக்கணத்தைப் பாரோர் புகழும்நல்
அன்பிற் இலக்கணத்தை ஆக்கிப் படைத்தே

அரசுக்கு; நல்ல அமைச்சுக்கு, வீர
முரசுக்கு, மூத்த மொழிவழங்கு நல்லிசைப்
பண்ணுக்கு, யாப்புப் பழகுதமிழ்ச் செஞ்சொல்லாம்
எண்ணுக்கு, மெய்யில் எழுகின்ற நோய்பலவாம்
புண்ணுக்கும் மாமருந்தைத் தப்போட்டோன் தமிழனன்றோ?
விண்ணே அவன்புகழ்! மெய்சிலிர்க்கும் பேச்செடுத்தால்!
எண்ண உயர்வில் இவன்போன்றார் இல்லையென்பேன்!
உண்ணும் உணவைப் பகுத்துண்ணச் சொன்னான்!
தமிழ்மறை தந்த தமிழனும் முப்பால்
அமிழ்தைப் பிழிந்தே அளித்த பெரும்புகழ்
ஏசுவை, ஏசு இயம்பிடு கொள்கையைப்
பேசிட வந்தோர் பிறமொழி யாளரே!
செந்தமிழைச், செந்தமிழின் சீர்த்திப் பெருஞ்சிறப்பைத்
தந்தார் உலகினுக்கே தக்கோர்! அவர்க்கெல்லாம்
இந்தநல் வேளை இருகையை நாம்கூப்பி
வந்தனை செய்து வணங்கிப் புகழ்வோமே!
மற்றவர் வாழ வழிவகுத்தான்; இன்பத்தைப்
பெற்றான்; பிறர்க்கு வழங்கினான்; பின்வந்த
சுற்றம் பகைக்கும், துயர்துடைக்கும் நல்லறிவைக்
கற்றுத் தெளிந்து கடல்சூழ் உலகிற்கு
வாரி வழங்கி மகிழ்ந்து பிறர்வாழ
ஊரிற் குழைத்தோன் எவனும்? உயர்தமிழ்
மண்ணில் முளைத்த மறத்தமிழன் ஆகானோ?
உண்மை உரைத்தேன்! உணராதோர் கேட்பின்
நிலவை, விரிவானை, நீள்கடலைத் தாண்டிப்
பலபொருளுங் கண்டோன் பழந்தமிழன் ஆகானோ?
இல்லை எனவுரைக்கும் என்பகைவர் என்நண்பர்
கல்லை மணலைக் கடலலையைக் காணாத

எல்லைக்கு முன்பே முளைத்தான் தமிழனெனும்
சொல்லை மறுக்கத் துணியட்டும்! அன்னோர்கள்

தொல்காப் பியத்தைச் சுவைத்துப்பின் என்முன்னே
சொல்லாட வல்லாரோ, சோர்வடைவ தல்லாமல்?

"நாற்கடல் சூழ்ந்திடு நல்லுல கத்துளே
தோற்றங்கொள் மாந்தர் ஒருதாயின் தோன்றலே!"[6]

ஓதினர் இவ்வா றுலகினில் பின்னரே!
யாதும்நம் ஊரெனல் யாவருங் கேளெனல்

கோதில் தமிழன் பழம்பெருங் கொள்கையாம்!
ஆதித் தமிழன் அறிவின் முதிர்ச்சியே!

வெள்ளையன் கீழே அடிமை விலங்கேற்றுச்
சள்ளை யடைந்த தமிழினத்தைத் தன்னாட்சி

காக்க முனைந்துபின் கைவிட்ட காலத்தில்
காக்க முனைந்தோன் எவனும்? கடலில்

எழுந்த இளம்பரிதி எம்மறிஞர் அண்ணா
பழந்தமிழர் கண்ட படைமறவன் ஆகானோ?

முன்னர் முளைத்தான் தமிழன்! அவன்வாயில்
முன்னர் முளைத்த ஒலியே தமிழாம்!

எனக்கூறி இங்கே இருக்கும் புலவர்
மணிக்கவிதை கேட்போம் மகிழ்ந்து!

முடிவுரை

(எண்சீர் விருத்தம்)

எவ்வுலகத் தமிழர்களும் இன்றிங் கிந்நாள்
 எதனாலே சூழ்ந்தார்கள்? தமிழின் மாட்சி!
செவ்வரங்கத் திருமாலும் கணிகண் ணன்வாய்ச்
 செந்தமிழுக் கடிமையெனும் செய்தி கேட்டோம்!

இவ்வரங்கில் மலைமுகட்டில் வடித்தெடுத்த
ஐயிருவர் தேன்சுவைத்தோம்! இனிமை யாமே!
ஒவ்வொருநா ளுந்தமிழை ஓம்பிக் காக்க
உலகிடையே ஒண்டமிழே உலவு மாமே!

○

நாள்: 8-1-1968.

இடம்: சென்னைப் பூம்புகார்த் திடல்—இரண்டாவது உலகத் தமிழ் மாநாட்டுக் கவியரங்கம்.

தலைவர்: புதுமைக் கவிஞர் வாணிதாசன்.

தலைப்பு: தமிழன்.

1. செறுப்படை—வயலை உழும் கருவி.

2. பிறர்க்கு+வந்து+ஈந்தான் எனவும், பிறர்க்கு+உவந்து+ஈந்தான் எனவும் பிரித்துப் பொருள் கொள்க.

3. உண்மைப் புகழ் எனவும், அரசரது புகழ் எனவும் பொருள் கொள்க.

4. பிரெஞ்சு அறிஞன்.

5, 6. பிரெஞ்சுப் பழமொழிகளின் தமிழாக்கம்.

# 15. கவிதை

## வாழ்த்து

(கலித்துறை)

உலகு தோன்றிட உயிரினம் தோன்றிட உயிரை
இலகு வான்வழி எழுகதிர் கால்மழை எழவே
அலையெ ழுந்துமே அழித்திட எண்ணியும் அழியா
மலைபி றந்தசெந் தமிழைநாம் வணங்குவம் மகிழ்ந்தே!

## அவையடக்கம்

(அறுசீர் விருத்தம்)

அலைகடற் சங்கின் ஓசை
ஆலைகள் ஆர்க்கும்; நீண்ட
மலையென மாடக் கூடம்
வானினை முட்டும்; மக்கள்
கலைபயில் சாலை யெங்கும்
தமிழிசை காதிற் கேட்கும்;
சிலையெலாம் பூங்கா நிற்கும்
திருநகர் புதுவை மூதூர்!

செல்வர்கள், வணிகர், கற்றோர்
திருத்தொண்டின் விளைவி னாலே
நல்லதோர் தமிழ்ச்சங் கத்தை
நாட்டினர் புதுவை; ஆட்சி
வல்லுநர் சீலம்[1] சங்கம்
வளர்ந்திடத் திறந்து வைத்தார்!
பல்லாண்டு வாழ்க வென்றே
பாட்டினால் வாழ்த்தி னேனே!

சங்கத்துக் கவிய ரங்கின்
தலைமையை ஏற்கும் மூன்று
சங்கத்துத் தமிழே! சூழ்ந்த
தமிழர்காள்! கவிதை பாடி
இங்குளோர்க்(கு) அமிழ்த ளிக்க
இருக்கின்ற கவிக்கூட் டங்காள்!
உங்களை வாணி தாசன்
உளமார வணங்கி னேனே!

கவிஞரும் கவிதையும்

மண்ணில்வாழ் மாந்தர்க் கெல்லாம்
வழங்கிடும் இயற்கை யன்னை
கண்வழி அழகைத் தேக்கிக்
களிப்பினில் ஆழ்த்து கின்றாள்!
கண்வழி கண்ட காட்சி
அழகினில் மறந்து கண்ட
வண்ணமே தானு மாகி
வாழ்பவர் கவிஞர் ஆமே!

கவிஞரின் உள்ளங் கண்ட
காட்சியின் உணர்ச்சி வெள்ளம்
புவியினுக் கழகு செய்யும்
புதுப்புனல் ஆற்றைப் போலக்
கவிஞரின் உணர்ச்சி, செஞ்சொல்,
கற்பனை, இசை,யாப் பென்னும்
சவியுறு மொழியால் இன்பம்
தருவது கவிதை ஒன்றே!

மொழியினுக் குருவங் காண
முற்படாக் காலந் தொட்டே
மொழியினில் உணர்வு தோன்ற
முகிழ்த்ததே கவிதை! வாழ்க!

வழிதந்து, வளத்தைத் தந்து
மனவிருள் ஓட்டு கின்ற

மொழிதந்த மூத்த பிள்ளை
முன்னோர்கள் கவிதை யாமே!

கற்பவர் மனத்தை யீர்த்துக்
களிப்பினில் மூழ்க டித்துச்

சொற்பொருள் மனக்கண் முன்னே
தோன்றிடச் செய்ய வல்ல

பொற்புடைச் செல்வம் செஞ்சொற்
புலவர்நாப் பிறந்த செல்வம்

கற்பனைக் கவிதைச் செல்வம்
கலைவளர் செல்வ மாமே!

உலகத்தின் இருளைப் போக்கி
உயர்ந்தவர் தொழுது போற்ற

அலைகட லுலகம் வந்த
அருஞ்சுடர்ப் பரிதி ஒக்கும்

விலையிலாக் கவிதை காலம்
வென்றென்றும் நிலைத்தி ருக்கும்!

தலைமுறை பலசென் றாலும்
தனிக்கவி மறைவ துண்டோ?

## குரவைப் பாடல்

வட்டமாய்ப் பெண்கள் கூடி
வளைந்துபின் நிமிர்ந்து சாய்ந்து

தட்டுவர் தத்தம் கையைத்!
தமிழிசை மலைத்தேன் போலச்

சொட்டிடும்; உளத்தில் தோய்ந்த
உணர்ச்சியின் தூய இன்பம்

மட்டின்றித் தோன்றும்! அஃதே
மாத்தமிழ்க் குரவைப் பாடல்!

### வரிப்பாடல்

குளிர்பூத்த முற்றம், செங்கண்
குயில்கூவும் சோலை, ஆறு,
தளிர்பூத்த மலையின் சாரல்,
தனியிடம் கலந்தோர் நெஞ்சம்
களிபூத்த வேட்கை யாலே
கண்பூக்கக் கவிதை பூக்க
அளிபூத்துக் கருத்து மாற்றம்
அடைவதே வரிப்பாட் டாமே!

### அகப்பாடல்

மின்வந்த இடையார் கண்டு
வேல்பாய உணர்வும் பாய
முன்வந்த நிலவுக் கன்னி
முல்லைப்பல் தெரிதல் கண்டே
பொன்வந்த வறியோன் போன்ற
புலிப்போத்தின் உளத்தின் போக்கைப்
பின்வந்த தனித்த பாடல்
பிழிந்தூட்டும் அகப்பாட் டாமே!

### புறப்பாடல்

(எண்சீர் விருத்தம்)

செல்லேந்து கிழக்குவான நிறத்துச் சேவல்
சிறகடித்துக் காலுயர்த்தி மோதக் கண்டும்
மல்லேந்து தோளுடையார் இளைஞர் கூட்டம்
மன்றத்துப் பெருவெளியில் கூடிக் கூடி
வில்லேந்து கையரொடு வில்லை ஏந்தி
விளையாடிப் போர்ப்பயிற்சி செய்யக் கண்டும்
சொல்லேந்து நாவுடையார் கவிஞர் உள்ளம்
தோன்றியதே புறப்பாடல்! அறத்துப் பாடல்!

முறச்செவிகொள் காட்டானை முன்னர் நீண்ட
முத்துவிளை தந்தத்தை ஒடித்து வீழ்த்தும்
மறச்செயலை, வாள்வீச்சை, வாரித் தந்த
மன்னவர்கள் கொடைவளத்தைப், போர்க்களத்துப்
புறச்செயலைப், போர்முகத்தே தனித்த வீரன்
புண்பட்ட பெருந்தோளை, மக்கள் வாழ்வின்
அறச்செயலைப், பெரும்புகழைச் சுட்டிச் சுட்டி
அறிவுறுத்த எழுந்தவெலாம் புறப்பாட் டாமே!

### கதைப்பாடல்

மனையிருந்து வாழுகின்ற மக்கட் கூட்ட
வாழ்க்கையிலே நிகழுகின்ற இன்ப துன்பம்
வினையிருந்தே விளைவதெனை விளக்க, மக்கள்
மேன்மையுற வேண்டுமென்ற வழியைக் காட்டப்
பனையிருந்து இறக்குகின்ற பதநீர் போலப்
பலகவிதைப் பெருவளத்தைக் கவிஞர் செஞ்சொற்
சுனையிருந்து மக்கட்குத் தொகுத்துத் தந்த
தூயதமிழ்க் கவிதைகளே கதைப்பாட் டாமே!

தென்னகத்தை அரசாண்ட வேந்தர் மூவர்
செந்தமிழைக் காத்தார்கள்! அதனு லன்றோ
முன்னாளில் பலதுறையில் வானில் பூத்த
முழுநிலவாய்த் தமிழன்னை இனிமை தந்தாள்!
பின்னாளில் படையெடுப்பால் அழிந்தாள் என்றே
பேசுகின்றார் ஒருசாரார்! தமிழைக் காத்தோர்
எந்நாளில் குறைந்தார்கள்? தமிழுக் கென்றே
இருந்தார்கள்; இறந்தார்கள்; இருப்பார் தாமே!

பாரதியும், பாரதியும், அவர்க்குப் பின்னர்ப்
பாட்டிசைத்த சுந்தரமும், திரு.வி. க.-வும்,[3]
காரகிழித்த ஞாயிறெனப் புதுவை தோன்றிக்
கற்றோரின் மற்றோரின் உள்ளக் கோயிற்

சீர்மிகுத்து நிற்கின்ற என்றன் ஆசான்
பாவேந்தர்[4] செந்தமிழும், கவிதை ஊற்றும்
ஊரறியும் பெருங்கவிஞர்! அவர்கள் தந்த
ஒப்பில்லாக் கவிதைகளை அறியும் நாடே!

காவேந்து மலர்மொய்க்கும் வண்டைப் போலும்,
கதிர்வரவை இசைக்கின்ற சிட்டைப் போலும்,
மாவேந்து கனிகோதும் குயிலைப் போலும்,
வான்பறந்து பாடுகின்ற புள்ளைப் போலும்
சாவேந்து நாள்வரையில் ஈன்ற அன்னைத்
தமிழ்மொழியை எம்வாழ்வை என்றன் ஆசான்
பாவேந்தர் தமிழ்க்கவிதை முறைபின் பற்றிப்
பாடுகின்ற இளங்கவிஞர் பலருள் ளாரே!

வான்பிறந்த பின்னரே மலையும் காடும்
மறிகடலும் மன்னுயிரும் பிறந்த தென்றே
தேன்பிறந்த செஞ்சொல்வாய் அறிஞ ரெல்லாம்
செப்புகின்றார்! நல்லசைசீர்க் கவியென் கின்ற
நான்பிறந்த பின்னரன்றே இசையாற் கூத்தால்
நல்லகதை கட்டுரையால் நாட்டு மக்கள்
ஊன்பிறந்த இன்பத்தை வாரி வாரி
உலகிற்கே ஊட்டுகின்றார்! மறுப்பார் உண்டோ?

என்பாடல் பழம்பாடல்;[5] கிழமைப்[6] பாடல்;
எழுகின்ற பாடலெலாம் இளநீர்ப் பாடல்!
முன்பாடல் வழிவகுத்த என்றன் ஆசான்
முத்தமிழின் பாவேந்தன் அளித்த யாவும்
தென்பாங்குத் தேன்பாடல்; உலகோர் போற்றும்
செந்தமிழின் அமிழ்தளிக்கும் தெவிட்டாப் பாடல்!
பின்பாடல் நான்பாடி அவையி ருந்தே
பிரிகின்றேன்! என்நன்றி! வணக்க மாமே!

நாள்: 28-1-1968.

இடம்: புதுவை நகர மன்றம்—புதுவைத் தமிழ்ச் சங்கத் தொடக்க விழாக் கவியரங்கம்.

தலைவர்: தஞ்சைப் புலவர் திரு. ந. இராமநாதன்

தலைப்பு: கவிதை.

1. புதுவை மாநில ஆளுநர் மேதகு சீலம்.

2. செல்-மேகம்.

3. தேசிய கவி சுப்பிரமணிய பாரதியார், நாவலர் சோமசுந்தர பாரதியார், பேராசிரியர் சுந்தரம் பிள்ளை, திரு. வி. கலியாணசுந்தரனார் ஆகியவர்களைக் குறிக்கும் பெயர்ச் சுருக்கங்கள்.

4. பாவேந்தர் பாரதிதாசன்.

5. பழத்தைப் போன்ற பாடல்; பழமையாகிய பாடல்.

6. தலைமை, உரிமை.

# 16. பாரதியும் பாரதிதாசனும்

## ஆன்றோர் வாழ்த்து

(அறுசீர் விருத்தம்)

காரமிகு குறிஞ்சி முல்லை
 கவின்மிகு மருதம் நெய்தல்
சீர்மிகு தமிழ கத்தின்
 செயல்மிகு வீரர்க் கெல்லாம்
கூர்மிகு படைகள் ஏந்திக்
 குலமிகு தமிழை முன்னாள்
பார்மிகு அரசி யாக்கிப்
 பண்மிகக் காத்தார் வாழி!

வான்தொடு மாடக் கூடம்
 வயல்தொடு செந்நெற் குன்றம்
தேன்தொடு மலையின் சாரல்
 திசைதொடு கரும்பு தென்னை
கான்தொடு நீண்ட ஆறு
 கடல்தொடு கலங்கள் கண்டோர்
மான்தொடு விழியார் மாற்றார்
 மயக்கினர் தமிழ கத்தை!

விழியினிற் கலப்புக் கண்டோம்;
 வீரத்திற் கலப்புக் கண்டோம்;
மொழியினிற் கலப்புக் கண்டோம்;
 முறையினிற் கலப்புக் கண்டோம்;
வழியினிற் கலப்புக் கண்டோம்;
 வாழ்க்கையிற் கலப்புக் கண்டோம்;
குழியினில் வீழ்ந்தோம்! மாற்றார்
 குடியேறி விட்டார் நாட்டில்!

மலைதாண்டி வந்தோர், கத்தும்
மறிகடல் தாண்டி வந்தோர்
அலைதாண்டித் தாண்டி வந்தே
அரசினை அமைத்துக் கொண்டார்!
விலைதாண்டும் உயிரின் மேலாம்
செந்தமிழ் மேன்மை யெல்லாம்
கொலைதாண்டிச் சுடரை வீசும்
குடவிளக் கான தந்தோ!

பாமன்னர் வாழ்வில் தோன்றிப்
பாரெலாம் இசைப ரப்பி
மாமன்னர் மடிவ ளர்ந்த
மங்காத தமிழோ எங்கோ
நாமன்னர் சில்லோர் போற்ற
நாட்டினைத் துறந்து சென்ற
காமன்னர் போல வாழ்ந்து
காலத்தைக் கடத்திற் றந்தோ!

கடமையை நன்கு ணர்ந்த
கற்றறி மேலோர், தொண்டர்
அடிமையை வீழ்த்த நாட்டில்
அறப்போரைத் தொடங்க லானார்!
மடமையைக் கண்டு சீறிப்
பாரதி உள்ளம் நொந்தார்;
படைவாளாம் கவிதை ஏந்தித்
தமிழர்கள் பக்கம் நின்றார்!

பாரதி கனலைக் கக்கும்
பாடல்கள் எழுதித் தந்தார்;
ஊரதில் வாழும் மக்கள்
உளத்தினில் உணர்வு வீரம்

சேர்ந்திடும் எளிமை மிக்க
செந்தமிழ்க் கவிதை யாத்துக்
காரென முழக்கஞ் செய்தார்!
காளைகள் எழுச்சி பெற்ருர்!

பிறப்பினில் அன்னோர் பார்ப்பார்!
பேடியை முறைத்துப் பார்ப்பார்!
முறையிலாச் சாதி பேதம்
முளைத்திட்ட மூடக் கொள்கை
குறைத்திடப் பார்ப்பார்! நல்ல
கொள்கையின் வழியைப் பார்ப்பார்!
அறத்தினைப் பார்ப்பார்! என்றும் ·
அதன்வழி நடந்தே பார்ப்பார்!

சிந்துக்குத் தந்தை; நல்ல
சிறுசிறு கதைப்பா டல்கள்
தந்தவர்; சங்க காலத்
தமிழெங்கோ புலவர் மாட்டு
முந்தைய பாட்டன் சொத்தாய்
முடங்கியே கிடக்கக் கண்டு
நொந்தவர்; வாரி மக்கள்
செவியெலாம் நுழைத்த செம்மல்!

காட்டினிற் குயிலின் பாட்டைக்
கேட்டவர் கசந்தா போவார்?
வீட்டினிற் கனக சுப்பு
விருந்தினர் ஆனார்! நல்ல
பாட்டினை அவரைப் போலப்
பாடவும் தொடங்க லானார்!
மீட்டிடும் யாழின் ஓசை
வெளியெலாம் நிறைந்த தன்றே!

(நிலைமண்டில ஆசிரியப்பா)

பல்லோர் இருந்தனர் பார்த்தனம்! ஆயினும்
எல்லோரும் பாரதி தாசனு ராவரோ?
பாரதி தாசனார் பைந்தமிழ்ப் பாமன்னர்!
ஊரதில் இனிமேல் பிறப்பார் உண்டோ?
தலையினைத் தாழ்த்தாத் தமிழ்மகன்! தமிழின்
நிலையினை உயர்த்திய நெடியோன்! குறிஞ்சி
வேர்ப்பலா! தமிழ்த்தும்பி! மெல்லிசை யாழாம்!
நேர்மை நெறியன்! நெடிய தோளன்!
துள்ளிக் குதித்துத் தொடுவான் எழுந்து
பள்ளி எழுச்சியைப் பாடிய விடிமீன்!
கண்ணை மலர்த்தும் கமழ்பூங் காற்று!
விண்ணை மலர்த்தும் விடியல்! தமிழால்
பண்ணை வழங்கும் படர்கிளைப் பூங்குயில்!
எண்ண இனிக்கும் சங்க இலக்கியம்!
இத்தனை சேர்ந்த எழிலார் திருவுரு
அத்தன் பாரதி தாசன் அமைவே!
இன்னுங் கேட்பீர் என்னரும் மக்காள்!
மன்னிய உலகின் மாத்தமிழ் வேந்தன்!
அகம்புறம் தந்த அழகுத் தமிழின்
புகுமுகம் காட்டிய புலவர் பெருமான்!
அகச்சுவை நகைச்சுவை அளித்த வள்ளல்!
பகைக்கெறி யீட்டி! பாவலர் ஏறு!
மலைகடல் காடு மறிகடல் வானில்
இலகிய அழகை உலகிற் கியம்பும்
அழகின் சிரிப்பு! பழகு செந்தமிழ்
உழவர் பெருந்தகை! சொல்லே ருழவர்!

நெஞ்சில் இனிக்க நேர்மை நினைக்க
அஞ்சா தூக்கும் அறம்பயில் கூடம்!
கொடுமை கண்டாற் கொடுவாள் தூக்கும்
கடமை மறவன்! களப்போர் மன்னன்!
பிள்ளை உள்ளம்! பிறர்துயர் காணில்
வள்ளல் மாமழை! வான்கதிர் ஒளியாம்!
செயற்படு செம்மல்! செந்தமிழ்ச் செம்மல்!
கயற்படு விழியார் கைம்மை விலக்க
நாட்டில் உழைத்த பாட்டுப் புலவன்!
வீட்டில் நிறைந்த இருளை விலக்கக்
குடும்ப விளக்கைக் கொளுத்திய மேதை!
கடும்பகை எதிர்ப்பினும் கலங்கா நெஞ்சன்!
புதுவைக் கவிப்புலி! புலமைக் கவிப்புலி!
இதுவரை தவழா இனமலர்த் தென்றல்!
பாடித் திரிந்த பைங்குயில்! பாவலர்
தேடித் திரிந்த செந்தமிழ் ஆசான்!
இருண்ட வானி னிடையே தோடுவான்
சுருண்ட அலைகடல் தோன்றிய பரிதி!
'உடலுயிர் தமிழும் நான்'என் றுணர்ந்தே
நடந்தோன்; வாழ்நாள் முழுமையும் நடந்தோன்!
இளைஞர் உளத்தே எழுதா ஓவியம்!
கிளைஞர் உளத்துக் கீழ்த்திசை வானம்!
உரம்பெறு நெஞ்சினர்! ஊரிற் சிங்கப்
பரம்பரை கண்டோன்! பாவின் வேந்தே!
ஊனில் உயிரில் உடலில் இனிக்கும்
தேனும் செந்தமிழ் உலகுக் களித்தோன்!
சங்கத் தமிழும் தமிழின் மேன்மையும்
மங்கா திருக்க வழிவகை செய்தோன்!

பெற்று வளர்த்துப் பேணிய தமிழக
வெற்றி முரசவன்! வீரர்வாய்ச் சங்கம்!

படிக்கப் படிக்கப் பண்பை விளக்கும்
அடிதளை சீரொடு அணிநிறை காவியம்!

மொழிமுதல் ஆசான்! மூண்ட புரட்சி
வழிமுதல் ஆசான்! வாழ்நாள் முழுதும்

இயலிசை கூத்தை இலமறை காயாம்
மயல்நிறை இலக்கண மாண்பை விளக்கிப்

பின்தன் பரம்பரை பேணி வளர்த்த
என்கவித் தந்தை; எழுச்சிப் பாவலன்;

இன்றிலை! நெஞ்சில் எரிபுகுந் ததுவே!
இன்றிந் நாட்டில் இருக்கும் மக்கள்

நெஞ்சில் நிலைத்து நினைவில் சிரித்துச்
செஞ்சொற் பாடிச் சிறக்கின் றனனே!

### நன்றி

எண்மூன்றும் இரண்டும் சேர்ந்த
கவிஞர்கள் இனிய செந்தேன்
பண்கூட்டி இசைத்தார்; கேட்டோம்;
பால்பழம் சுவைத்தோம்! நன்றி!
விண்கூட்டும் பரிதி போல
மேன்மேலும் கவிதை பாடி
மண்கூட்டும் புகழைத் தேக்கி
வாழ்கபல் லாண்டு நீடே!
என்பாட்டைக், கவிஞர் ஐவர்
இசைத்திட்ட பாட்டை யெல்லாம்
முன்கேட்ட புதுவை மூதூர்
அறிஞர்காள்! முடிவில் என்றன்

பின்பாட்டால் உங்கட் கெல்லாம்
　　　　பெருநன்றி முதலிற் கூறி,
என்னிரு கைகள் கூப்பி
　　　　இங்கும்மை வணங்கி னேனே!

○

நாள்: 29-4-1968

இடம்: செஞ்சிச்சாலைத் திருமண மண்டபம்—புதுவைத் தமிழ்ச் சங்கம் நடத்திய பாரதிதாசன் பிறந்தநாள் விழாக் கவியரங்கம்.

தலைவர்: புதுமைக் கவிஞர் வாணிதாசன்.

# 17. கலைஞர்

## தமிழ் வாழ்த்து

(கலிவிருத்தம்)

வானெழுந்த நீள்கதிரும் மாக்கடலின் வீச்சும்
ஏனெழுந்த தென்றெதுவும் எண்ணமிடா நாளில்
தேனெழுந்த செந்தமிழே! நீயெழுந்தாய்! வாழி!
நானெழுந்து வாழ்த்துவதோ? வாழ்த்திடுவோம் நாமே!

## அவையடக்கம்

(அறுசீர் விருத்தம்)

அலைகடல் முழக்கும்; புன்னை
அடர்கிளை பொன்னைச் சிந்தும்;
சிலைவிழி நெய்தல் நீண்ட
கழியிடைச் சிரிக்கும்; பெண்கள்
கலைபயில் கூட மெங்கும்
சிலம்பொலி காதிற் கேட்கும்!
புலவர்கள் உலகுக் கீயும்
புதுமையால் புதுவை யாமே!

தேன்கவித் தமிழ்ச்சி றப்பைப்
பாரதி தாசன் சேர்த்தார்!
ஆனந்த ரங்கப் பிள்ளை[1]
தேசிகப் பிள்ளை[2] அன்னோர்
வானென இருந்தே என்றும்
மாத்தமிழ்ப் புகழைக் காத்தார்!
ஆனதால் புதுவைக் கென்றும்
பெரும்புகழ் ஆட்சி உண்டாம்!

சீர்மிகு புதுவை மக்காள்!
செந்தமிழ்ச் சிறுவ ரேறே!
கார்மிகு வானை மாற்றும்
கலைநிறை தாய்க்கு லத்தீர்!
போர்மிகு போழ்தும் அஞ்சிப்
புறமிடாப் புலிகாள்! வாழும்
ஊரறி வாணி தாசன்
உமைமுதல் வணங்கி னேனே!

சுந்தரக் குமரச் செம்மல்[3]
துறைதோறும் நுணுகி ஆய்ந்த
பைந்தமிழ்ச் செம்மல்! கற்றோர்
பழகுதற் கேற்ற செம்மல்!
இந்தநாள் ஈடே யில்லா
இலக்கணச் செம்மல்! பாட
வந்துளோர் செம்மல்! வாணி
தாசன்நான் வணங்கி னேனே!

(கலிவெண்பா)

என்னில்லாள், பூவா எழில்முல்லைப் பல்லில்லாள்
முன்னர் எழுந்து முழுக்காடிப் பூச்சூடி
வந்தாள் எனையெழுப்ப! வந்ததுவே பூமணமும்!
'எந்தநாள், எவ்வேளை என்ப தறியாமல்
தூங்குவது தானு தொழில்?' என்றாள்! என்செய்வேன்?
மாங்குயில் இன்னிசையை வாரி வழங்கையிலே
தீங்கென்று யார்சொல்வார்? செய்வ தறியாது
'மாங்கனியே!' என்றேன் நான்; வாயிற்பல் இல்லையென்றாள்!
'ஓங்கு விடைவந்த ஞாயிறே! ஒள்வானம்
தாங்கும் இருளகற்றுந் தண்மதியே! என்போன்றோர்

வாழ வகையென்ன?' என்றாள்! 'வளர்கலைகள்
சூழும் உலகைச் சுவைத்துப்பார்!' என்றேன் நான்!

'அத்தான்! அதைத்தானே கேட்கின்றேன்! அவ்வுலகப்
பித்தேறி நல்வாழாப் பேரிழப்பே வாழ்வினது

சொத்தாகும்!' என்றிங்கே சொல்கின்றார் பெண்களெலாம்!
புத்தம் புதிய கலையை விளக்(கு)' என்றாள்!

'என்ன தருவாய் எனக்(கு)?' என்றேன்! நாணிப்பின்,
'முன்னர்க் கலையின் முடிச்சை அவிழ்த்துவிடும்'

என்றாள்; சிரிப்பொலியை எங்கும் நிறைத்தாளே!
'பொன்னே! புதுநிலவே! பூவே! புகலக்கேள்:

பூவெல்லாம் உன்னிடத்தில் பூத்திருந்தும் பூத்தேடக்
காவில் நுழைகின்றாய் கார்மயிலே! உன்றன்

கலையாக் கலையை மணம்நாறும் தென்றல்
குலைக்க அதன்மீது கோபமா கொள்கின்றாய்?

துன்ப வுலகின் தொடர்பற்று நெஞ்சத்தில்
இன்ப வுணர்வை எழுப்புவதே நற்கலையாம்!

ஆசை மனையாட்டி! ஆன்றோர் கலைகளெலாம்
பேசும்நல் வாழ்வடையும் பேறு!

(எண்சீர் விருத்தம்)

சிலைபிறக்க வழிசெய்யும் கொல்லர் கூடம்;
செய்தொழிலில் யாவருமே சிறப்ப தில்லை!
அலைபிறக்க வழிசெய்யும் காற்றே; ஆனால்
அக்காற்றின் நலந்துய்ப்போர் சிலரே ஆவர்!
கலைபிறக்க வழிசெய்யும் கருத்தும் கண்ணும்;
காண்கின்ற கண்களெலாம் கலையுண் டாக்கா!
தலை[1] பிறக்க வழிசெய்யும் புதுமை ஆற்றல்!
தருமின்ப உணர்வெழுச்சி, கலையின் ஊற்றே!

மண்ணகத்தே வாழ்கின்ற மக்க ளெல்லாம்
வாழ்நாளில் தமைச்சுற்றி வாழு கின்ற
விண்ணகத்து முழுநிலவு, பொன்போற் பூத்த
விரிவான உடுக்கூட்டம், இடுக்கிற் பாயும்
பண்ணகத்தே கொண்டிருக்கும் ஓடை, செங்கண்
பழங்கோதும் கருங்குயில்கள், செக்கர் வானம்
கண்ணகத்தே நிலைநிறுத்தும் திறமை பெற்றோர்
நல்வாழ்வின் பயன்நல்கும் கலைஞர் ஆமே!

கார்மோதும் மலைகுடைந்து, குடைவுக் குள்ளே
கண்கண்ட எழுச்சிதரு பொருளை யெல்லாம்
தார்மோதும் நீள்வாழை முதிராப் பிஞ்சாம்
தச்சர்கை உளியெடுத்தே அழகுண் டாக்கி
நீர்மோதும் கடல்மல்லைக் கரையோ ரத்தே
நிலைநிறுத்தி வைத்தவர்யார்? சிற்பி யன்றோ!
சீர்மோதும் வாழ்விற்குப் பயனை நல்கும்
செழுங்கலைஞர் இல்லையெனில் கைக்கும் வாழ்வே!

எண்ணத்தைக் கவர்ந்திழுத்து நெஞ்சிற் குள்ளே
இன்பவெறி ஊட்டுகின்ற உணர்வுண் டாக்க
வண்ணத்தைக் குழைத்தெடுத்தே எண்ணெய் கூட்டி
மறிகடலை, மலைமுகட்டை, மயிலாட் டத்தைக்
கிண்ணத்தை எடுத்துப்பால் குழவிக் கூட்டும்
கிழவியரும் சுவைப்பதற்கு மாடத் துள்ளே
சுண்ணத்தைப் பூசிவைத்த சுவரில் தீட்டும்
ஓவியர்கள் துணையின்றேல் துயர்மா றுதே!

சிற்றூரில் விழாவென்றார்; தெருக்கள் நான்கு
சேருகின்ற இடத்தினிலே தெருக்கூத் தென்றார்!
முற்றத்தில் படுத்திருந்த நானும் சற்று
விழித்தெழுந்து முன்போனேன்; திரைவி லக்கிப்

பெற்றெடுத்த குழவியுடன் ஒருத்தி வந்தாள்!
    பெண்! பெண்! பெண்! பெண்ணேதான்! மாற்றமில்லை!
சற்றிருந்தேன்; பின்சென்றேன்; ஆணைக் கண்டேன்!
    தலைமாற்ற ஒப்பனையை நேரிற் கண்டேன்!

அன்றொருநாள் கலைநிகழ்ச்சி ஈன்றூர் என்றன்
    அயலகத்து நட்டுவனார்! கொட்ட கைக்குச்
சென்றிருந்தேன்; திரைவிலக அரங்கின் மீது
    செழுங்குன்ற மயிலாடக் கண்டேன்; தோகை
நின்றுவிரித் தாடிமயில் அகவக் கேட்டேன்;
    நிலைமறந்தேன்; ஊனகத்து நினைப்பில் நின்றேன்;
மன்றாடு இளைஞனை நான் காண வில்லை;
    மயில்கண்டேன்! நற்கலைஞர் மாட்சி என்னே!

அழியாது நிலைத்திருக்கும் தமிழ கத்தின்
    அழகுதிருக் குளங்கோயில்! கோயில் மீது
செழியன்நீள் புகழ்போலக் கோபு ரங்கள்;
    சிற்பங்கள்; ஆயிரங்கால் மண்ட பங்கள்!
ஒழிவின்றிப் பல்லாண்டாய்க் கலைஞர் தந்த
    உழைப்பன்றோ நாம்வாழும் வீடும் நாடும்?
மொழியாதோ அவர்புகழை இடிந்த கோட்டை?
    முதற்கலைஞர் இல்லையெனிற் குடிசை யுண்டோ?

சேலாடும் குளத்தினையும், குளத்திற் பூத்த
    செவ்வல்லிச் சிரிப்பினையும், பூத்த பூக்கள்
மேலாடு வண்டினையும், முரற்றும் இன்ப
    மெல்லிசையும் கண்முன்னே நிறுத்திக் காட்டி
நூலாடும் வரிகளிலே சொல்லால் தீட்டி
    நூறுமுறை அறையிருந்தே சுவைக்கச் செய்யும்
பாலாடும் சுவைக்கவிதைக் கலைஞர் தம்மைப்
    பண்பாடும் கலைஞரெனப் பகர லாமே!

மருந்தளித்து நோய்தீர்ப்பார் மருத்து வர்கள்;
மனநோயை அன்னவரால் நீக்கப் போமோ?
விருந்தளித்து நோய்தீர்ப்பார் உழவர்; நாட்டில்
வேட்பாளர் வாக்குக்கு மிகுபொய் சொல்வார்;
திருந்துதற்குத் தாம்கற்ற கல்வி கொண்டு
சீர்திருத்தக் காரரீநல் லறிவைச் சொல்வார்;
பொருத்தமுறக் கதைகட்டிச் சமயச் சான்ருேர்
புளுகிடுவார்; இவரெல்லாம் கலைஞர் ஆமோ?

கோளுக்குக் கோளனுப்பும் இந்த நாளும்,
கும்மிருட்டில் வாழ்ந்திருந்த அந்த நாளும்
நாளெல்லாம் உழைத்துழைத்து நலிவை ஏற்று
நடைமுறைக்குத் தேவையான பொருளை யெல்லாம்
தோளுழைப்பைத் தொழிலாளர் தருகின் ருர்கள்;
துயர்மாற்றம் கண்டதுண்டோ? உழைத்து ழைத்தே
தோளயர்ந்து மனமயர்ந்து துடிக்கும் போழ்தில்
துயர்மறக்கச் செய்வதியார்? கலைஞர் அன்ருே?

அணிசெய்வோர், உழவுசெய்வோர், புளித்த மண்ணை
அள்ளிவைத்து வனைந்தேமண் பாண்டம் செய்வோர்,
மணிசெய்வோர், வாழுகின்ற மக்கட் கூட்டம்
மானத்தைக் காத்துடலை மறைக்கச் செய்யும்
துணிநெய்வோர், ஆடையினைத் தூய்மை செய்வோர்,
துயருக்கு மாமருந்தாய் எந்த நாளும்
பணிசெய்வோர் நற்கலைஞர்! அவர்கள் இன்றேல்
பாருலக வாழ்க்கையென்றும் பண்ப டாதே!

கலைஞரைநாம் போற்றிடுவோம்; அவர்கள் இன்றேல்
கார்சூழ்ந்த வானம்போல் தோன்றும் வாழ்க்கை!
கலைஞரைநாம் போற்றிடுவோம்; அவர்கள் இன்றேல்
கருத்தூட்டம் மக்களினம் அடைவ தில்லை!

கலைஞரைநாம் போற்றிடுவோம்; அவர்கள் இன்றேல்
கைப்புக்கு மாமருந்து கிடைக்கா தென்றும்!
கலைஞரைநாம் போற்றிடுவோம்; அவர்கள் இன்றேல்
வாழ்க்கையிலே களிப்பென்றும் காணப் போமோ?

○

நாள் : 14-7-1968.

இடம் : புதுவைக் கல்விக் கழக 42வது ஆண்டு நிறைவு விழாக் கவியரங்கம்.

தலைவர் : இலக்கணச் செம்மல், வித்துவான், திரு. சு. குமாரசாமி செட்டியார்.

தலைப்பு : நல்வாழ்விற்குப் பயன்படுவதில் மிக்கார்—கலைஞர்.

முன்னிலை : சென்னை மகாவித்துவான் திரு. மே. வீ. வேணுகோபாலப்பிள்ளை, புதுவை மொழியாக்கச் செல்வர் திரு. இரா. தேசிகப்பிள்ளை, பாராளுமன்ற உறுப்பினரும் புதுவை நகர மேயருமான திரு. ந. சேதுராமச் செட்டியார், புதுவைக் கலைக்கழகப் பிரெஞ்சு மொழிப் பேராசிரியர் திரு. குரோ.

1. பிரெஞ்சாட்சியில் மொழிபெயர்ப்பாளராகத் திகழ்ந்தவர்; உயரிய நாட்குறிப்பு எழுதியவர்.

2. புதுவை மொழியாக்கச் செல்வர் திரு. இரா. தேசிகப்பிள்ளை.

3. இக்கவியரங்கத் தலைவர், இலக்கணச் செம்மல், புதுவை வித்துவான் திரு. சு. குமாரசாமி செட்டியார்.

4. தலை-பெருமை.

# 18. புதிய நடை

(நேரிசைக் கலிவெண்பா)

கத்து கடலுடுத்த தென்னகத்தில் கற்ருேன்றிப்
புத்தம் புதிய மணல்தோன்றி—நித்தநித்தம்

புல்லெழுந்த குட்டைப் புழுத்தோன்றிப் புட்டோன்றி
வல்விலங்கு தோன்றி மனிதஇனம்—அல்லும்

பகலும் அழகுவான் செங்கதிரும் பன்மை
இகலும் குடிமுறையும் இன்சொல்—நகைமுகத்து
மக்களும் தோன்றி மகிழ்ச்சித் திருக்கூத்துச்
சொற்களுந்தோன் றத்தமிழ் தோன்றியதே!—அக்காலம்

பொற்கால மாகிப் புதுமை வழிவகுத்து
நற்கால மாஞ்சங்க காலத்தில்—கற்பிளந்த
மாமணிகள் என்னுஞ்சீர் வற்ரு இலக்கியத்தை
நாமணக்கப் பாடிவைத்தார் நற்புலவர்!—பாமணக்கும்

அந்நாள் இலக்கியங்கள் ஆற்றங் கரைமரம்போல்
முன்ஞள் முரிந்து முளைத்திருக்கப்—பின்ஞளில்

கற்ருேர் ஒருசிலரே கைப்பொருள் இல்லாதான்
பெற்ற பெரும்பொருள்போல் பேரின்பம்—உற்ருர்கள்!

பின்னுஞ் சிலபேர் பெரியோர் வழிநடந்து
சின்ன இலக்கியங்கள் செய்தார்கள்!—அன்ஞேர்கள்

பிள்ளைத் தமிழென்ருல் பிள்ளைத் தமிழெழுதி
வள்ளலுக்கும் மன்னவர்க்கும் தூதெழுதிப்—பள்ளத்துச்

செக்காட்டு வார்போலச் செந்தமிழில் பாட்டிசைத்தார்!
அக்காலம் வந்தார் அமரகவி!—பொக்கைவாய்த்

தாய்க்கிழவி கன்னி சிறுவர் சிறுமியர்கள்
வாய்கிழியப் பாடும் மறுமலர்ச்சிச்—சேய்க்கவிதை,

புத்தம் புதுமைக் கவிதை புதுப்போக்கில்
நித்தம் புனைந்திங்கே நீட்டினார்!—கொத்து

மலரும் புதுமை; மதுவும் புதுமை;
அலரும் பொருள்புதுமை! ஆன்ற—பலரும்

எளிதிற் புரியும் இசைப்பாடல், சிந்து,
கிளிக்கண்ணி, கும்மி, கிளரும்—வளத்தில்

மிகுகவிதை வெண்பா, விருத்தம் பலவும்
வகைவகையாய்ப் பாரதியார் பாடி,—அகமும்

புறமும் புரியா திருந்தோர்க்கும் ஆன்ற
திறமை மருந்தாம் திருவாம்—மறத்தோள்

வரிப்புலியை, நாட்டின் மடமை அடிமைக்(கு)
எரிப்புலியைப் பாரதியார் ஏவ,—வரிக்குவரி

தேன்சொட்டுந் தீங்கவிதை ஏடெழுதி மங்காத
வான்முட்டும் நீள்புகழை மாத்தமிழ்த்தாய்—கூன்முட்டும்

பிள்ளைமதி நெற்றிப் பெருமுடிக்கு மாமகுடம்
அள்ளும் அழகுதரச் சூட்டினார்!—தெள்ளு

புதியநடை, பாரதியின் பொற்கவிதை சிந்தும்
புதியநடை சங்கப் பொலிவே!—புதுமைப்பெண்

வீசி நடக்கும்போர் வீரர் பெருநடையே!
பேசும் மயிலும் பிடிகளிறும்—கூசப்

பயிலும் நடையெல்லாம் பாடலிலே காண்போம்!
வயலுழவன் ஏர்ப்பாட்டை வாய்க்கால்—அயலிருந்து

பாடச் சுவைக்குஞ் செவிபோலப் பாரதியின்
பாடல் செவிக்கின்பம் பாய்ச்சாதோ?—பீடு

நடைமுரசும் நல்காதோ? சங்கு முழக்கம்
தொடைமுறுக்கை ஏற்ருதோ? சொல்வீர்!—படைப்புப்

புலவர் தமிழ்பாடப் புத்தம் புதிய
நிலவகுத்து நீட்டியதார்? கும்மி—பலபாடச்,
சின்ன குழந்தை சிரித்துக் கவிபாடச்
சொன்னநடை நற்றமிழர் தூயநடை—கன்னல்
தமிழ்நடையே! தக்கோர் இலக்கியத்திற் பூத்த
அமிழ்தச் சுவைநடையே ஆம்!

(இன்னிசைக் கலிவெண்பா)

சிந்துக்குத் தந்தை, செழுந்தமிழர் வாழ்வினிலே
வந்து பிறந்த மறுமலர்ச்சித் தந்தையாம்!
ஆற்றெழுக்குப் போலும், அரிமா விழிபோலும்,
சேற்றுக்கே ஏற்ற செழுவூன்று கோல்போலும்
பாட்டென்றால் வாய்கோணிப் பல்லிளித்த நாட்களிலே
பாட்டுக் கொருபுலவன் பாரதியார் நாட்டில்
இனிய தமிழால், எளிய நடையால்
கனிபிழிந்த சாற்றினிலே கற்கண்டைச் செந்தேனைக்
கூட்டிக் குழம்பாக்கிக் கொடுத்துத் தமிழ்கூறும்
நாட்டினிலே தம்போன்ற நல்ல பரம்பரையை
உண்டாக்கி, நற்கவிதை உண்டாக்குந் தூயதமிழ்த்
தொண்டாற்ற நிற்குந் துணையெதுவாம்? பாரதியின்
உள்ளத்தை அள்ளும் உயர்கவிதைக் கற்பனையின்
தெள்ளு தமிழ்ச்சொல் புதியநடை சீர்நடையே!
சுற்றி இருந்தோர்க்குத் தூய தமிழ்ப்பாட்டால்
"வெற்றியெட்டுத் திக்குமெட்டக் கொட்டு முரசே நீ"
என்றே இசைக்கும் இனிய கவிதையிலே
வென்றே வருமறவர் வீர நடைக்கேற்ற
தாளம் எழுப்புந் தமிழ்ச்சொல்லைப் பாரதியின்
மேள முரசெழுப்பும்; வீரப் புதியநடை!

"விட்டு விடுதலை யாகிநிற் பாயிந்தச்
சிட்டுக் குருவியைப் போல்" என்றே செந்தமிழால்
தட்டி அடிமைத் தளையவிழ்க்கப் பாடியது
தொட்டுத் துயிலெழுப்பும் தூய புதியநடை!
"எந்தையுந் தாயும் இருந்து குலாவியே
வந்ததும் இந்த வளத்தமிழ் நா(டு)" எனச்
சிந்தையில் நாட்டின் சிறப்பையும் பற்றையும்
தந்தது பாரதித் தாய்மைப் புதியநடை!
கோவிந்தர் பாட்டின் குறிக்கோளைச் செந்தமிழால்
பாவேந்தர் பாரதியார் பாட்டிசைத்தார்! அப்பாடல்
கூனி நரைத்தோர், குழிவிழுந்த கண்ணோரை
ஏனற் புலிபோல் எழுந்திருக்கச் செய்ததுவே!
நாட்டின் விடுதலையைப் பாட்டின் குறிக்கோளாய்த்
தீட்டுங் கவிதைச் செழுஞ்சொற் புதுநடையே!
"ஓடி விளையாடு பாப்பா!" எனக்குழந்தை
பாடி விளையாடப் பாட்டிசைத்தார்! நாடிஞல்
பாலூட்டிச் சீராட்டிப் பாயிற் கிடத்தியே
தாலாட்டுந் தாயின் தமிழ்க்கவிதை ஆகாதோ?
"பெண்ணும்நல் லாணும் நிகரென வாழ்ந்திடில்
மண்ணில் அறிவு மலர்ந்து செழிக்குமாம்!
பெண்மை தழைத்திடக் கூத்திடு வோமடா!
பெண்மையும் வெல்கென்று கூத்திடு வோமடா!"
என்றிசைத்த பாரதியின் ஏற்றமிகு பாடலெலாம்
மன்றிடையிற் பெண்கள் சரிசமமாய் வாழ
வகுத்த புதியநடை மன்றல் நடையாம்!
தொகுத்துநான் சொல்லுவதோ தூய புதியநடை!
காட்டுக் குயிற்பாட்டுச், செங்கோவைக் காய்கோதும்
வீட்டுக் கிளிப்பாட்டு, விண்பூத்த பொன்னந்தி

தீட்டும் ஒளிப்பாட்டு, நீலத் திரைநிலவு
காட்டுஞ் சுடர்ப்பாட்டுக், கண்ணன் திருப்பாட்டு,
வண்டிக்கா ரன்பாட்டு, மாசினியின் பாட்டெல்லாம்
எண்டிசையும் போற்றும் இனியநடை; செஞ்சொற்
புதுமைநடை; புத்தம் புதியநடை! பாடல்
மதுவருந்தி வாழ்வோம் மகிழ்ந்து!

○

நாள்: 11-9-1968.

இடம்: புதுவை வானொலி நிலையம்—பாரதியார் விழாக் கவியரங்கம்.

தலைவர்: சிலம்புச் செல்வர் திரு. ம. பொ. சிவஞானம் எம். எல். ஏ.

தலைப்பு: புதுமைக் கவி—புதிய நடை.

# 19. உழவன்

## அவையடக்கம்

(எண்சீர் விருத்தம்)

அலைகடலின் மலைமுகட்டில் தொடுவா னத்தில்
அதிகாலைப் பொற்றுகளை விண்ணில் தூவித்
தலைநிமிரும் இளம்பரிதி எங்க ளண்ணு
தமிழர்களின் தனித்தலைவன் வழியில் வந்த
கலைஞு! கரு ணுநிதியே! சொல்லின் செல்வ!
களங்கண்ட மறப்புலியே! தமிழர் வாழ்வே!
விலையில்லாத் தாயகத்தின் இருளைப் போக்கும்
விண்ணெளியே! தமிழ்மறவ! வாழ்க நீடே!

தம்பிகளில் தலைசிறந்த கலைஞ ரேறே!
தமிழ்நாட்டு மலைச்சாரற் குளிர்பூங் காற்றே!
கொம்புத்தேன் பேச்சாள! கடலா ழத்தே
குளித்தெடுத்த நன்முத்தே! பகையை வீழ்த்தும்
அம்பொத்த செயல்மறவ! சங்க கால
ஆன்ருேரின் புறப்பாட்டே! இளைஞர் நெஞ்சில்
தெம்பேற்றும் எழுத்தாள! தமிழர் வாழ்வின்
திருக்குவளை மாநிதியே! வாழ்க நீடே!

முன்னகத்திற் குடியேறி மக்கள் நெஞ்சில்
மூன்றெழுத்தை நிலைநிறுத்தி இருண்ட வானத்
தென்னகத்தில் ஒளியேற்றி மக்கள் வாழும்
திசையெல்லாம் தமிழ்பரப்பி வாழ்ந்த மேலோன்
என்னகத்தில் தம்பியரின் அகத்தி லெல்லாம்
என்றென்றுங் குடிகொண்ட அறிஞர் அண்ணு
பொன்னகத்தின் நல்விளைவே! முதலமைச்சே!
புதுப்பொலிவே! அஞ்சுகத்தின் நிதியே! வாழ்க!

பாட்டரங்கின் கவிநிதியே! தமிழர் வாழ்வின்
பண்பாட்டை நல்வளத்தைப் பேணிக் காக்கும்
நாட்டரங்கின் பெருநிதியே! முத்து வேலர்
நன்னிதியே! நாநிதியே! அஞ்சு கத்தின்
வீட்டரங்கக் கருநிதியே! கலைஞர் ஏறே!
மேன்மைமிகு நன்னிதியே! எனது பாடல்
கேட்டரங்கம் சிறப்பிக்க வந்த ஆன்ற
செந்தமிழர் முதலமைச்சே! வாழ்க நீடே!

(வேறு)

கவியரங்கப் பெருந்தலைவ! கற்றறிந்த மேலோய்!
கத்துகடல் தமிழகத்து முதலமைச்சே! இந்தப்
புவியரங்கப் பெரியோரே! தாய்மாரே! ஆன்ற
புலவர்காள்! பொன்னமரா வதி[1]மன்றிற் சூழ்ந்து
செவியரங்கில் தீந்தமிழைத் தாய்மொழியை இன்பச்
செந்தேனைப் பாய்ச்சுகின்ற கவிக்கூட்டத் தோரே!
கவியரங்கில் என்பாட்டைப் பாடுதற்கு முன்னர்த்
தலைதாழ்த்திக் கைகூப்பி நான்வணங்கு வேனே!

வான்தோன்றி மலைதோன்றி மலைமுகட்டில் மோதும்
வளிதோன்றிக் கடல்தோன்றிக் கடலிடையில் நீண்ட
கூன்தோன்றிச் செங்கதிரும் முளைமதியும் தோன்றிக்
குளிறடைந்த மண்தோன்றி உயிரினங்கள் தோன்றிக்
கான்தோன்றி நீளாற்றங் கரையினிலே வாழ்ந்தோர்
கடும்பசிக்குப் போராடி உழைத்துவழி கண்ட
தேன்தோன்றும் உழவனை நான் பாடுகின்றேன் உம்முன்!
தெள்ளுதமிழ் நாட்டவரே! கேட்பீரென் பாட்டை!

காடுவெட்டி நிலந்திருத்திப் புற்பூண்டு நீக்கிக்
கரைகட்டிச் செந்நெல்லின் விதையெடுத்து வந்து
மாடுகட்டி நீர்தேக்கி வயலுழுது வித்தி
மலைக்காட்டு மானினமும் மரக்கிளையில் தொங்கும்

கூடுகட்டி வாழ்கின்ற புள்ளினமும் ஓட்டிக்
  குடியோம்பி உயிரோம்பி உடலோம்பி நாட்டில்
வீடுகட்டி வாழுகின்ற மற்றோரும் வாழ
  விளைவாக்கம் தந்தவனே நல்லுழவன் ஆமே!

கார்தேக்கிக் கற்பிளந்து வரப்புயரக் கட்டிக்
  கடுங்கோடைக் குளிர்காற்றில் கால்கடுக்க நின்றே
ஏர்தேக்கி உழுதிடுவோன் இல்லையெனில் கூரை
  இருப்புண்டோ? இலையுண்டோ? இலைக்குச்சோ றுண்டோ?
சீர்தேக்கி நிற்கின்ற சிற்றூரும், சிற்றூர்த்
  தெருநோக்கி நிற்கின்ற குடிசைகளும் உண்டோ?
தேர்தேக்கி நிற்கின்ற குளங்கோயில் உண்டோ?
  திருநாட்கள் மணியோசை சிவபூசை உண்டோ?

ஏர்ப்படையாற் பன்னிருநாள் உழுதுழுது கீறி
  எருவிட்டு மடக்கோட்டி இராமுழுதுந் தங்கிக்
கார்ப்படையை வயல்தேக்கி நீள்கரம்பை மாற்றிக்
  கட்டியிட்டு மேடுபள்ளம் தட்டியிட்டு நல்ல
சீர்ப்படையாஞ் சம்பாநெல் முடிபறித்து நட்டுச்
  செழுவளத்தைச் சேர்க்கின்ற நல்லுழவன் நாட்டுப்
போர்ப்படையுள் ஏர்ப்படையாய்ப்புகுந்திருக்கக்கண்டோம்!
  பொதுவாழ்வில் உழவனிலாப் புகுவாயில் உண்டோ?

மாட்டுக்கிங் குணவளிப்போன்/உழவனுவான்; வாழும்
  மக்கட்கிங் குணவளிப்போன்/உழவனுவான்; கொல்லர்
வீட்டிற்கிங் குணவளிப்போன்/உழவனுவான்; வேறு
  வேலையிலா வீணர்க்கும், செவிகுளிரும் நல்ல
பாட்டிசைக்குங் கவிஞருக்கும், கலைஞருக்கும், கல்வி
  பயிற்றுகின்ற கணக்காய மக்கட்கும், வாழும்
நாட்டிற்கும் உணவளிக்கும் நல்லுழவன் வள்ளல்!
  நலிந்தாலும் கொடுப்பதன்றிக்கொள்வதையே எண்ணன்!

சிலையேந்தி ஆறலைப்போர் வாழுகின்ற காட்டிற்
சிறுபொருளின் பெரும்பொருளின் சிப்பங்கள் ஏந்தி
மலையேந்திச் செல்லுகின்ற ஒற்றையடிப் பாட்டை
வழியேந்திச் செல்லுகின்ற வணிகர்க்கும், நீல
அலையேந்திக் கொந்தளிக்கும் நெடுங்கடலின் மேலே
அடுக்கடுக்காய் மரங்கட்டி அச்சத்தைப் போக்கி
விலையேந்திச் செல்லுகின்ற மீனவர்க்கும் இந்த [யாராம்?
மண்ணுலகில் உணவளிப்போன் உழவ னன்றி

பொய்யருக்கும் உழவன் தான்கொடுக்கின்றான்; நாட்டின்
பொதுத்தேவைப் பொருளெல்லாம் செய்கின்ற நீண்ட
கையருக்கும் உழவன் தான் கொடுக்கின்றான்; நல்ல
கவிஞருக்கும் கலைஞருக்கும் கொடுக்கின்றான்; பூணூல்
ஐயருக்கும் கொடுக்கின்றான்; அறிவியலைச் சேர்க்கும்
அறிஞருக்கும் கொடுக்கின்றான்; தொந்திபெருத்துள்ள
மெய்யருக்கும் கொடுக்கின்றான்! கடல்சூழ்ந்த இந்த
மேனாடும் கீழ்நாடும் இவன்குடையின் கீழாம்!

உண்டியினைக் கொடுக்கின்ற நல்லுழவன் நாட்டில்
உயிர்கொடுக்கும் கிழவனென்றும், பொருள்
[கொடுப்போ னென்றும்
பண்டிருந்த புலவரெலாம் பறைசாற்றிப் போனார்!
படிக்கின்றோம்; பார்க்கின்றோம்! இந்நாளும் உண்மை
மண்டிணிந்த நிலம்வாழ மக்களினம் வாழ
வானுக்கும் மண்ணுக்கும் வழிப்பாட்டை போட
எண்டிசையும் நல்லுழவன் பெருந்தோளைப் பேணி
இமைபோலக் காத்திடுவோம்! ஏற்றமுறும் நாடே!

உழவாக்கம் இல்லையெனில் உயிராக்கம் உண்டோ?
உயிராக்கம் இல்லையெனில் ஊராக்கம் உண்டோ?
விழவாக்கம் பொருளாக்கம் வெற்றி முரசாக்கம்
வீரர்களின் தோளாக்கம் வெளியுலக நட்பு

பழகுமொழிச் சொல்லாக்கம் பகுத்தறிவின் ஆக்கம்
பறந்துசென்று நிலவுலகைப் படம்பிடிக்கும் ஆக்கம்
அழகுவயற் செந்நெல்லின் ஆக்கத்தால் அன்றி
அமையாதே; அமையாதே; என்றும் அமை யாதே!

நீலமலர் வயலெல்லாம் நெற்பயிரி னூடே
நிறைந்திருக்கப் பயிரழிக்க நல்லுழவன் கண்டே
கோலமயில் இல்லாளின் கண்ணென்றே எண்ணிக்
குனிந்துகளை எடுக்காமல் விட்டுவிட்டா போவான்?
சீலமிலாக் கொடியோரை வேந்தொறுத்தல் இந்தச்
செய்கைக்கு நேரென்றே செப்பியவன் எந்த
ஞாலத்து முதல்வர்க்கும் அமைச்சென்றே சொல்வேன்!
நல்லுழவன் இல்லையெனில் பாட்டெடுக்கப் போமோ?

'வரப்புயர வேண்டு' மென வாழ்த்தியநல் ஔவைப்
பாட்டிக்கு மாத்தமிழில் வாழ்த்துரையா இல்லை?
வரப்புயர நீருயரும்; நீருயர நட்ட
நெல்லுயரும்; பசும்பாம்பாய் வளர்ந்துயரும்; முற்ற
உரவு[2]நெற் கதிருயரும்; குடியுயரும்; நாட்டில்
உற்றகுடி உயர்வதினால் வளமுயரும்; ஆளும்
அரசுயரும்; அரசாளும் அமைச்சுயரும்! நாட்டின்
அச்சாணி உழவன்தான்! மறுப்பவரும் உண்டோ?

மின்கண்டு வித்தினான் நல் லேருழவன் முன்னாள்;
மிகுவிளைவு கண்டதில்லை; கார்பொய்த்த துண்டாம்!
பின்கண்டான் மழைநாளில் பெய்யுமழை நீரைப்;
பெருங்குளத்தில் ஏரியினில் தேக்கவழிகண்டான்!
என்கண்டான்? கோடையிலே ஏரிவற்றக் கண்டான்!
ஏங்கியேங்கி எண்ணிப்பின் கிணறுவெட்ட லானான்!
முன்கண்ட நிலையினிலும் முன்னேற்றம் வேண்டி
முயன்றதனால் தமிழரசில் புழைநீர்கண் டானே!

(வேறு)

அந்நாளில் வயலுழுது விதையைத் தூவி
ஆனமட்டும் விளைவறுத்துக் கொண்டு வந்தான்!
இந்நாளில் தமிழரசில் வேற்று நாட்டார்
எந்தெந்த முறையினிலே விளைவைச் செய்து
பொன்விளைத்து வருகின்றார் என்று கண்டான்;
புதுமுறையைக் கைக்கொண்டான்; வளருகின்றான்!
முன்னேற்றம் கைவிட்டான் இல்லை! நெல்லின்
முடியேற்றம் குடியரசின் ஏற்ற மாமே!

மண்ணுழுது பிளப்பதற்கே பொறிகள்; நீண்ட
மலையுடைத்து நீர்பாய்ச்சப் பொறிகள்; தீய்க்கும்
கண்ணுக்குத் தெரியாத செந்நெல் நோயைக்
காப்பதற்கு நன்மருந்து யாவும் தந்தே
உண்ணுதற்கே உணவளிக்கும் உழவர் வாழ்வை
உயர்த்துவதே தமிழரசின் உயர்ந்த நோக்கம்!
மண்ணுழுவோம்; விளைவடைவோம்! அஞ்சு கத்தின்
மகனரசை வாழ்த்திவளம் அடைவோம் நாமே!

(வேறு)

மயிலாடு பாறைகளும், பூத்திருக்கும் நல்ல
மலராடு சிறுகாற்றும், சிற்றூரின் மேற்கே
கயலாடு பூங்குளமும், பூங்குளத்தைச் சார்ந்த
கதிராடு நன்செய்யும், காயாடு தோப்பும்,
பெயலாடு பூங்குழலார் நீராடு பேச்சும் [தேய்ந்த
பிறர்க்கென்றே நாளெல்லாம் உழைத்துழைத்துத்
வயலாடு மாட்டுழவன் உலகிற்கே தந்த
வளமன்றி வேறுண்டா? வாய்திறக்கப் போமோ?

விள்ளவிள்ளக் கற்றோர்க்கும் மற்றோர்க்கும் நீல
விரிவான்போல் புகழ்சேர்க்கும் தமிழ்மறையைத் தந்த
வள்ளுவனும் நல்லுழவன்! மரமண்டை மக்கள்
வளர்வதற்கும் வாழ்வதற்கும் கரம்பேறிப் போன

உள்ளத்தில் மூளைத்திருந்த அறியாமைக் காட்டை
உழுபடையாம் திருக்குறளால் உழுதுழுது வித்தி
தெள்ளுதமிழ் நீர்பாய்ச்சி அறிவாக்கம் தந்த
செஞ்சொல்லே ருழவனெனில் யார்மறுக்கக் கூடும்?

அங்கிங்குப் போவானேன்? தமிழகத்தை ஆளும்
அமைச்சரெலாம் உழவரென்று மன்றத்தில் நின்றே
உங்களுக்கு நான்சொல்லல், சொல்லுவதைச் சொல்லல்!
ஊர்காப்போர் ஏர்காப்போர் நாடறிந்த உண்மை!
தெங்குண்ட நீரெல்லாந் தீஞ்சுவைநீர் ஆக்கித்
திசைதோறும் நாடோறும் வழங்குவதைக் கண்டோம்!
மங்குகின்ற ஆலமரம் வாழவைக்க வந்த
மக்களின விழுதாவார் அமைச்சரினம் ஆமே!

சொல்லுழவர் முதலமைச்சர் நல்லுழவர் ஆவார்!
துறைதோறும் துறைதோறும் நாவேரைப் பூட்டி
வில்லுழவர் முன்னுண்ட அமைச்சர்களை ஓட்டி
வெற்றிவலம் வருகின்றார்! தமிழகத்தில் வாழும்
பல்லுழவர் வளம்வேண்டி இரவுபகல் என்றும்
பாராமல் உழைக்கின்றார்! முத்துவேலர் தந்த
நல்லுழவர் அமைச்சரவை நீடுநிலைத் தென்றும்
நற்றமிழ்போல் வாழ்கவென நாம்வாழ்த்து வோமே!

ஏரோட்டும் உழவன்கைத் தார்நீட்டுங் கோலே
எருதுகளைத் தமிழகத்தில் வெருட்டியதைக்கண்டோம்!
ஏரோட்டும் உழவன்கைத் தார்நீட்டுங் கோலே
எம்மமைச்சர் கையிருக்கும் சீர்நீட்டும் செங்கோல்!
காரோட்டம் குறைந்தாலும் கழனிவறண் டாலும்
கனிவோடு குடிமக்கள் குறைகளையும் ஆன்ற
ஈரோட்டு வயலுழவன் முதலமைச்சர் வாழ்க!
எனத்தமிழால் பல்லாண்டு பாடிடுவோம் நாமே!

இன்றுள்ள நமதரசைத் தமிழரசை வாழும்
ஏழைகளின் தனியரசைக் குடியரசைத் தீமை
வென்றுபல நன்மைகளை நிலைநிறுத்த வேண்டி
விரைவினிலே செயலாற்றும் புத்தரசை யாண்டும்
ஒன்றாக உழவரெலாம் தோள்கொடுத்துத் தாங்கி
ஒப்பில்லாத் தமிழரசைக் கலையரசைக் காத்து
வென்றிடுவோம் எதிர்த்தபகை! இதுவேநம் வேலை!
வீரர்காள்! உழவர்காள்! விரைந்தெழுவீர் இன்னே!

○

நாள்: 21–6-1969.

தலைப்பு: திருக்குறளில்—உழவன்

குறிப்பு: பொன்னமராவதி வள்ளுவர் ஈராயிரம் ஆண்டு விழாக் கவியரங்கம், மாண்புமிகு தமிழ் நாட்டு முதலமைச்சர், கலைஞர் மு. கருணாநிதி தலைமையில் நடைபெறுவதாக அறிவித்திருந்த விழாக்குழுவினர், திடுமெனத் தலைமையை மாற்றி அறிவித்துவிட்டதால், முதலில் கலந்துகொள்ள முழு மனத்தோடு இசைவு தந்த புதுமைக் கவிஞர், மிகுந்த ஆர்வத்தோடு கவிதையை எழுதி வைத்திருந்தும், நிகழ்ச்சியில் கலந்துகொள்ளச் சென்றாரில்லை! எனவே, இதுவும் அரங்கேறப் பெறாதது ஆகும்.

1. திருச்சிராப்பள்ளி மாவட்டம், புதுக்கோட்டைப் பகுதி, திருமயம் வட்டத்திலுள்ள ஊரூர்; பொன்னன் அமரன் என்பார் வதிந்த ஊர்.

2. உரவு – வலிமை.

# 20. பாவேந்தர்

## அவையடக்கம்

(எண்சீர் விருத்தம்)

*மண்ணகத்துத் தாதறிந்து வாரித் தேக்கி*
*வகைவகையாய்ச் செப்பனிட்டுப் பொன்னுண் டாக்கி*
*விண்ணகத்து மின்னனுவை வள்ளல் போல*
*மேன்மேலும் பலதுறையில் வழங்கி நாட்டுப்*
*பண்ணகத்து வளஞ்சேர்க்க உழைக்கும் ஆன்ற*
*பலதுறையில் வல்லோரே! நல்லோ ரே!என்*
*கண்ணகத்து நெய்வேலி மக்காள்! உம்மைக்*
*கைகூப்பி வாணிதாசன் வணங்கி னேனே!*

## நெய்வேலி முத்தமிழ் மன்றம் வாழ்க !

(அறுசீர் விருத்தம்)

*மெய்வேலி இல்லாப் போழ்தும்*
*வெற்றியை விளைத்தார் ஒத்த*
*நெய்வேலி அறிஞர் கண்ட*
*முத்தமிழ் மன்றம் நீண்ட*
*வைவேலி நிறைத்துக் காக்கும்*
*காவிரி மடையோ ரத்துச்*
*செய்வேலி போற்ற ழைத்தே*
*சீருடன் வாழ்க நீடே!*

['பாரதியும் பாரதிதாசனும்' என்னும் தலைப்பில் பதினாறுவதாக இந்நூலில் [பக்கம் 88-90] இடம்பெற்றுள்

ளதில், 'பல்லோர் இருந்தார் பார்த்தனம்' எனத்தொடங்கும் அடியிலிருந்து, 'செஞ்சொற் கவிபாடிச் சிறந்திடு கின்றூரே' என முடியும் அடிவரை இங்கு இணைத்துப் படித்துக் கொள்க.]

O

நாள்: 29-6-1969

இடம்: நெய்வேலி முத்தமிழ் மன்றம்—பாவேந்தர் விழாக் கவியரங்கம்

தலைவர்: புதுமைக் கவிஞர் திரு. வாணிதாசன்

தலைப்பு: பாவேந்தர் பாரதிதாசன்

# 21. மகிழ்ச்சி பொங்கும் வீடே!

(எண்சீர் விருத்தம்)

'விண்பூத்த பிள்ளைமதி அழகொழுகும் நெற்றி!
விரிகடலின் கரைமோதும் அலைக்கூட்டம் கூந்தல்!
கண்பூத்த கழிநீலம்! வாய்நிறைந்த பற்கள்
கார்பூத்த வெண்முல்லைப் பேரரும்பு! செஞ்சொல்
பண்பூத்த மெல்யாழாம்!' எனப்போற்றும் ஆளன்
பலகுழந்தை பெற்றவுடன் மனைவெறுக்கக் கண்டோம்!
புண்பூத்த உள்ளத்திற் பூத்திடுமோ இன்பம்? [வீடே!
புகும்கருவின் வழியடைப்போம்! மகிழ்ச்சிபொங்கும்

தாலாட்டு, செங்கீரை, சப்பாணி என்ற
தளிர்குழவிப் பருவவின்பம் இருகுழந்தை நல்கும்!
வாலாட்டு நாய்போலப் பலகுழந்தை பெற்றால்
வறுமையின்றி நோயின்றி என்னடையும் வீடு?
காலாட்டும் போழ்தெல்லாம் மனக்கவலை தோன்றும்!
கருத்தோன்றும் வழியடைப்போம்! இதிலென்ன
கோலாட்டுஞ் சிறுவர்கள் ஓரிருவர் போதும்! [குற்றம்?
குடிவாழும்; குலம்வாழும்! மகிழ்ச்சி பொங்கும் வீடே!

பானையைப்போல் வயிறுண்டு; வாழ்க்கைவள மில்லை!
பண்படுத்தல் நம்கடனே! இதிலென்ன குற்றம்?
பூனையைப்போல், ஈசலைப்போல் குழந்தைகளைப் பெற்றால்
பொருளேது? வாழ்வேது? பொங்குகடல் நீர்வாழ்
மீனைப்போல் மீன்நிலவு ஒன்றென்றே சொல்லி
வெண்ணிலவை யார்வெறுப்பார்? மனைமாட்சி ஓங்க
யானையைப்போல் ஒருமகவு போதும்; அது போதும்!
யாமறிந்த சிறந்தவழி! மகிழ்ச்சிபொங்கும் வீடே!

மனைமாட்சி சிறப்பதற்கு மகப்பேறு வேண்டும்!
  மகப்பேறு குறைவதனால் வளங்குறைந்தா போகும்?
வினைமாட்சி சிறப்பதற்குக் கல்விவளம் வேண்டும்!
  வெறுங்கையால் முழம்போடக் கூடுவதோ என்றும்?
சினைமாட்சி சிறப்பதற்கு மருந்துணவு வேண்டும்!
  சிறுர்பெருக்கம் அணைபோடா திருந்திடுமோ என்றும்?
முனைமாட்சி சிறப்பதற்கோ ஓரிருவர் போதும்!
  மூடிடுவோம் கருவழியை! இதிலென்ன குற்றம்?

சொல்லினிக்கச் செயலினிக்க மனையறத்தைப் பேணித்
  துடியிடையும் ஆளனுமாய் எதிர்கால வாழ்வை
அல்லினிக்கப் படுக்கையிலே கதைபேசிக் கண்கள்
  அயர்கின்ற நேரத்தில் அழுகுரலைக் கேட்டால்
இல்லினிக்கும் குழந்தைகள்மேல் பற்றுளமா தோன்றும்?
  இருகுழந்தைப் பெருவாழ்வு மனைக்கின்பச் சொத்து!
மல்[1]லினிக்கும்; வாழ்வினிக்கும்! கருவழியைத் தூர்ப்
[போம்!
  மனையினிக்கும்; நாடினிக்கும்; அழகினிக்கும் நீடே!

○

நாள்: 3-8-1969.

இடம்: புதுவை நகர மன்றம்—புதுவை மாநில சுகாதார-குடும்பநலத் திட்டத் துறையினரால் நடத்தப்பெற்ற குடும்பக் கட்டுப்பாட்டுக் கவியரங்கம்.

தலைவர்; அண்ணாமலைப் பல்கலைக் கழக விரிவுரையாளர், உளுந்தூர்ப்பேட்டை திரு. சண்முகம், எம். ஏ.

குறிப்பு: கவியரங்க முடிவில், புதுவை மாநில ஆளுநர் மேதகு பி. டி. சாட்டி தலைமையில், புதுவை மாநில சுகாதார—குடும்பநலத் திட்டத் துறை அமைச்சர் மாண்புமிகு வ. சுப்பையா, புதுமைக் கவிஞர் வாணிதாசனுக்குப் பொன்னாடை போர்த்திப் பாராட்டினர்.

1. மல் — வளப்பம்; வருவாய்.

# 22. தொல்லை களையும் தோழன்

அவையடக்கம்

(கலிவெண்பா)

கத்து கடல்சூழ் கரைவாழ் தமிழகத்து
முத்துக்காள்! என்னுயிராம் முத்தமிழின் மக்காள்!என்
சீர்ப்புதுவைக் கல்வித் திருவமைச்சே! ஆறுமுகப்[1]
பேராள! அன்பனே! அண்ணாவின் பின்பிறந்தே
ஊராள வந்த ஒளிசேர்கல் மண்டபத்துச்
சீராள! செல்வச் சிறப்பாள! என்னெஞ்சில்
வேரூன்றிப் போன விரிவான் எழுந்துவரும்
கார்நிலவே! தென்றலே! செந்தமிழிற் கண்டநற்
சீர்தளை யாப்பின் செழுங்காப் பியமே!பே-
ரூரி னிடையே உதவும் பழக்காடே!
புத்தம் புதுமை பொலிகின்ற நற்புதுவை
பெற்றெடுத்த செல்வப் பெருங்குடி மக்காள்!
முதியோரே! கல்வி முறையுணர்ந் தோரே!
மதிமுகத் தாய்மாரே! மங்கைநல் லீரே!
வதுவை[2] பெருக்கி வளம்பெருக்கி ஈன்ற
புதுவை அரசாளப் போகின்ற பிள்ளைகாள்!
என்றன் கலிப்பாட்டால் என்னிருகை கூப்பியே
நின்றேன்! நீர் வாழ்க நிலத்து!

(எண்சீர் விருத்தம்)

இவ்வாண்டு புத்தாண்டாம்! அறிஞர் அண்ணா
இன்றிருந்தால் அவர்வயதோ அறுப தாண்டாம்!
இவ்வாண்டு புத்தாண்டாம்! பாவின் வேந்தர்
இன்றிருந்தால் ஒன்றுகுறை எண்ப தாண்டாம்!

இவ்வாண்டு புத்தாண்டாம்! அண்ணல் காந்தி
இன்றிருந்தால் அவர்வயதோ ஒருநா றுண்டாம்!
இவ்வாண்டு வள்ளுவர்க்கோ ஆயி ரத்தை
இரட்டிக்கும் புத்தாண்டாம்! வாழ்த்து வோமே!

(அறுசீர் விருத்தம்)

வள்ளுவர் புகழைப் பாட
மனத்திற்கு வலிமை யுண்டோ?
உள்ளெழுந் தெண்ணும் போதும்
உயிருக்கும் வலிமை யுண்டோ?
தெள்ளுதமிழ்க் குண்டோ? மற்றும்
திசைமொழிக் குண்டோ? சொல்வீர்!
உள்ளத்துக் கெட்டா வான
ஒண்புகழ் விரிவென் பேனே!

(கலிவெண்பா)

தென்னவர்கள் வாய்பிறந்து சீர்பெற்று வாழ்ந்திருந்து
மன்னர் மடிதவழ்ந்த மாத்தமிழ்த்தாய் என்றென்றும்
கன்னி யெனும்பெயரைக் கண்டவள்தான்! என்றாலும்
பொன்னி வளயாற்றின் பொற்புடையாள்; வற்றாதாள்;
வானமே பொய்த்திடினும் வாரி வழங்குநன்செய்
ஏனல் விளைக்கும் இயல்புடையாள்! அஃதேபோல்
தந்தாள் பலபிள்ளை! தான்கன்னி கன்னியேதான்!
விந்தையென்று கொள்ளாதீர்! வேறுவகை எண்ணாதீர்!
இந்தத் திருநாட்டில் எங்குப் பிறந்தாலும்
சொந்தமகார் போலெண்ணித் தூக்கி மடியிருத்தி
நல்ல முறையினிலே நாடோறும் தூயதமிழ்ச்
சொல்லை உணவாக்கித் தொன்றுதொட்டு யாரியாரோ
பெற்றெடுத்த பிள்ளையெலாம் பெற்றெடுத்த தாய்போலக்
கற்றுக் கொடுத்தாள்; கவிபாடச் செப்பனிட்டாள்!

கன்னித் தமிழ்த்தாயே கற்றோர்க்குத் தாயானாள்!
என்னென்பேன், ஆளனிலா இக்கன்னித் தாய்மையினை!
சங்க இலக்கியத்தைச் சார்ந்தால் இதுபுரியும்!
இங்குள்ள தாய்மாரே! என்மேற் சினவாதீர்!
பேரில்லாப் பிள்ளைபல பெற்றளித்து வந்துள்ளாள்!
ஊரார் சிரிப்பார்கள்! உண்மை; மிகஉண்மை!
குப்பையைச் சீய்த்தகொண்டைக் கோழியைப் பாடினவன்
குப்பைநற் கோழிஎனக் கூறப் படுகின்றான்!

வெய்யில் எழவெழவே வெந்துருகும் வெண்ணெய்யைக்
கையில்லா ஊமனும் கண்ணாலே காப்பதுவோ?
கையிலூமன் நற்கவிஞன் கண்ட பெயரிதுவாம்!
ஐயகோ! பேரில்லா மக்கள் பலருண்டே!
பிள்ளைகளில் வேற்றுமையைப் பேணாப் பெருஞ்சிறப்பை
உள்ளத்திற் கொண்டவள்நம் ஒப்பில் தமிழ்த்தாயே!
பெண்பிள்ளை பல்லோரைப் பெற்றே அளித்துள்ளாள்;
கண்ணில்லாப் பிள்ளையெலாம் கட்டி வளர்த்துள்ளாள்!
பார்ப்பான், அரசன், பலசரக்கு விற்றிருப்போன்,
ஊருக் குழைத்த உழுத்தன் எனப்பாரா(து)
எல்லோரும் நல்லோரே என்றெண்ணித் தென்னாட்டில்
வல்லோரைப் பெற்றெடுத்தாள் எம்மன்னை! வாழியவே!

வள்ளுவனைப் பெற்றெடுத்தாள் மங்காத் தமிழ்த்தாயே!
பிள்ளை மதியுடையார் பின்வந்தோர் கூசாது
பொய்யைப் புளுகைப் புகுத்தித் தமிழர்தம்
மெய்யைச் சுடுகின்றார்! வேதனையில் வேதனையே!
ஆதியென்ற கீழ்ச்சாதி அம்மைக்கும், பொய்யையே
ஓதிப் பிழைக்கின்ற பார்ப்பான் ஒருவனுக்கும்
முப்பாலைத் தந்த முனிவன் பிறந்தானென்(று)
இப்பால் கதைக்கின்றார்! ஈனத் தொழிலிதுகாண்!

வள்ளுவனார் தந்த வளமார் திருக்குறளை [துண்டோ?
வெள்ளம் அழிப்பதுண்டோ? வெந்தணல்தான் தீய்ப்ப
முப்பாலுக் கேற்றநல் மூதுரைபோல் எங்கேனும்
இப்பால் எழுந்ததுண்டோ? எந்நாட்டும் இல்லை!
அறிவின் புரட்சி, அகப்புரட்சி, வாழ்க்கை
நெறியின் புரட்சி நிரல்படுத் தித்தந்த
பொய்யா மறையாம் குறளைப் புரிந்தார்க்கு
வையகத்தில் என்னகுறை? வாழ்க்கை வளமாம்!
'குறள்கற்றோர் முன்னர் விரல்நீட்டல் கூடா'
அறவுரை; ஆன்றோர் பழமொழி! யார்மறுப்பார்?
'என்னுண்டாம் உங்கள் இனிய திருக்குறளில்?'
என்றெனைக் கேட்க எவர்வந் திடினும்
உலகப் பொருட்கள் உளவென் றுரைப்பேன்!
நிலையில் அறிவை நிலையாய் நிறுத்தும்
கலைபயில் கூடக் கணக்கன் குறளே!
விலையில் பெருநிதி வீசிடு வள்ளலே!
நாட்டிற்கும் வீட்டிற்கும் நல்ல அறநெறியைக்
காட்டியதார்? வள்ளுவனார் கண்ட திருக்குறளே!
ஒன்றேமுக் காலடியில் ஓதப் பெருங்கடலை
இன்றெவர் தாம் உள்நிறைக்கும் ஏற்றம்உடையார்காண்!
கீதை எனவுரைப்போர் செஞ்சொல் திருக்குறளை
ஓதி உணர்ந்தபின் ஒப்புவரோ கீதையினை?
வல்லிருளைப் போக்கும்நீள் வான்சுடரே முப்பாலாம்!
நல்லறிவை, நன்னெறியை நாளும் நமக்குணர்த்தித்
தொல்லை களையும்நற் றோழன் திருக்குறளே!
இல்லத்து மக்கள், இனிய மனையாட்டி
ஊட்டாத இன்பம் திருக்குறளில் உண்டென்பேன்!
நாட்டோரே! கற்றல் நலன்!

## முடிவுரை
(அறுசீர் விருத்தம்)

இங்குள்ள உயிரின் மேலாம்
என்னருங் கவிச்செல் வங்காள்!
உங்களுக் கறியா தொன்றை
உணர்த்துவன்! உண்மை; உண்மை!
தெங்கிளம் நீர்போல் நல்ல
தீஞ்சுவைக் கவிதை பாடி
மங்கிய உங்கள் வீட்டின்
வறுமையைக் களைந்த துண்டோ?

மூவேந்தர் வாழ்ந்தி ருந்த
முன்னாளில் தமிழ்ப்பொன் னாளில்
காவேந்து கருமை நெல்லி
தனக்கின்றி ஔவைக் கீந்தான்!
சாவேந்து முரசு சட்டில்
தன்னிலே கண்ண யர்ந்த
பாவேந்தர்க் காக மன்னன்
பனையோலை விசிறி யேற்றான்!

கம்பனுக் காக அந்நாள்
சடையப்பன் கடைதி றந்தான்!
செம்பொனைத் தந்தான் நாய்க்கன்
சிறுகாதல் தூதைப் பாட!
வெம்பினான் பின்னால் வந்தோன்
வெற்றிலைக் கில்லை யென்றே![3]
அம்பொத்த கவிதைக் கின்றே
யார்காசு தரவல் லார்கள்?
பாரதி என்றே வாயால்
பறைசாற்று கின்றார்! அந்தப்
பாரதி வாழ்ந்த நாளிற்
பசிப்பிணி களைந்தார் உண்டோ?

பாரதி தாசன் வாழ்விற்
பணத்தினிற் புரண்டா வாழ்ந்தார்?
ஊரறி செய்தி! நாமும்
ஊருக்கே உழைக்க வந்தோம்!

கட்டுரை, நீண்ட நல்ல
கருத்தில்லாக் கதைகள் தீட்டிப்
பட்டுறை மேனி போர்த்து
வாழ்கின்றார் நலமே! இன்னோர்
தொட்டுப்பார்த் ததுதான் உண்டோ
தொன்னூலை, இலக்க ணத்தை?
விட்டிடு கவிதை யாத்தல்
எனவென்றும் விளம்பேன் யானே!

இருளினை ஓட்ட இல்லில்
ஏற்றிய அகல்வி ளக்கின்
திரியினை ஒத்தோம் நாமே!
தீய்ந்தாலும் கவலை வேண்டாம்!
மருளினில் வாழு கின்ற
மக்களின் வாழ்வை என்றும்
உருப்பெறச் செய்தால் நம்மின்
ஒண்பொருள்! போதும்! வாழ்வோம்!

நம்தொழில் அதுதான் தம்பி!
நாம்யார்க்கும் அடிமை யல்லோம்!
உம்மி[4]யும் கிடைக்காப் போழ்தும்
ஊருக்கே உழைத்து வாழ்தல்
இம்மையிற் கிடைத்த பேறும்!
இதுபோதும்; போதும் தம்பி!
செம்மையாய் ஈன்ற அன்னைத்
தீந்தமிழ் காப்போம்! வாழ்வே!

○

நாள்: 17—8—1969.

இடம்: புதுவை நகர மன்றம்-புதுவை வள்ளுவர் விழாக் குழுவினரால் நடத்தப்பெற்ற வள்ளுவர் ஈருயிரம் ஆண்டு விழாக் கவியரங்கம்.

தலைவர்: புதுமைக் கவிஞர் திரு. வாணிதாசன்.

தலைப்பு: ஒரு குறள் நிகழ்ச்சி.

குறிப்பு: இவ்விழாவில் புதுவை அரசின் கல்வியமைச்சர் மாண்புமிகு எஸ். ஆறுமுகம், பி. காம்., அவர்கள் வள்ளுவர் திருவுருவத்தைத் திறந்து வைத்துப் புதுமைக் கவிஞரைப் பாராட்டினர்.

1. புதுவை மாநிலக் கல்வி அமைச்சர் மாண்புமிகு எஸ். ஆறுமுகம், பி. காம்.

2. வதுவை—திருமணம்.

3. "எண்ணான்கு முப்பத் திரண்டுபல்
காட்டி இதழ்நடுவே
பண்ணாகச் செந்தமிழ் பாடிவந்
தாலும்இப் பாரிலுளோர்
அண்ணாந்து பார்ப்பர்; அழகழ
கென்பர்! அதன்பிறகோ
சுண்ணாம்பு பட்ட இலையும்
கொடார்கவி சொன்னவர்க்கே!"

என்னும் 'தனிப்பாடல்' கருத்தை இங்கே காண்க.

4.. உம்மி-உமி; சிறிதளவு.

# 23. ஒன்றிரண்டு போதும்!

(எண்சீர் விருத்தம்)

மந்திரியார் வந்துள்ளார்; வேழ வேந்தன்;[1]
என்னிளவல்! வாழ்த்துகின்றேன்! ஆனால், என்றும்
செந்திரிபோல் அவர்பிறந்த தமிழ கத்தின்
சிறப்பிற்கே அவர்வாழ்வு திகழ வேண்டும்!
முந்திரியார் முன்வந்து பலபேர் சென்றார்!
முத்தமிழர் எப்பயனும் கண்டார் இல்லை!
நந்திரியார்[2] நமக்கெல்லாம் நன்மை சேர்ப்பார்!
நற்றமிழ்போற் பல்லாண்டு வாழ்க நீடே!

(வேறு)

கடலூரீர்! இங்குள்ள கற்றறிந்த மக்காள்!
கவியரங்கம் காணவந்த தாய்மாரே! வாழும்
[2]வடலூரில் வளர்ந்துலகிற் பிறக்கின்ற மக்கள்
ஒன்றிரண்டால் உலகுய்யும்; உம்முயிரும் உய்யும்!
வடலூரில்[3] வாழ்ந்தவர்போல் மனமடக்கப் போமோ?
மக்களெலாம் அந்நிலையில் எங்கிருக்கக் கண்டோம்?
திடலூரிற் குடிசையுற்று வாழ்கின்ற மக்கள்
சிறுகுடும்பம் சிறப்படைய ஒருகுழந்தை போதும்!

நம்நாடு வறுமையிலே நலிகின்ற நாடு!
நாடோறும் முன்னேற நாமுழைக்கும் நாடு!
உம்மோடு கேட்கின்றேன்: மழைபொய்த்த போதும்,
ஊரினிலே படியரிசி கிடைக்காத போதும்
சும்மாவா இருக்கின்றீர்? ஆண்டுக்கொவ் வொன்றாய்க்
குழந்தைகளைப் பெறுகின்றீர்; தொல்லையடை [கின்றீர்!
அம்மம்மா! அதிலேழை இலையேநாம் என்றும்!
அறிவுள்ள ஒன்றிரண்டு குழந்தைகளே போதும்!

வருமானம் மிகக்குறைவு! குடியிருக்க இங்கே
மனையுண்டா? உடையுண்டா? வளப்பந்தா னுண்டா?
தெருமானம் போகுதந்தோ பலபிள்ளை பெற்றுச்!
சிறார்களின் நல் லுடல்வளந்தான் சீர்பட்ட துண்டோ?
உருமானம் தாய்க்குத்தான் உருப்பட்ட துண்டோ?
ஒவ்வொருநா ளுந்தொல்லை பலபிள்ளை பெற்றால்!
கருமானும் வழியடைப்போம்! கவலையில்லை வாழ்வில்!
களிபொங்கும் சிற்றில்லில்! கவலையில்லை வாழ்வே!

சூல்நிறைய வேம்பரசைச் சுற்றிவந்து வீட்டில்
துவளிடையை மணிவயிற்றைத் தடவிவந்த பெண்கள்
சூல்நிறையப் பெறுகின்ற வேளையிலே, அந்தோ!
சொல்லாமல் படுந்துயரம் சொல்லுதற்குப் போமோ!
பால்நிறையப் பெறுகின்ற தாய்மாரே! என்னைப்
பகைக்காதீர்! பலகுழந்தை எந்நாளும் வேண்டாம்!
கோல்நிறையும் மன்னவனும் பலகுழந்தை பெற்றுக்
குடிமுழுகிப் போனகதை நாடறிந்த உண்மை!

தாய்மாரே! உங்களைத்தான் கேட்கின்றேன்; என்றும்
தன்வயிற்றில் சுமந்துபெற்றுத் தருபவரோ ஆண்கள்!
காய்தாங்காக் கொடியுண்டோ எனச்சொல்லி உங்கள்
கருத்தழிப்பார்! அவர்பேச்சைக் காதிற்கேட் காதீர்!
வேய்போல, வாழையைப்போல், நண்டுசிப்பி போல
மெலிந்துநொந்து சாவாதீர்! பிள்ளைபல வேண்டாம்!
காய்நிலவு போல்வாழ்வீர்! கருத்தடையைக் கொள்வீர்!
கவலையில்லை வாழ்க்கையிலே! களித்திருப்பீர் நன்றே!

உடுப்புக்குப் பஞ்சமில்லை ஒன்றிரண்டு பெற்றால்!
உணவுக்குப் பஞ்சமில்லை ஒன்றிரண்டு பெற்றால்!
படிப்புக்குப் பஞ்சமில்லை ஒன்றிரண்டு பெற்றால்!
பற்றிநமை மாய்க்கின்ற கொடுநோயின் தொல்லை

தடுப்புக்குப் பஞ்சமில்லை! வீட்டிலுள்ள மூத்த
        தாய்தந்தை வயிற்றுக்குப் பஞ்சமில்லை! என்றும்
அடுப்புக்குப் பஞ்சமில்லை! உலையேற்றி வைக்கும்
        அரிசிக்குப் பஞ்சமில்லை! அறிந்துணர்வீர் நன்றே!

நெடுஞ்சாலை ஓரத்தில் நிழலிருக்கக் கண்டு
        நின்றிருந்து வாழ்வதுதான் நம்மக்கள் வாழ்க்கை!
படுபஞ்ச நிலையினிலா பலகுழந்தை வேண்டும்?
        பைந்தொடியீர்! பண்போடு நாட்டகத்தே வாழ
அடைத்திடுவீர் கருவழியை! அதிலென்ன குற்றம்?
        'அடபாவி!' எனச்சொல்லி எனையேசி னாலும்
தடுத்திடுவீர்! பலபிள்ளை வேண்டாமே என்றும்!
        தாய்மாரே! தாய்மாரே! எனக்கெஞ்சு வேனே!

சாவெல்லாம் குறைந்ததுவே தருமருந்தி னாலே!
        தாய்மார்கள் பெறுவதைத்தான் குறைக்கவில்லை
                                                        [இன்னும்!
காவெல்லாம் மனையாக்கிக் குடியிருக்க வைத்தும்
        கடுங்குளிருக் கிடமில்லை; காணுகின்ற உண்மை!
மாவெல்லாம் ஒருசிலர்கள் உண்டாலும் மக்கள்
        வயிற்றுக்குச் சோறில்லை! இந்நிலைதான் நாடு!
பாவேந்தன் சொல்கின்றேன்: பன்மக்கள்[4] பெற்று
        நானடையும் பெருந்தொல்லை பாட்டிலடங் காதே!

ஒன்றிரண்டு நன்மக்கள் போதுமடா அண்ணே!
        ஓயாத தொல்லையடா பலபிள்ளை அண்ணே!
நன்றாக எண்ணிப்பார் நான்சொல்வ துண்மை!
        நாளாக நாளாக நீயறிவாய் உண்மை!
என்றென்றும் நீவாழ, இல்லாளும் வாழ,
        எழிலோடும் பொருளோடும் உன்னில்லம் வாழ
ஒன்றிரண்டு போதுமடா, போதுமடா அண்ணே!
        உன்கருவை அடைக்கவழி தேடிடுநீ அண்ணே!

தடுக்கினிலே ஒருகுழந்தை தவழுகின்ற போது
தாயினுக்கும் தந்தைக்கும் பெருமகிழ்ச்சி பொங்கும்!
அடுக்கடுக்காய் ஆண்டுதோறும் ஒவ்வொன்ருய்ப் பெற்ருல்
அன்பிற்கும் இடமுண்டோ? நோய்க்கிடமே உண்டாம்!
கெடுப்பதற்கோ பலபிள்ளை? வாழ்வதற்கோ பிள்ளை?
கிளிபோல ஒன்றிரண்டு போதுமம்மா! போதும்!
தடுத்திடுவோம் கருப்பாதை! தவருென்றும் இல்லை!
சரியான வழியிதுதான்! குடும்பநலம் ஓங்கும்!
நகைப்போடே உன்னில்லம் எந்நாளும் வாழ
நான்சொல்லும் செய்தியினைக் கேட்டிடா அண்ணே!
திகைக்காதே! தீமையில்லை சீர்திருத்தக் கொள்கை!
செழுந்தமிழர் வாழ்வுக்கோ இதுபுதுமை யில்லை!
முகப்புயரும்; வாழ்வுயரும்; முதிர்ந்தபொருள் சேரும்;
முகமுயரும், அகமுயரும்! முன்பின்எண் ணுமல்
வகையாகச் செவ்வண்ண முக்கோணம் சேர்வாய்!
வாழ்வாங்கு வாழ்ந்திருக்க ஒருகுழந்தை போதும்!

○

நாள்: 30-11-1969.

இடம்: தமிழ் நாட்டரசின் கடலூர்க் குடும்பக் கட்டுப்பாட்டுத் துறையினரால் கடலூரில் நடத்தப்பெற்ற குடும்ப நலக் கவியரங்கம்.

தலைவர்: தமிழ் நாட்டரசின் தொழிலாளர் நலத்துறை அமைச்சர், மாண்புமிகு கா. வேழவேந்தன், பி. ஏ., பி. எல்.

தலைப்பு: குடும்பக் கட்டுப்பாடு.

1. தமிழ்நாட்டரசின் தொழிலாளர் நல மந்திரி மாண்புமிகு வேழவேந்தன்.

2. வடலூர் வள்ளலார் இராமலிங்க அடிகள்.

3. நந்து இரியார் - உயர்வு கெடாதவர்.

4. கவிஞர்க்குப் பெண் குழந்தைகள் ஐந்தும், ஆண் குழந்தைகள் நான்கும் ஆக மொத்தம் ஒன்பது குழந்தைகள்!

# 24. அன்பின் வழியது உயிர்நிலை

தமிழ்த்தாய் வாழ்த்து

(வஞ்சித் தாழிசை)

*தீந்தமிழின் சிறப்பெண்ணு*
*மாந்தர்கள் மனமென்னும்?*
*வேந்தர்கள் விறலென்னும்?*
*சீந்தாரோ சிறியோர்கள்?*

*நாப்பிறந்த நமதுதமிழ்*
*காப்பதற்குக் கருத்தில்லார்*
*வேப்பிலையை மிகுத்திடுவர்!*
*பூப்பில்லாப் புதுப்பெண்ணும்!*

*எக்குறையும் இலாததமிழ்*
*அக்கறையே அடையாதார்*
*எக்குறையும் இலரெனினும்*
*மக்களென மதிப்பவர்யார்?*

புதுவைச் சிறப்பு
(பஃறொடை வெண்பா)

*நீலக் கடலும் நெடுவானும் ஒன்றுகும்*
*கோலத்தைக் கண்டிருப்போர் கூட்டத்தை என்சொல்வேன்!*
*நெய்தற் கழிபூத்த நீல மலர்விழியோர்*
*கையிற் சிறைபுகுந்த கன்னல் மொழிச்சிறுவர்*
*அன்னையின் தோளேறி ஆடை பிடித்திழுத்துத்*
*தென்னை முகிழ்பாளை போலச் சிரித்திடுவர்!*
*தண்கடலின் ஓரத்தே தாழை மடல்பூக்க*
*வண்டோடி வந்தே வளையில் புகுந்திருக்கும்!*

பொன்பூத்த புன்னைப் பொறிவண்டை வெண்ணிலவு
'இன்னும் உறங்குதியே!' என்றெழுப்பும் பாலொளியால்!
ஏரார் மணிமாடம் எங்கும் நிறைந்திருக்கும்!
சீரார் புதுவைச் சிறப்பு!

### அவையடக்கம்
(நேரிசைக் கலிவெண்பா)

சிந்துக்குத் தந்தை; செழுந்தமிழைத் தென்னாட்டார்
வந்திக்கச் செய்தனன் மாக்கவிஞன்;—முந்தை
இருந்திங்கே பாடி எளியதமிழ்ப் பாட்டால்
விருந்தளித்த மேலோன்; விறலோன்;—அருந்தமிழ்ப்
பாரதியைக் காத்தே படைப்பயிற்சி தந்ததையும்
ஊரறியும்; ஊராகும் ஒண்புதுவைச்—சீரார்
கவியரசர் பாரதி தாசன் கவியைப்
புவியறியும்; என்னாசான் பொற்பைச்—செவியறியும்!
செந்தமிழ்ப் பாக்கள் சிறப்பை அவர்வழி
வந்த வழியோர்கள் வாக்குணர்த்தும்!—இந்தப்
புதுவைக் கடற்கரை வானொலிப் பூங்கா
இதுநாள் உணர்த்தும் இசையில்—புதுமைக்
கருத்தேற்றும் எங்கள் கவியரசர் பாடல்
உருத்தோன்றும்; நற்றமிழ் உற்ற—பெருமைபல
தோன்றும்! அவையுள்ள தோழரே! தாய்மாரே!
ஆன்றவிந் திங்கே அடங்கிய—சான்றோரே!
என்கவிதை எள்ளாமல் இன்மழலைச் சொல்லெண்ணி
என்வணக்கம் ஏற்பீர் இனிது!

### சாதாரண ஆண்டு
(இன்னிசைக் கலிவெண்பா)

அத்தான்! என் அத்தானே! அன்பே! எனதுயிரே!
எத்தை நினைத்தேதோ எண்ணிச் சிரிக்கின்றீர்!

வாயைத் திறக்காமல் வந்தவளைப் பாராமல்
பாயிற் புரண்டே பகற்கனவு காணுகின்றீர்!

* * *

அத்தானும் இல்லை! அடிபோடி நீகிழவி!
பொத்தானும்[1] நானில்லை! பொக்கைவா யன்நானே!
சித்(து)[2]இரை நான்தேடிச் செந்தமிழ்நூல் கையெடுத்தேன்!
சித்திரை வந்ததடி செந்தேன் மொழியாளே!
சௌமியத்தை நாம்கடந்தோம்! சாதா ரணகண்டோம்!
கொவ்வை இதழாளே! குத்து விளக்கொளியே!
சாதா ரணமான தாழில் குடிசைமுதல்
சாதா ரணவந்து சார்ந்ததடி! வாழ்த்துரைப்போம்!
நீர்நிலைகள் எங்கும் நிறைந்தனவே நீர்ப்பூக்கள்!
ஊர்நிலைகள் எங்கும் உணவுக்கோ பஞ்சமில்லை!
கார்பொய்த்துப் போனாலும் கண்கள் கலங்காதே!
நீரை நிரப்புநிலை சாதா ரணநிலையாய்
ஆளும் அரசுநமக் காக்கி அளித்திருக்கக்
கோளும் குறைப்பேச்சும் கொண்டிங்கே வாழாமல்
அன்பும் அறனும் அடைவதுதான் நல்வாழ்க்கை!
பண்பும் பயனும் அதுவென்றார் வள்ளுவனார்!

## அன்பு

கற்றோன்றி மண்தோன்றிக் கார்தோன்றி மண்ணிடையிற்
புற்றோன்றிச் சின்ன புழுத்தோன்றி வந்தமுதல்
அன்பின் வழிய துயிர்நிலை ஆமென்றே
இன்பம் அடைந்தே இனப்பெருக்கம் கண்டதுயிர்!
அன்பின் உணர்விற்கே ஆட்பட்ட பின்புதான்
என்புதோல் போர்த்த உயிரே எழுந்ததுவாம்!
கார்முட்டும் நீண்ட கவின்சேர் மலைச்சாரல்
சீர்முட்டும் பூக்கள் சிரித்தனவே! யாருக்காம்?

ஊருக்கா? இங்குள்ள உங்களுக்கா? எங்களுக்கா?
பேருக்கே ஏதேனும் பேசலாம்! உண்மையோ?
வண்டின்மேல் தான்கொண்ட அன்பின் வளத்தாலே
அண்ட அழைத்தே அருந்தநற் றேன்தந்தே
கொண்ட குறிக்கோள் குலப்பெருக்கம் கொண்டதுவே!
கண்டு வருகின்றோம்! அன்பின் கலப்பிதுவாம்!

* * *

பூநக்கி நக்கிப் பொழுது புலருமுன்னே
பூநக்கி[3] தேனெடுத்துப் போவதுவும், அத்தேனைக்
கூண்டில் அடைத்துக் குலப்பெருக்கம் காண்பதுவும்
ஆண்டான் அடிமைபோல் என்றும் அயராமல்
பெண்ணரசி வண்டேவல் பேணி நடத்தியே
கண்ணரசு தேன்கூட்டைக் காப்ப தெதனாலாம்?
வண்[4]டொலிக்கும் முன்கை மலரே! இதைக்கேட்டு
வண்டென்றே என்னை மனத்துள் நினையாதே!
அண்டை அயலார் எனைச்சிரிப்பர்! நற்கவிஞர்
கண்டதைத்தான்சொல்வர்! கலப்பிருக்கும்! அவ்வளவே!
அன்பின் வழிய துயிர்நிலை! அஃதறிவோம்!
செம்பொன் நிறத்தழகி! இன்னும்நான் செப்பக்கேள் :
செம்பருத்திப் பூக்கொண்டைச் சேவல் தலைதாழ்த்தித்
தும்பைச் செடிநிழல் தூங்குகின்ற பெட்டையினைக்
கூவி அழைக்கக் குதித்துச் சிறுபெட்டை
தாவி அதனருகில் சார்தலும் அன்பலவோ?
நல்ல தலைவர் நடந்துவரும் காட்சிபோல்
கொல்லைப் புறத்தினிலே குஞ்சுகள் பின்தொடரப்
பெட்டை தலைதூக்கிப் பின்முன்னும் பார்த்துவான்
வட்ட மிடுங்கழுகைக் கண்டு மரநிழல்

ஓடிப் பதுங்கக் குரலால் உணர்த்துவதும்,
தேடிப் புழுவைச் சிறுகுஞ்சு தின்பதற்குக்
குப்பையைச் சீய்ப்பதுவும், கூவி அழைப்பதுவும்
ஒப்பில்லா அன்பின் உணர்வன்றி வேறென்னும்?

* * *

தென்னை பனைமரத்தின் ஓலைச் சிறுநுனியில்
பின்ன முடியாத பேரழகுக் கூட்டையெலாம்
சிட்டுகள் பின்னிக் குடியிருக்கும் சிற்றூர்போற்
கட்டி யமைத்துக் கலகலப்பைத் தேக்கியே
பாடி இணைந்து பறந்து திரிந்துமே
கூடி இனப்பெருக்கம் கொள்தல் எதனாலாம்?

* * *

உன்பெயர்த்தி, சின்ன உளிபோன்ற கண்ணழகி
அன்னை அருகில் அமர்ந்தே உடலாட்டிப்
பாவை பரிந்தெடுத்து நீராட்டிப் பாலூட்டிக்
கோவை இதழூன்றிக் கொஞ்சுவதும், கொஞ்சிப்பின்
கண்ணுறங்கக் காலிடையில் இட்டுத்தா லாட்டியே
கண்ணுறங்கிக் கொண்டிருக்கும் காட்சிதான் என்னேடி!

* * *

வானில் தவழ்ந்து வருகின்ற வான்மதியைத்
தேன்மொழியின் நெற்றிக்கும், செவ்வாய் முகத்திற்கும்
ஒப்புவமை காட்டி உயர்கவிதை யாப்பதல்லால்
இப்புவியிற் பாவலர்கள் என்செய்தார்? இன்றுலகில்
ஏவு கணையேறி எண்ணரிய விண்ணிலவில்
தாவித் தரையிறங்கித் தன்னூடு மீளல்
அறிவின் விளைவென் றறைவார்கள்! நானோ
நெறிநின் றொழுகிய நீளன்பின் வெற்றிக்

குறியென்பேன்! கொள்கை பிறக்கும் வழிதன்னை
அறியீரோ! அன்பின் வழிய துயிர்நிலையாம்!

* * *

வீட்டுக்கு வீடு வெளிக்கதவு செப்பனிட்டுப்
பூட்டிட்டும், உள்ளே புறத்தாழ் இடுவதுவும்
அன்பால் விளைந்த அருஞ்செயலாம் என்பேன்நான்!
அன்பகத் தில்லையெனில் எத்தொழிலும் ஆகாதே!

* * *

தன்வீடு தன்பெண்டு தன்பிள்ளை என்பதுவும்,
தன்நாடு தன்னினம் தன்மொழி என்பதுவும்
எந்நாட் டவரும் இயம்புகின்ற அன்புமொழி
நன்னுட்டம் ஆகாதோ? நாம்மறுக்கக் கூடுவதோ?

* * *

எப்பொழுதோ மூளும் எதிரி படையெடுப்பை
முப்படையைக் கொண்டு முறியடிக்க, எந்நாடும்
தற்காப்புக் காகத் தனியே படைதிரட்டி
நிற்பதுவும், எல்லையிலே நிற்பதுவும் காண்கின்றோம்!
பெற்ற திருநாட்டைப் பேணியே காக்கின்ற
உற்றநல் லன்பின் உணர்வே பெரும்படைகள்!

* * *

அன்பின் வழிய துயிர்நிலை ஆகுமெனும்
இன்பத் திருக்குறளின் ஏற்றமிகு நற்றலைப்பைப்
பாடி வருகையிலே பற்றுள்ளங் காட்டாமல்
ஏடி! முகந்தொங்கப் போட்டே இருக்கின்றாய்?
உன்னன்பைப் பாடாமல் ஊர்ச்செய்தி சொல்லுவதால்
என்ன பயனென்ற ஏக்கக் கலக்கமோ?
பாட்டி ஒருநாள் பாவாடை சுற்றிநம்
வீட்டுக் கிணற்றோரம் மேல்குளித்துக் கொண்டிருந்தாள்;

மஞ்சள் அரைத்தாள்; வரிவீழ்ந்த தன்முகத்தில்
அஞ்சு விரல்கொண்டே அப்பினாள்! நான்சிறுவன்!
'பாட்டி! இதுவென்ன பாங்(கு)?' என்றேன்! அக்கிழவி
நீட்டிய சொல்லாற் 'பழைய நினை(வு)!' என்றாள்!
சாயும் நிலவொத்த தண்மதியே! நீபுதுப்
பாயாய் இருந்து பழம்பாயாய்ப் போய்விட்டாய்!
ஆனால் வயதிற்கும் அன்பிற்கும் நற்றொடர்பு
கூறாய் விடுவதில்லை! கூறக்கேள்: நான்கிழவன்!
என்றாலும் அன்போ இளமை நிறைந்ததுவாம்!
பொன்றுந் துணையும் புதுப்பொலிவு கண்டதுவாம்!
சிற்பி செதுக்கிச் சிலையாக்கி வைத்தநற்
பொற்புடைய கல்லின் புதுச்சிலையாய் நின்றாய்நீ!
கண்டேன்; களிகொண்டேன்; கண்மணியி னூடேநான்
கொண்டேன்; உனைநான் அடையும் குறிக்கொண்டேன்;
வந்தேன்; இருந்தேன்; வழிபார்த்து நின்றிருந்தேன்!
செந்தேன் அடைகாக்கும் தேன்வண்டைப் போலுன்
அண்டை இருந்தாள்! அவளையும் ஏமாற்றிக் [தாய்
கெண்டை விழிகாட்டிக் கீழ்நோக்கி மேல்நோக்கித்
தண்டெடுத்து வந்த தமிழச்சி போலொருநாள்
வண்டொலிக்க வந்த வழியை மறப்பேனோ?
சித்திரைத் திங்கட் சிறுகுளத்துப் பூப்போலச்
சித்திரைத் திங்கள் திருமுகத்தால் என்னை
வரவழைத்தாய்; வந்தேன்; மறைவிடத்தில் நின்றே
குரைத்திருக்கும் நாய்காட்டிக் கொல்லாமற் கொன்றே
மறைந்தாய் மலர்க்கொடியே! நான்மறக்கப் போமோ?
நிறைந்தாய் உளத்தில்! நிலைத்தது நல்லன்பாம்!
வண்டோச்சி வந்து மருங்கணையும் செய்தியெலாம்
பண்டைத் தமிழ்நூல் படித்ததுண்டு; செய்ததில்லை!

நீர்க்குடத்தைத் தாங்கா நிலைகுலையும் உன்னிடையைச்
சீர்செய்வ தாய்ச்சொல்லிச் சிற்றிடையை நானணைத்தேன்!
அம்மம்மா! நீசிரித்த அந்தச் சிரிப்பொலியை
எம்மால் மறந்திருக்க எந்நாளும் ஆகா!
'வருவாய்!' எனவழைத்தேன்; 'உன்வருவாய் என்ன
தருவாய்?' எனக்கேட்டாய்; 'என்வருவாய் உன்றன்
செவ்வாய்ச் சிரிப்(பு)!' என்றேன்; சீறிச் சிலைத்துமே,
'அவ்வாயும் இவ்வாயும் செவ்வாய் புதனும்போல்
சேர்ந்திருக்க வேண்டும்!' என்றாய்! செப்பக்கேள்: அந்நிகழ்ச்சி
யார்மறுக்கக் கூடும்? அது தானே அன்பின்
வழிய துயிர்நிலை என்றே வகுத்திங்(கு)
அழியாப் புகழை அளித்தார்நம் வள்ளுவனார்!
வற்றி வறண்ட மறிகடலும், பூக்கள்மேல்
சுற்றித் திரியும் சுரிவண்டும், வானில்
நிலவும் நிலவும், நிறைகதிர் வீச்சும்
உலவும் உலகம் உருண்டோடிக் கொண்டிருக்கச்
செய்யும் செயலெல்லாம், செந்தமிழே! நல்லன்பால்
வையம் வழங்கும் வழியென்றே வள்ளுவனார்,
'அன்பின் வழிய துயிர்நிலை; அஃதிலார்க்(கு)
என்புதோல் போர்த்த உடம்(பு)' என்றார்! என்றும்
இணைந்திருக்க அன்பே இனித்திருக்க அன்பே
துணையிருக்கும் என்றே துணி!

## முடிவுரை

(நாற்சீர் இரட்டைச் சிந்து)

நீளலைகள் வந்துவந்து நெடுங்கரையைத் தாவும்!
நீண்டிருக்கும் மரமடர்ந்த நெஞ்சையள்ளும் காவும்!
வாள்விழியை ஒத்திருக்கும் மணற்கழுநீர்ப் பூவும்!
மாப்புதுவைச் சீர்பாடி வரிக்குயில்கள் கூவும்!

கற்றோர்கள் நிறைந்திருக்கும் கவின்புதுவைக் கண்ணே
  கலைநிகழ்ச்சி நடத்துகின்ற கவியரங்கின் முன்னே
நற்றமிழ்ப்பா எழு[5]கவிஞர் நமக்களித்தார் சுவையே!
  நலம்பெற்று வாழ்கவென வாழ்த்தும்நம் அவையே!

நாள்: 5-4-1970

இடம்: புதுவை வானொலி நிலையத் திடல் – சித்திரைத் திருநாள் சிறப்பு நிகழ்ச்சிக் கவியரங்கம்.

தலைவர்: புதுமைக் கவிஞர் வாணிதாசன்.

தலைப்பு: அன்பின் வழியது உயர்நிலை.

குறிப்பு: சுவைஞர் முன்னிலையில் நடந்த இந்நிகழ்ச்சியை வானொலி நிலையத்தினர் 14-4-1970 அன்று வானொலியில் ஒலி பரப்பினர்.

1. பெருவயிறனும்.
2. அறிவு.
3. வண்டு.
4. வளை.
5. எழுவர்.

# 25. விடுதலை

(எண்சீர் விருத்தம்)

வான்நோக்கி நீண்டுயர்ந்த மலையுச்சிச் சாரல்
வளைந்துதவழ் நீளருவி எழுந்துவரு இங்கள்
மான்நோக்கிப் பிணைதாவி விளையாடு பாறை
வருவழியின் எதிர்ப்பெல்லாம் தூளாக்கிக் கொண்டு
தேன்நோக்கிப் பாட்டிசைக்கும் வரிவண்டிற் கேற்பச்
சிறுமுழவைப் போலிசைத்து ஆற்றோடு சேர்ந்து
கூன்நோக்கி எதிர்த்தெதிர்த்தே குறுக்கீடில் லாமல்
குலந்தழைக்க வாழ்வதுவே விடுதலையென் போமே!

கார்தேங்கும் நீளேரிக் கரையேறிப் போனேன்;
காற்றினிலே படபடக்கும் நீண்டபனை யோலைக்
கூர்தேங்கும் நுனியினிலே குருவிகளின் கூடு
குடிசெய்யும் சிற்றூர்போல் கலகலப்பைக் கூட்டச்
சீர்தேங்கும் விடுதலையின் சிறகடித்துப் புட்கள்
செயலடிமை யில்லாமல் சிறந்திருக்கக் கண்டேன்!
பார்தேங்கும் வாழ்க்கையிலே எவ்வுயிரும் எந்தப்
பணிப்பின்றி உயிர்வாழல் விடுதலையென் போமே!

நீண்டிருந்த தென்னையிலே செம்மூக்குப் பச்சை
நிறக்கிளிகள் இணைந்திணைந்து சிறகடித்துத் தாவி
ஆண்டிருந்த பசும்புதரில் செங்கோவைக் கோதி
அச்சமின்றி அடிமையின்றி ஆல்விழுதில் ஆடும்!
ஈண்டிருந்த எவ்வுயிரும் விடுதலையில் என்றும்
இனிதிருந்து வருதலையே எண்ணியெண்ணி மேலோர்
மாண்டாலும் விடுதலையில் மாள்வதுவே இன்பம்!
மக்களினப் பிறப்புரிமை விடுதலையென் பாரே!

கடல்சூழ்ந்த உலகத்தில் முடிமன்னர் நாட்டைக்
கடவுளரின் வழிவந்தோர் அரசரெனச் சொல்லி
அடல்சூழ்ந்த தோள்வலியால் குடிமக்கள் ஏய்த்தும்
அடக்குமுறை கையாண்டும் கோலோச்சி வந்தார்!
கெடல்சூழ்ந்த முடியாட்சி பயன்விளைத்த போதும்
கிளிக்கூண்டின் வாழ்க்கையிலே வாழ்ந்திருந்தார் மக்கள்!
மடல்சூழ்ந்த பூமணமும் தென்றலிளங் காற்றும்
மண்ணடிமை தீருமட்டும் மணங்கூட்டப் போமோ?

தாய்விரித்த நல்வாழ்க்கைத் தாயகத்தில் மக்கள்
தகுவலிமை அற்றதினுல் அறிவுபெற்ற சில்லோர்
பாய்விரித்த கலமேறி வழியறிந்து வந்து
படைகொண்டு குடியேறி அரசமைத்துக் கொண்டார்!
வேய்விரித்த வலைவீழ்ந்த புட்களைப்போல் மாற்றார்
வேலியின்கீழ் நசுக்குண்டு நல்லறிவு பெற்ருேர்
வாய்விரித்துத் தாயகத்தின் வளவாழ்வை மீண்டும்
வாதாடிப் பெறுவதுவே விடுதலையாம்! வாழ்க!

வாயினுக்குப் பெரும்பூட்டு; கார்மழையில் காற்றில்
வளமைக்குப் பாடுபடும் திருக்கைக்குப் பூட்டு;
தாயினுக்குப் பெரும்பூட்டு; தாயகத்தின் மேன்மை
தழைத்திடவே நினைப்போர்க்குப் பெரும்பூட்டு; கற்ருேர்
வாயினுக்குப் பெரும்பூட்டு; வந்தாண்டோர் செய்கை
மனம்நொந்து தாயகத்தின் அடிமையெனும் குட்ட
நோயினுக்குப்பெரும்பூட்டு! தேடிநாடிஆன்ற[கண்டார்!
நுழைபுலத்தார் செயற்பட்டார்; விடுதலையைக்

பெண்குலத்தார் பொற்ருெடியைப் பிரித்தாள எண்ணிப்
பின்வந்த தன்னலத்தார் பேதமைப்பெண் என்ருர்;
மண்குலத்தார் ஆணினங்கள் வண்டினத்தின் கூட்டம்
மனமொப்பி அக்கூற்றை வரவேற்றுக் கொண்டார்;

விண்குலத்தார் மீனினங்கள் இடையெழுந்த திங்கள்
மெல்லியலார் நல்லறிவு மீதூரப் பெற்றுப்
புண்குலத்தார் துயர்களையப் புதுப்போக்கைக் கொண்டார்!
புதுவிளைவு பூத்ததுவே! விடுதலையைக் கண்டோம்!

அறவழியை மக்களெலாம் ஒன்றாகச் சேர்ந்தே
அமைதியாகக் கிளர்ச்சிசெய்ய இன்சொல்லால் ஊக்கி
மறவழியைக் கனவினிலும் எண்ணாத காந்தி
வழிவகுத்தார்! அதன்விளைவே விடுதலையாம்! ஆன்ற
உறவுவழி கொள்வோம்நாம்! பிறப்பொக்கும்! இந்த
ஊராட்சி நம்மாட்சி என்கின்ற உண்மை
நிறைவழியா திருக்கட்டும்! அதுமக்கள் வாழ
நிலைநாட்டும் விடுதலையாம்! விடுதலையே வாழ்க!

தாழ்கின்ற முடியாட்சி போலின்றி எந்தத்
தனியாரும் நட்டாட்சி கைக்கொள்ளக் கூடும்!
வாழ்கின்ற மக்களெலாம் இந்நாட்டு மன்னர்!
வருவாயும் போவாயும் யாவர்க்கும் சொந்தம்!
சூழ்கின்ற நல்லின்பம், தொடர்கின்ற துன்பம்
துளியளவே யானாலும் யாவர்க்கும் பங்காம்!
வீழ்கின்ற நிலைவரினும் வெற்றிகொள்வோம் என்ற
வீரத்தை விளைப்பதுதான் விடுதலையின் போக்கே!

ஆற்றாமை என்பதில்லை விடுதலைநல் வாழ்வில்;
அவரவரின் தோள்வலிமை சொல்வலிமைக் கேற்பப்
போற்றாமை கொள்வதில்லை; புகழ்மறப்ப தில்லை;
புத்துணர்வின் நல்லுழைப்பு/தாய்நாட்டின் பற்று
மாற்றாமை எனுமெண்ணம் மக்களின எண்ணம்
வாய்பேசா திருப்பதில்லை; வழிதவறிப் போனால்
வேற்றாமை புகவழியை விடுவதில்லை யாரும்!
விடுதலையே! உயிரினத்தின் விடுதலையே! வாழ்க!

ஏழைக்குப் பெருவாழ்வும் இல்லாத ஏழை
ஈன்றெடுத்த பிள்ளைக்கும் இங்கிந்த நாட்டுக்
கூழைக்கும் பெருவாழ்வு கொடுத்தளித்தே வாழ்க்கைக்
குலம்தழைக்கச் செய்வதுதான் விடுதலையின் போக்காம்!
பேழைக்குள் பெருஞ்செல்வம் பேணிவந்த செல்வர்
பிறர்துயரம் காணாத பிற்போக்குக் கும்பல்
வாழவைக்கும் நோக்கல்ல விடுதலையின் நோக்கம்!
மாற்றாரும் மற்றோரும் வாழ்வதுவே நோக்காம்!

நாமார்க்கும் அடிமையல்லோம்; நமனையும்நாம் [அஞ்சோம்;
நம்மினத்து மனிதகுலம் எந்நாட்டில் நொந்தே
ஊமையைப்போல்இருந்தாலும் உயிர்கொடுத்துக்காப்போம்!
உயிரினத்தின் பிறப்புரிமை விடுதலையாம்! வாழ்க!
ஆமையைப்போல் ஐந்தடக்கி அறிவுவளம் பெற்றே
அடிமைவிலங் கொடிப்பதுதான் விடுதலையின் நோக்கம்!
நாம்நமையே ஆண்டிடுவோம்! நல்லறிஞர் போற்றும்
நல்வாழ்வு விடுதலையே! மனிதவின வாழ்வே!

○

நாள்: 15-8-1970

இடம்: புதுவை வானொலி நிலையம்—விடுதலை நாள் விழாக் கவியரங்கம்.

தலைப்பு: விடுதலை,

# 26. சித்திரைச் செல்வி

அவையடக்கம்

தனதன தான தனதன தான
தனதன தான தனதான—என்னும் வண்ணப்பாட்டு

கடலலை தாவிக் கரையினில் மோதக்
கழியினில் பூத்த மலரோடே
இடையிடைக் கொஞ்சி இதழ்விழி மூடி
இசையினை மீட்டும் மதுவண்டே!

கரையினில் நீண்டு கமழ்மணம் கூட்டும்
கருங்கிளைக் கொன்றைப் புதுப்பூவே!
இரையினைக் கௌவ மறைவினில் தங்கும்
எழில்மிகு தாழைப் பெருங்கொக்கே!

மறைபயில் ஆன்றோர் மலர்விழிப் பெண்கள்
வாய்மொழி கேட்கும் மணிக்கூண்டே!
குறைவிலாச் செல்வம் அணிமணி மாடம்
குளிர்மலர்ச் சோலை வருங்காற்றே!

புதுவையை நாடிப் புதுமலர் தேடிப்
பொரிமிகு வண்டும் பலபேரும்
இதுவரை இங்கே வருவது கண்டோம்!
புதுக்களி[1] நாட்டம்! பிறிதுண்டோ?

இதுவரை எங்கள் புதுவையைப் போல
இருந்தது கண்டால் இயம்பீரே!
புதுமையை நல்கும் புதுவையில் வாழும்
பொதுவறி வாக்கப் பெரியீரே!

எனதுளம் பூத்த(து) இசைத்தமிழ்ப் பாடல்!
இதிற்பிழை கண்டாற் பொறுப்பீரே!
மனமகிழ் வோடு வணங்கினன்; வாணி
மகனென ஏற்றுக் களிப்பீரே!

### சித்திரைச் செல்வி[2]

(பண்ணத்தி–எடுப்பு)

சித்திரைச் செல்வியே! வருக!—எங்கள்
செந்தமிழ்ச் செல்வியே! வருக!

(தொடுப்பு)

இத்தரை செழிக்க இன்ப வளங்கொழிக்கப்
புத்தம் புத்தாண்டின் பொன்மகளே! முன்மகளே
[திருவே! வருக!

(முடிப்பு)

வானில் மழைசிறக்க மணமலர் தேன்சுரக்கக்
கூன்மலைச் சாரல் எங்கும் குயிலின் இசைபரக்க
மானினை கண்டு கண்டு மயிலினை அடிபெயர்க்க
ஏனல் கிளியோட்டும் கன்னியர் இசைமீட்ட—

நன்செய் பழுத்திருக்கப் புன்செய் விளைந்திருக்க
நன்னீர்ப் பரப்பெங்கும் பொன்பூத் தழகுசெய்ய
மின்னல் இடைநல்லார் மெல்யாழ் இசைபயிலக்
கன்னல் மொழிச்சிறுவர் காவிய விருந்தூட்ட—

எல்லாரும் ஒன்றென்னும் எண்ண விரிவுவர
நல்லோர்கள் வல்லோர்கள் நாட்டுக் குழைத்துவர
பல்வளங்கள் ஓங்கப் பண்பு சிறந்துவர
செல்வம் கொழிக்கத் திருநாடு மேன்மையுற—

## திருமகளே! நீ வாழ்க!

(எடுப்பு)

தேனின் சுவைகூட்டும் செந்தமிழ் இசைமீட்டும்
சித்திரைச் செல்வியே! வாழ்க!—எங்கள்
திருமகளே! நீவாழ்க!—வாழ்க!

(தொடுப்பு)

வேனில் எனப்பிறந்தாய்; விரிவான் ஒளிசேர்த்தாய்!-இள
வேனில் எனப்பிறந்தாய்; விரிவான் ஒளிசேர்த்தாய்!
மானின் விழியிலுன் மலர்விழியைப் புதைத்தாய்! - இள
மானின் விழியிலுன் மலர்விழியைப் புதைத்தாய்!

(முடிப்பு)

முல்லைநகை காட்டிக் கொல்லை மலர்சிரிக்கும்!-உன்முகம்
முல்லைநகை காட்டிக் கொல்லை மலர்சிரிக்கும்!
முதிர்ந்த பலாவாழை உன்னிதழ் விருந்தூட்டும்—
தோப்பு
முதிர்ந்த பலாவாழை உன்னிதழ் விருந்தூட்டும்!
எல்லையிலா இன்பம் எங்கும் நிறைந்திருக்கும்! — நல்
எல்லையிலா இன்பம் எங்கும் நிறைந்திருக்கும்!
இன்னிசைக் குயில்பாட இளந்தென்றற் காற்றுரும்—எங்கும்
இன்னிசைக் குயில்பாட இளந்தென்றற் காற்றுரும்!

தொழிலின் பெருக்காலே எழிலின்பெருக்கம் உண்
டாம்!—கைத்
தொழிலின் பெருக்காலே எழிலின் பெருக்கம் உண்டாம்!
மொழியின் பெருக்காலே விழியின் பெருக்கம் உண்—
டாம்!—பன்
மொழியின் பெருக்காலே விழியின் பெருக்கம் உண்டாம்!

வழிவழியே முயன்ருல் வாழ்வின் பெருக்கம் உண்டாம்—
ஆன்ற
வழிவழியே முயன்ருல் வாழ்வின் பெருக்கம் உண்டாம்!
கழிபேருவகை உண்டாம் நம்நாடு பொன்ஞடு காப்
போம்!—நற்
கழிபேருவகை உண்டாம் நம்நாடுபொன்ஞடுகாப்போம்!

### சித்திரைச் செல்வியின் திருமணம்

(எண்சீர் விருத்தம்)

செவ்வாயும் அகன்ருேடும்; புதன்வந்து தோன்றும்;
திசைகிழக்கில் மையிருட்டின் கருமைநிறம் மாறும்;
எவ்வாயும் குளிர்காற்றுப் புரண்டெழுந்து வந்தே
'இன்னுமா உறக்க?'மென்றே எள்ளாமல் எள்ளும்;
தெவ்விருட்டுப் பின்வாங்கும்; சில்வண்டு வீட்டுச்
சிறுகூரை முணுமுணுக்கும்; செடிகொடிகள் மீது
கௌவையிலாச் சிட்டிணைகள் அங்குமிங்கு மாகக்
கவின்காலைத் திருப்பள்ளி எழுச்சிப்பாப் பாடும்!

புத்தாடை மணமக்கள் பூரிப்பைப் போலப்
புலர்காலை வீச்சொளியில் மரஞ்செடிகள் பூக்கும்;
எத்திசையும் பூநாற்றம்; எங்கெங்கும் பெண்கள்
இணைவிழிபோல் கயல்புரளும் குளம்நோக்கிச் செல்வர்;
முத்துப்பல் சிரிப்பொலியில் நீர்மூழ்கி ஆடி
முன்பின்ஞய்க் குடத்தினிலே நீர்மொண்டு தூக்கி
அத்தானின் [3] நகைப்பேச்சைச் சிரித்தெண்ணிக் கொண்டே
ஆடுமயில் போலசைந்தே மலைநோக்கி மீள்வர்!

இல்லத்தைத் தூய்மைசெய்வர்; இல்லத்தின் முன்னர்
எழில்தேங்க மாக்கோலம் இட்டிடுவர் பெண்கள்;
கொல்லையிலே குலைவிட்ட வாழைமரத் தோடு
குருத்தோலைத் தோரணமும் மாவிலையும் கட்டி

முல்லைப்பூ மாலையிட்டுச் சந்தனத்தைப் பூசி
முகப்பழகு செய்திடுவர் தெருவாழும் மக்கள்;
பல்வளமும் பெருகவெனச் சித்திரைப்பெண் மன்றல்
பாப்பாடிக் கைகொட்டி ஆடிடுவ ராமே!

பெருந்தென்னை மட்டைகளும், மட்டைகளைத் தாங்கிப்
பிடித்திருக்கும் கொடிமரமும், அழகூட்டும் நீண்ட
தெருவெல்லாம் காற்றாடு பூஞ்சோலை போலச்
சீர்மிகுந்து கொண்டிருக்கும்; தெருத்திண்ணை யோரம்
வருவோர்கள் போவோர்கள் வாய்குழைந்த பேச்சு
மலர்த்தேனின் சுவை;[4] சாதா ரணமல்ல! இங்கே
உருமாறி [5]விரோதியென வந்தமாப் பிள்ளை
உலகத்துப் பெரும்பகைக்குப் பகையன்றே கொள்வோம்!

மங்கலவாழ்த் தலையொலிக்கும்; வரிக்குயில்கள் பாடும்;
மலர்ச்செடிகள் பூச்சொரியும்; அருவிமுழ வார்க்கும்;
தங்கநிற விடிவெள்ளி மாப்பிள்ளைத் தோழன்,
தங்கையாம் சித்திரைக்குத் தருந்தமண வாளன்
எங்குள்ளான் எனத்தேடத் தொடுவான் மீதில்
எழுந்திருந்தான் செங்கதிரோன்! மணமக்கள் வாழ்க!
'செங்கையாள் சித்திரைக்கு விரோதிமண வாளன்'
சிரித்தார்கள் என்றாலும் வாழ்த்துரைத்தார் மக்கள்!

கடந்தோடிப் போய்விட்ட நாளெல்லாம் சாதா
ரணநாளாய் எண்ணியெண்ணிக் கவலைகொள்ளும்
நடக்கின்ற திருமணநன் னாள்மறப்ப தில்லை; [பெண்கள்
நம்நங்கை சித்திரைப்பெண் இதில்விலக்கா? சொல்வீர்!
இடக்கையால் மணவாளன் தன்கையைப் பற்றி
எழுந்துவலம் வருகையிலே மெய்துடிக்கப் பள்ளி
நடந்துபின் தோழியோடு பேசுகின்ற இன்ப
நயங்கண்டாள்; கடைக்கண்ணால் ஆளையும்கண்டாள்!

## மணமக்கள் வரவேற்பு

மன்றத்து மாப்பிள்ளையை வரவேற்கும் போது
மாமியார்க்கே கொண்டாட்டம்; மாமனுக்கஃ(து)
[இல்லை!
இன்றுள்ள நிலையிதுவாம்! இதில்தொக்கி நிற்கும்
இன்பத்தை யாரறிவார்? அதுபெண்டிர் செய்தி!
கொன்றைமரம் பூச்சொரியும்; குலைவாழை தாழும்;
குளத்தினிலே இளநாகு தலைமுழ்கி நீந்தும்;
அன்றலர்ந்த தாமரைப்பூ தலையாட்டி வாழ்த்தும்;
சித்திரைப்பெண் அழைத்துவந்த விரோதியினைக்
[கண்டே!

மணப்பெண்ணை மாப்பிள்ளையை வரவேற்க ஒவ்வோர்
வாயிலிலும் பல்லோர்கள் சூழ்ந்திருக்கக் கண்டோம்;
மணப்பெண்ணின் முழுத்தோற்றம் இளவேனில்
[தோற்றம்;
வாய்ச்சிரிப்பை முல்லைமலர் பாய்விரித்துக் காட்டும்;
இணையிதழ்கள் செவ்வல்லி; பன்மலர்த்தேன் மாந்தும்
இனத்தாரைப் போல்வண்டு எழுந்திசைத்துப் பாடும்;
துணையில்லார் மூச்செறிவர்; விரோதிக்கு வாய்த்த
தூயதமிழ்ச் சித்திரைப்பெண் தோற்றத்தைக்கண்டே!

தாமரையைப் போன்றமுகம்; தாமரையே கண்கள்;
தண்கடலின் அலைகூந்தல்; பிறைத்திங்கள் நெற்றி;
காமருவு தெங்கிளநீர் கவின்மிகுந்த மார்பு;
கடந்தவரும் தெங்கிளநீர் கண்டொதுங்கல் இல்லை!
மாமருவு நீள்மலைமேல் வளர்ந்திருக்கும் மூங்கில்
களிறுக்கு வளைத்தூட்ட வரும்பிடிபோல் இன்று
தேமருவு சித்திரைப்பெண் நடந்துவரக் கண்டோர்
கிறுகிறுப்பை ஊர்மக்கள் தெருச்சிரிக்க வைத்தார்!

## சித்திரையைக் கண்டோர் நிலை

கைநீட்டிப் படியேறி வருகின்ற ஏழை
கண்குளிர மனம்குளிர எச்சில்கை ஓட்டார்
வைநீட்டி நெல்லளந்து கிடங்கறையில் வைத்து
மற்றவர்க்கும் வழங்காது தானுண்ணுக் கஞ்சன்
மெய்சிலிர்க்க உளங்குளிர வீசுகின்ற இன்சொல் [கண்டு
மெல்லிடையாள் சித்திரைப்பெண் இடைகுலுங்கக்
'வைகுதலை வெறுத்தாரும் வைகுதலும் உண்டோ?
வைகுதலும் உறங்காரே! வையத்து வாழ்க்கை!

திருவாய்க்கே அவல்கிடைக்காப் போழ்தெல்லாம் வேறு
சிற்றுமியை மெல்கின்ற வாயாடிப் பெண்கள்
செருக்கான விரோதியொடு சேர்ந்துவரு கின்ற
சித்திரைப்பெண் நிலைகண்டு கண்சிமிட்டிக் கொண்டு
வருகின்ற ஆண்டெல்லாம் துணிமாற்றல் போல
மணவாளன் மாற்றுகின்றார்; கூத்தென்று சொன்னார்;
ஒருபெண்ணோ, 'இல்லையில்லை; பாஞ்சாலி' என்றாள்!
உரையாடல் கேட்டிருந்த விருந்தினர்கள் சிரித்தார்!

ஐயாறு முப்பதென்பர்; அதையிரட்டி வைத்தால்
அறுபதென்பர் வாய்பாட்டை மனப்பாடம் செய்தோர்!
'கைவைத்தும் கால்வைத்தும் கலங்காத ஊற்றுக்
கானருவி சித்திரைப்பெண் ஆண்டுகள்ஒவ் வொன்றும்
பொய்யாகிப் போகவில்லை; மணமாலை சூடிப்
புத்தாண்டுக் கன்னியென்றே பொலிகின்றாள்;இந்த
வையத்தில் அறுபதுபேர்க் கவளொருத்தி யானாள்!
கைகாரி!' என்றொருத்தி வாயூறிப் போனாள்!

'பெண்விரும்பா விட்டாலும் கட்டாய மாகப்
பேசிமணம் முடிக்கின்ற பெற்றோரைப் போலக்
கண்கெட்ட செருக்கான விரோதிக்கே இந்தக்
கனிமயிலைச் சித்திரையை மணம்பேசி வைத்தார்;

புண்பட்டுப் போகாதோ வாழ்க்கைநலம்' என்றே
புலம்பினாள் மற்றொருத்தி; 'நாளாக வாகப்
பண்பட்டுப் போகுமடி ஒருபிள்ளை பெற்றால்
பாரேன்நீ!' எனச்சொன்னாள் பஞ்சாங்கப் பாட்டி!

'செருக்கான விரோதியுமே யானாலும் பெண்கள்
சிரிப்பொலியில் கைப்பாவை சிறைக்கிள்ளை ஆவார்;
தெருக்காணும் உண்மையிது; தலையணையின் உள்ளே
செய்துவைத்த மந்திரமாம்; அறியாதார் உண்டோ?
உருமாறிக் குணம்மாறித் தொடர்ந்துவரு நீழல்
ஒப்பாரே ஆணினங்கள்; சித்திரைப்பெண் இந்தத்
திருவெல்லாம் வரப்பெற்றாள்' என்றொருத்தி சொன்னாள்;
சிரித்தார்கள் தெருத்திண்ணைப் பாட்டிமார்கள் எல்லாம்!

பதினொரு பெண்களுடன் பிறந்துவந்த செல்வி;
பதினொரு தங்கைகளும் தனைமணந்த ஆளன்
புதிதாக மணம்பேசித் திங்களொன்று போக்கிப்
பூரிப்பில் திளைத்திருக்கப் பொறுத்திருக்கும் செல்வி;
இதுபெண்கள் ஏற்காத செயலென்று சொல்லி
இங்குள்ள தாய்மார்கள் எனையேச வேண்டாம்!
பொதுப்பெண்டிர் திருமனைக்கே கூடையினில் வைத்துப்
பொதிசுமந்து போனகதை நாம்மறக்கப் போமோ?

'பல்லிளித்துக் கண்சிமிட்டி அயலகத்துத் தோழி
பள்ளிக்குச் செல்கையிலே சித்திரையைப் பார்த்தே
எல்லோரும் உன்பேச்சே பேசுகின்றார்; மாலை
இட்டேற்ற மணவாளன் பெயரென்ன?' என்றாள்;
'நல்லோர்கள் பகையென்றே நவில்கின்றார்' என்றே
நறுக்கென்றே சித்திரைப்பெண் பதில்சொல்லிப் போனாள்;
சொல்லுவரோ பெண்மக்கள் தம்கணவர் பேரைத்
தூயதமிழ்ப் பெண்டிரின் தொன்றுதொட்ட பண்பாம்!

## சித்திரைச்செல்வியின் செயல்

வறுமையும் நீள்பிணியும் மலிந்திருக்கும் நாட்டில்;
மணம்பெற்ற விரோதியும் சித்திரைப்பெண்ணாளும்
முறைமுறையே வழிகாட்டி முன்னேற்றம் காட்டி
முனைந்துபணி புரிவாரோ எனுமையம் வேண்டாம்;
நெறிமுறையில் பகைவர்க்கும் அருள்கவெனும் ஆன்ற
நிலைமாறாள் சித்திரைப்பெண் என்றென்றும் நல்ல
குறியுடையாள்; குலவிளக்கு; கொடுமையினை மாற்றிக்
குடிசெய்வாள்; அவள்வழியே வளம்செழிக்கும் நாடே!

கைத்தொழிலைப் பெருக்கிடுவாள்; கார்பொய்த்த போதும்
கழனிகளை விளைத்திடுவாள்; கல்விநலம் சேர்ப்பாள்;
மெய்த்தொழிலை விரும்பாத சோம்பேறிக் கெல்லாம்
விளக்கத்தைத் தந்துடலின் நலம்சேர்க்கச் செய்வாள்;
பொய்த்தொழிலைப் போர்த்தொழிலைப் பொறுப்பேற்று [நீக்கிப்
பொதுவான[7] குமுதாயம்பொலிந்தோங்கச் செய்வாள்;
வைத்திழந்து போகாமல் மாற்றார்க்கும் ஈந்தே
வாழ்வாங்கு வாழ்ந்திருக்க வழிகாட்டி யாவாள்!

[8]சாலையிலே தாய்மொழியும் பிறமொழியும் கற்றுத்
தகுவேலை கிடைக்காமல் தவிக்கின்ற மக்கள்
காலையிலே எழுந்திருந்து பல்துலக்கி யுண்டு
கவலையொடு கலையாத உடையணிந்து கொண்டு
சாலையிலே திரிவதல்லால் வேறென்ன செய்வார்?
தாய்தந்தை யின்குறைவா? அரசாள்வோர் போக்கோ?
வேலையிலே இழிவான வேலையென்ப தில்லை!
வெறுக்காதீர்! எனச்சொல்லி மேன்மைபெறச் செய்வாள்!

இருட்பெருக்கம் போக்குதற்கோ ஒளிப்பெருக்கம்
[வேண்டும்;
இடைப்பெருக்கம் போக்குதற்கோ நடைப்பெருக்கம்
[வேண்டும்;
மருட்பெருக்கம் போக்குதற்கோ மனப்பெருக்கம்
[வேண்டும்;
வாய்ப்பெருக்கம் போக்குதற்கோ நூற்பெருக்கம்
[வேண்டும்;
உருட்பெருக்கம் போக்குதற்கோ வழிப்பெருக்கம்
[வேண்டும்;
ஊன்பெருக்கம் போக்குதற்குப் பசிப்பெருக்கம்
[வேண்டும்;
திரட்பெருக்கம் போக்குதற்குச் செயற்பெருக்கம்
[வேண்டும்;
சித்திரைப்பெண் இவையெல்லாம் செயற்படுத்தி
[வைப்பாள்!

விலைவாசி யேற்றத்தை மிகுவிரைவில் தாழ்த்த
விளைபொருட்கள் பெருக்கத்தை மிகுவிரைவிற்
[சேர்ப்பாள்;
கலைசெழிக்க உளஞ்செழிக்கக் கார்வானம் செழிக்கக்
கற்கின்ற கல்லூரி உயர்பள்ளி செழிக்கத்
தலைவாரி முகம்பார்க்கும் கண்ணாடி போன்ற
தளிர்வாழை இலையுணவு பல்சுவையிற் செழிக்கச்
சிலைவிழியாள் சித்திரைப்பெண் செயற்படுத்தும் இல்லச்
செழிப்பினிலே நம்நாடு விழிப்படையும் நீடே!

○

நாள்: 13-4-1971 செவ்வாய் மாலை 6-30—8-00.

இடம்: புதுவை-காந்தி திடல்.

தலைப்பு: 'சித்திரைச் செல்வி'-பாட்டுடைக் கவியரங்கம்.

அமைப்பு: புதுவை வானொலி நிலையம்—புதுவை அரசின் ஒத்துழைப்புடன் இந்திய அரசாங்கச் செய்தி ஒலிபரப்புத் துறை அமைச்சகத்தால் ஏற்பாடு செய்யப்பெற்ற பல்துறைக் கலைவிழா.

குறிப்பு: பொதுமக்கள் முன்னிலையில் நடைபெற்ற இவ் விழாவின் நிகழ்ச்சிகளை 14-4-1971 மாலை 6-15 மணிக்கும், இரவு 8-15 மணிக்கும் புதுவை வானொலி நிலையம் ஒலிப்பதிவு செய்து ஒலிபரப்பியது.

1. 'மதுவுண வன்றிப்'—வேறு பாடம்.

2. எட்டையபுரம் நரசிம்மனால் இசையமைக்கப்பெற்று, புதுவை லோகநாதனால் புதுவை வானொலி நிலைய இசைக் குழுவினருடன் பாடப்பெற்று, 14-4-1971 இரவு 8-15 மணிக்குப் புதுவை வானொலி நிலையத்தில் ஒலிபரப்பப்பட்ட இசைப்பாடல்.

3. நகைப்பேச்சு—முத்துமாலை என்னும் நகை பற்றிய பேச்சு; இன்பப் பேச்சு; விளையாட்டுப் பேச்சு.

4. சாதாரண—கடந்த தமிழ் ஆண்டின் பெயர்.

5. விரோதி—நிகழும் புதுத் தமிழ் ஆண்டின் பெயர்.

6. வைகுதல்—முறையே புணர்தல்; நீங்குதல்; விடிதல்.

7. குமுதாயம்—மக்கட் கூட்டம்; சமுதாயம்.

8. சாலை—முறையே பள்ளிச்சாலை; வீதி.

# 27. இராவணன் விழா

## தமிழ்த்தாய் வாழ்த்து
(கலிவிருத்தம்)

வான மேவிய மாக்கதிர் ஞாயிறு
கானல் கக்கிடக் கண்டனம் பூமியை!
ஏனல் நெய்தல் குறிஞ்சிம ருதமும்
ஆன போழ்தினில் ஊனுயிர் ஆனதே!

நீர்நி லம்வளி தீயொடு வானெனும்
சேர்க்கை யின்வழிச் சீர்பெறு நல்லுயிர்
போர்பு ரிந்துமே புத்துணர் வெய்திடும்
ஆர்ப்பில் தோன்றின அஞ்சொல் விளக்கமே!

அந்த நாள்முதல் இந்தநாள் ~~அமைப்பிலும்~~
பந்தி பந்தியாய் வாழுபல் லூனுயிர்
சிந்து மூச்சொலி செம்மொழிச் சொற்களாய்
வந்து தேங்கி வரிவடி வானதே!

கல்லும் தோன்றிடக் கார்வளி தோன்றிட
அல்லும் தோன்றிட ஆர்கலி தோன்றிடப்
புல்லும் தோன்றிடத் தோன்றிய மண்ணினில்
சொல்லும் தோன்றிடத் தோன்றிய தேதமிழ்!

உந்தி முட்டியே ஊனினம் மூச்செறி
வந்த சொற்களை வாழ்க்கை யறிந்தவர்
சொந்த மொழியெ ~~னச்சொல்லிப்~~ போற்றியே
வந்த னர்மண்ணில் வாழ்ந்திடு மக்களே!

அசைவில் தோன்றிய ஆர்பொலி நாட்செல
இசையும் கூத்தும் இயலுமாய் மாறிப்பின்
அசையும் சீர்தளை யாப்பென ஓங்கிமீ
மிசையில் செந்தமிழ் வெற்றியைக் கண்டதே!

மற்றமொழிகள் வாய்வரா நாள்முதல்
உற்றமொழியொன் றுண்டென மேலவர்
சொற்ற சொற்கள்நம் தீந்தமிழ்ச் சொற்களே!
மற்றிம் மண்ணிடை யாவர் மறுப்பரே!

முன்னர் மூத்தவள் தீந்தமிழ் இன்றியே
இன்னும் காட்டிடப் பேச எவருளார்?
பன்ன ரும்மொழிப் பாவலர் கூற்றிதே!
கன்னிச் செந்தமிழ் என்றுமே கன்னியாம்!

வாழு மண்ணிடம் நான்கிலொன் ருகுமாம்!
சூழு மக்களின் வாய்வரு சொல்லெலாம்
ஆழ நோக்கிடில் தீந்தமிழ் அன்னையின்
[1]காழ லாதுபின் காட்டுதல் கூடுமோ?

அன்ன செந்தமிழ்த் தாயின் அழகொளிர்
புன்னை பொன்சொரி பூக்கள்ம லிநெய்தல்
தென்னன் கேரளன் சீர்மிகு சோழனின்
பொன்னைத் தீந்தமிழ்ப் பூவையைப் போற்றுவோம்!

இலகு செந்தமிழ் இன்னிசை கூட்டிடும்
பலசு வைமிகு பாவின மாகிய
கலிவி ருத்தமென் காரிகை பாடியே
தலைகு னிந்துநம் தாய்மொழி வாழ்த்துவாம்!

## அவையடக்கம்
(கொச்சகக்கலி)

அலைபரந்து கரைமோத அடர்தாழை நீள்புன்னைத்
தலைபரந்து பூச்சொரியும் தமிழகத்துப் பெருநாட்டின்
மலைபரந்து புகழ்சேர்க்கும் மாக்கவிஞர் உறைவிடமாம்
கலைபரந்து நனிசிறக்கும் கற்றோர்வாழ் புதுவைநகர்!

போதேதோ இல்லாத பொய்கையினைப் போன்றவர்கள்
ஏதேதோ பாடிடுவர்; எங்கிருந்தோ வந்திடுவர்;
காதேதோ கேளாத கருத்துடையார் ஆயினுமே
கோதேதும் காணாது கொண்டணைக்கும் புதுவைநகர்!

கையேந்தார்இல்லையெனில்கருத்தேந்தார் இல்லையிங்கே!
பொய்யேந்தார் இல்லையெனில் புகழேந்தார் இல்லையிங்கே!
மையேந்தார் இல்லையெனில் வாழ்வேந்தார் இல்லையிங்கே!
தையேந்தார் இல்லையெனில் தமிழ்ஏந்தும் புதுவைநகர்!

தன்மானம் உண்டிங்கே! தலைதாழ்த்தல் இலையிங்கே!
பொன்மானம் உண்டிங்கே! புன்செயலோ இலையிங்கே!
கன்மானம் உண்டிங்கே! கயவர்வாழ் விலையிங்கே!
பண்மானம் உண்டிங்கே! பண்பேந்து புதுவைநகர்!

வாழ்கின்ற சான்றோரே! வந்துள்ள தாய்மாரே!
சூழ்ந்துள்ள தோழர்காள்! எதிர்காலக் குழந்தைகளே!
ஆழ்ந்தறிந்து தீந்தமிழில் அடலேறும் இராவணனின்
வாழ்புகழைப் பாட்டிசைக்க வந்துள்ள இளங்கவிகாள்!

கொச்சகப்பாப் பாடியிங்கே கும்பிட்டுக் கேட்கின்றேன்;
பச்சைப்ப சுந்தமிழன் தன்மானப் பாசறையான்!
அச்சத்தை என்றென்றும் அறியாத இராவணனின்
மெச்சுபுகழ் பாடுமவை வீற்றிருந்து கேட்பீரே!

## இராவணனின் சிறப்பு

(வெண்கலிப்பா)

பொன்விளையும் நன்செய் புனல்விளையும் நீளாறு
மின்விளையும் கார்வானம் மிக்க தமிழகத்தின்

தெற்கே கடல்சூழ்ந்த சீரார் இலங்கையினை
உற்றே அரசாண்டான் ஒப்பில் தமிழ்மன்னன்;

வீரத் தமிழ்மறவன்; விறல்வேந்தன்; தன்மானச்
சூரன்; குடிபழி தூற்றாத செங்கோலன்;

தார்வேந்தன்; மக்கள் தம்நலமே தன்னலமாய்ப்
பாராண்டு வந்த பழந்தமிழன்; நம்முன்னோன்;

தென்னிலங்கைக் கோமான்; சீர்த்தி நனிமிகுக்கும்
மன்னன் இராவணன்; வற்றா வளமுடையோன்;

எண்ணும் எழுத்தும் இலக்கியமும் இலக்கணமும்
பண்ணும் முறையே பயின்றநற் பாவலனும்!

பூத்திருக்கும் பொய்கை புதரில் மலராடி
வாய்த்திருக்கும் தேன்மாந்தி வற்றா இசைமிழற்றும்

பொரிவண்டு போலென்றும் புத்தம் புதுப்பாடல்
விரிவாகப் பாடும் மேலோன்; இசைக்கென்றே

தனிஒருநூல் தந்தோன்; தமிழ்மறையைக் கற்றோன்;
நனிசீர் ஒழுக்க நலங்கொண்டோன்; நாடாளும்

அறமும் மறமும் ஆன்ற படைவலியும்
உறப்பெற்று நன்னெஞ்சம் உறப்பெற்ற மேலோனும்!

உள்ளத் துணர்வை உணர்த்தும்மெய்ப் பாட்டசைவால்
உள்ளம் நிலைநிறுத்தும் ஒப்பில்லாக் கூத்தறிந்தோன்;

கண்டு வியக்கும் கூத்தின் கலையறிந்தோன்;
எண்டிசையும் போற்றும் இன்முகத்தான் இராவணனும்!

வானம் எழுந்து வருபரிதி பொன்னிறத்தை
மானும் உடலழகு வாய்த்த மறத்தமிழன்;

கொல்லும் புலியேற்றைக் குகைவாழ் சிறுத்தைகளை
வெல்லும் மறத்தோளன்; வெற்றியன்றித் தோல்வியினை

அல்லும் பகலும் அறியாதான்; ஆன்றவிந்த மேலோரின்
சொல்லின் வழியே தொடர்ந்து செயல்படுவோன்;

பொன்சொரியும் புன்னை புனல்சொரியும் ஆழ்கடல்சூழ்
தென்னிலங்கை மக்கள் செழுமைக்கும் வாழ்விற்கும்

அன்னையாய் நின்றோன்; அறநெறியைத் தப்பாதான்;
மின்னிடையார் பெண்ணினத்தை மேவி வளர்க்கும்

'பெற்றெடுத்த தாய்தந்தை' என்றுபல பேசுகின்ற
சுற்றம் உடையான்; தோள்வலிமை மிக்குடையான்;

அச்சம் அறியான்; அறனல்ல செய்தறியான்;
மெச்சும் பெரும்புகழே மேவியவன்; தாய்மொழியாம்

தீந்தமிழை வாழ்வின் செல்வப் பெருக்கெனவே
ஆய்ந்துணர்ந்து கொண்ட அறவோன்; பரிசேற்க

வந்தோர் மனங்குளிர வான்தவழும் கார்போன்றே
தந்தோன்; தன்மான நீள்புகழைத் தந்தோனும்!

எதிர்நின்று போராடும் இயல்புடையோன்; ஆரியர்போல்
புதர்மறைந்து பாயும் புலியல்லன்; புறப்புண்ணைக்

கண்டு வடக்கிருந்த தமிழ்மன்னர் கால்வழியில்
பண்டிருந்து வந்த தமிழர் பரம்பரையாம்!

வஞ்சமும் சூழ்ச்சியும் மலிந்திருந்த தம்பிக்கும் [யோன்;
நெஞ்சில் இடங்கொடுத்தோன்; நீங்காத பற்றுடை

பெண்கொலையே எண்ணாத பெற்றியோன்; நீளிலங்கை
மண்ணிற்கு நல்ல வரலாற்றைத் தந்தவனும்!

அண்ணல் குழந்தை காவிய ஆணழகன்;
விண்போல் விரிந்த புகழோன்; தன்மானம்
உற்றோர் வியக்கும் உறவோன்; ஆன்றறிந்த
கற்றோர்கள் போற்றும் கழல்மறவன்; வீரன்!
இந்நாளே பொன்னாளாம்; ஏற்றமிகு இராவணனின்
மன்னுபுகழ் பாட வாய்த்த திருநாளாம்!
கம்பன் கதைத்துவிட்ட கருத்தில்லாக் காவியத்தை
நம்பி அறிவிழந்த நற்றமிழர் வாழ்விற்குப்
புலவர் குழந்தை பொருளோடும் யாப்போடும்
உலகோர் வியக்க ஒப்பில்லா இராவண
காவியத்தைத் தந்தார்; கற்றோர் புகழ்கின்றார்!
சேவடிக்குத் தீந்தமிழ்த்தாய் சிலம்ப டிக்கே
ஏற்றம் நனிசெய்த ஏந்தல் குழந்தையைப்
போற்றுவோம் வாழ்க பொலிந்து!

முதலமைச்சர் வாழ்த்து
(இராவண காவியத் தடை நீக்கியதற்கு)

கன்னித்தமிழ்க் கவிபாடிடு கருத்தேமிகு கவிகாள்!
முன்னர்த்தடை விதிநீக்கிய இந்நாள்தமிழ் முதல்வர்
கன்னல்மொழிக் கருணாநிதி காத்தார்;தமிழ் காத்தார்!
முன்னர்அவர் புகழ்பாடுதல் முறையேதமிழ் முறையாம்!

தடைபோட்டவர் தமிழ்நாட்டினை முன்னாள்அர சாண்டார்;
நடைபோட்டனர்; இன்றோதமிழ் நாட்டின்பகை ஏற்றார்;
கடைபட்டவர் செயல்மாற்றிய கருணாநிதி முதல்வர்!
மடைவற்றிடா வயல்போல்வளம் மலிந்தோங்கிடு நீடே!

குயில்பாடிடு மயிலாடிடு குளம்பூத்திடு நன்செய்
வயல்மேவிய மயலார்திருக் குவளைதரு செம்மல்
பெயல்மேவிய வான்போல்பல பேறும்நனி பெற்றே
செயல்மேவிடச் சீரோங்கிட வாழ்த்துவம்நல் வாழ்த்தே!

(அறுசீர் விருத்தம்)

கள்ளத்தை மனத்தில் காத்துக்
கருத்தினை மறைத்துக் கொண்டால்
உள்ளமே சிரிக்கும்; அந்தோ!
உப்பிலா வாழ்க்கை யாகும்!
உள்ளத்தைத் திறந்து பேசல்
உயர்குணம்; புகழும் உண்டாம்!
தெள்ளரும் வித்தை கற்றோர்
செயலிதாம்; போற்று வோமே!

முடிவுரை

செல்வர்காள்! தீந்தமிழின் சிறப்பெண்ணும் பெரியீரே!
நல்லவர்காள்! நமது தமிழ் நாடாளும் அரசினரே!
வல்லவர்கள் தமிழ்மக்கள்; வருவிருந்தை நனியேற்றுப்
பல்வளமும் நிறைந்திருந்த பழந்தமிழைப் பறிகொடுத்தார்!

ஒண்டவந்த பிறநாட்டார் உயிர்க்கஞ்சும் கோழைகளைக்
கண்டிருந்தும் நம்துகை கால்களெலாம் சோர்ந்தனவோ? |ம்ம2|
அண்டவந்தோர் நமைஅழித்தார்; அறிவிழந்துநிற்கின்றோம்!
பண்டிருந்தபழம்பெருமை பகைவீழ்த்தும் தோளெங்கே?

தென்னிலங்கை இராவணனைச் செழுவளத்து முடியரசை
முன்நினைத்தால் முனைப்பேறும்; முதுகுக்கூன் முறுக்கேறும்;
என்குலத்தீர்! புதுவைவாழ் எனதருமைத் தாய்மாரே!
பின்குலத்தார் சிரிக்கின்றார்; பிறர்பழிக்க வாழ்வதுவோ?

நாமேதான் நடந்துவழி நலஞ்சேர்க்கும் நயமுடையார்
தேமதுரத் தமிழுக்குத் திரண்டுள்ளோம்; இராவணனின்
மாமதுரத் தமிழ்பாட மறந்தோர்க்கும் நினைவுறுத்தப்
பூமதுரப் புதுவைநகர் முதன்முறையாய்ப் போற்றுதுவே!

மக்கட்கும் நமதருமை மகவுக்கும் இராவணனின் மிகு[
மிக்கபுகழ்ப் பெயர்வைப்போம்; விழாவெடுப்போம்; அறிவு
தக்கோரை அழைத்திங்கே தமிழ்வளர்ப்போம்; அதுவேநம்
அக்கறையாம்; தன்மானம் அரசோச்சும்; வாழ்வோமே!

(அறுசீர் விருத்தம்)

இதுவரை எனது பாடல்
எனதரும் கவிஞர் பாடல்
புதியன கூறக் கேட்டுப்
பூரித்தீர்; புதுவை மக்காள்!
வதுவையில் மகிழும் நல்ல
மணமக்கள் போல என்றும்
புதுமையை ஏற்றீர்! நன்றி!
பொலிவுடன் வாழ்க நீடே!

O

நாள்: 6-6-1971 ஞாயிறு காலை 8-30 மணி.
இடம்: நகர மன்ற அரங்கம் (ஓதியஞ்சாலை), புதுவை.
இராவணன் விழாக் கவியரங்கம்.
தலைவர்: கவிஞரேறு வாணிதாசன்.
தலைப்பு: 'உள்ளந் திறந்து பேசட்டும்.'
1. காழ்—மூளை.

# 28. தொழில் வளர்ப்போம்!

(வெண்கலிப்பா)

கார்முழக்கம் வானில்; கடல்முழக்கம் நீள்கரையில்;
ஏர்முழக்கம் சிற்றூர் இடமகன்ற படப்பையிலே;
தென்றல் மணம்பரப்பச் சில்வண்டு யாழ்மீட்ட
மன்றல் அயரும் மணவறைகள்; வாழ்த்தொலியைக்
கேட்டு மனங்குளிரக் கீழ்கண்ணால் காதலரை
நோட்டம் விடுகின்ற நூலிடையார் கன்னியர்கள்
நடைபயிலும் நம்நாட்டில், தென்னாட்டில், தமிழகத்தில்,
மடைவற்றா நன்செய் வளம்பெருக்கும் முதலமைச்சர்
கருணாநிதியார் அரசோச்சுங் காலத்தில்
உருவாகும் பொற்காலம் உமதுபொற் காலமே!
முதலில் தமிழ்வாழ்த்தி முதலமைச்சை வாழ்த்திப்
புதுமைப் பொலிவேற்றும் பொற்காலம் வாழ்த்துவமே!
கற்காலந் தாண்டிக் கவின்சேர் தமிழகத்தில்
பொற்காலங் கண்டென்றும் பூரித்த மக்கள்நாம்!
பிற்காலம் வேற்றார் பிடிப்பில் இருந்ததனால்
நெற்பதராய் ஆனோம்; நிலைகுலைந்தோம்; என்றென்றும்
பொருள்மிகுதி கண்டாலே பொற்காலங் கண்டிடலாம்!
வருவாய் மிகமிகவே வாழ்க்கை வளங்கொழிக்கும்!
வழிவழியே மக்கள் வாழ்க்கையின் தேவைக்குத்
தொழிலைத் துணைகொண்டார்; நாமும் தொழில்
[வளர்ப்போம்!

உழவுத் தொழில்வளர்ப்போர் உயிரை வளர்ப்போராம்!
பழகுதமிழ் நாட்டீர்! பசுமைப் புரட்சிசெய்வோம்!

ஏர்தேக்கி நன்செய் இடையிடையே வரப்பிட்டு
நீர்தேக்கிச் செந்நல் நிரைதேக்கிப் பயிரிட்டால்
உயிருக்குப் பசியில்லை; ஊனுக்கு நோய்இல்லை;
அயலார்க்கும் ஈந்தே அதனால் பொருள்பெறலாம்;
சாலை நடவுகளும் சாயாத நெல்விதையும்
சூலைநோய் மாற்றுந் துளிமருந்தும் நல்லுரமும்
உழவர்க்கு நமதரசு ஓடோடி வந்து
வழங்கப் பயிர்த்தொழிலை வளர்ப்போம்; வளர்ப்போமே!

சிற்றூரின் உள்ளே திறந்த மனைவெளியில்,
சுற்றியுள்ள வேலியிலே துளிர்த்திருக்கும் நொச்சிக்
கொம்பொடித்துக் கூடை குறுந்தட்டு செய்திடுவோம்!
வம்பளக்கும் காலம் வருவாயை நல்கிடுமே!

நீண்ட பனைதென்னை நெட்டோலைக் குருத்தெடுத்து
வேண்டும் பொருள்பலவும் விளையாட்டாய்ச் செய்திடுவோம்!
மண்பிசைந்து பானை வடிதட்டு தோண்டி
கண்பறிக்கும் அழகழகுக் கைப்பொம்மைசெய்திடுவோம்!

கோழி வளர்ப்போம்; குறும்பாடு நாம்வளர்ப்போம்;
தாழி நிறைக்கத் தரும்பால் எருமைகளைக்
கன்றைப் பசுவைக் கவின்மிகுந்த காளைகளை
என்றும் வளர்ப்போம்; எளிஞர் தொழிலிதுவாம்!
பருத்திநூல் வேட்டி, பலவண்ண மேலாடை,
திருத்தமுற நெய்த சிற்றாடை, பட்டாடை,
நெய்துதொழில்வளர்ப்போம்; நிலைவருவாய் பெற்றிடுவோம்!
எய்திடுவோம் இன்பம்; இழிதொழிலே இல்லையென்போம்!
எத்தொழிலைச் செய்தாலும் எவரெவரே யானாலும்,
அத்தொழிலின் மேன்மையே அவரவரின் பொற்காலம்!
குடிசைத் தொழிலெனவே கூறிடுவர்; ஆனாலென்?
குடிசைத் தொழிலே குடிசெழிக்கும் நற்றொழிலாம்!

தொழிலும் உழவும் தொடர்ந்து வளர்ந்தாலே
அழியாப் பொருளின் அடிப்படை சீர்படுமே!

ஏழைக்கு வாழ்வளிக்க எண்ணும் தமிழரசு
வாழவைக்க வந்துள்ள வளமார் கலையரசு!

திருக்குவளை அஞ்சுகத்தாய்ச் சிரிப்பின் விளைவுப்
பெருக்காம் கருணா நிதியனார், பேச்சழகர்,

தொழில்வளர்க்க எண்ணும் பலர்க்கும் துணையாய்
வழிகாட்ட வந்துள்ளார்; தொழில்வளர்ப்போம் வாரீர்!

இழிவில்லை எத்தொழிலும்; இதைமறக்க வேண்டாம்!
அழியாத பொற்காலம் அடைந்திடுவோம் என்றும்!

நாட்டின் தொழிற்பெருக்கம் அரசின் நலப்பெருக்கம்!
வீட்டின் வளப்பெருக்கம் மேவும் தொழிற்பெருக்கம்!

சந்துபல வானாலும் சாருமிடம் ஒன்றேபோல்
எந்தத் தொழிலானாலும் ஏற்றம் மிகும்நாடே!

வீட்டுக்கு வீடு தொழிலை வளர்த்திடுவோம்!
நாட்டுக்கு மக்கள் நலம்சேர்க்கும் தொண்டிதுவாம்!

மாற்றார் எதிர்ப்பிற்கும், மற்றோரின் நட்பிற்கும்,
போற்றும் தொழிற்பெருக்கம் பொன்குவித்து வாழ்வளிக்கும்

தொழில்வளர்க்கும் வாய்ப்பிற்குத் துறைதோறும்
[துறைதோறும்
வழிவகுக்கக் காத்திருக்கும் தமிழரசை வாழ்த்துவமே!

கல்லூரி சென்று கலைபயின்று வேலையின்றி
அல்லும் பகலும் அலைகின்ற தமிழ்நாட்டீர்!

கைத்தொழிலைக் கற்றிடுவீர்; கவலை பறந்தோடும்!
எத்தொழிலும் இழிவில்லைஎன வெண்ணிச் செயல்படுவீர்!

படிப்பில்லை என்றாலும் பலதொழிலைக் கற்றிருந்தால்
இடிவில்லை வாழ்க்கைக்கு; நடைமுறையில் இதைக்காண்பீர்!

பள்ளிப் படிப்போடு பலதொழிலில் ஒன்றேனும்
உள்ளம் அறிந்திருந்தால், ஓய்வான நேரத்தில்
செய்து பொருள்தேடிச் சிறப்போடு வாழ்ந்திடலாம்;
உய்யும் வழியிதுவாம்; உடனடைவோம் பொற்காலம்!

நாட்டில் தொழில்வளர நம்மரசு தமிழரசு
காட்டும் பொறுப்புக் கணக்கில் அடங்காதே!
பாலுக்கு மாதவரம்; பயிர் செய்யக் கோவை!
ஆலைக் கொதிகலங்கள் ஆக்கும் சிராப்பள்ளி;
மின்விளக்க எண்ணூர்; மேன்மைமிகு நெய்வேலி;
பொன்விளக்கச் சேலம்; புதுச்சுண்ணம் காணக்
கல்லக்குடி; எண்ணெய் கண்டுதவ நன்மணலி;
கல்பாக்கம் அணுமின்; கடற்கூவ மண்ணெடுப்பு;
ஆன்ற தொழில்பலவும் அரசமைத்துத் தந்துளதாம்;
சான்றோர்கள் வாழ்த்துகிறார்; தமிழ்நாட்டீர்! நாமும்
தொழில்நுணுக்கம் கற்றுத் துறைதோறும் சென்று
பழகித் தொழில்வளர்ப்போம்; பார்புகழ வாழ்வோம்!

காசுள்ளோர் வந்தால் கருத்துக் கிசைந்தபடி
பேசிப் பெருந்தொழிலைப் பேணுதற்கு வாய்ப்பளிக்க
அண்ணா வழிவந்த ஆணழகர் நம்கலைஞர்
விண்ணப்ப மிட்டால் விரும்பியதைச் செய்வாரே!
பொருள்மிகுந்தோர் நற்றொழிலைப் போற்றிவளர்ப்பீரே!
இருளில்லா வாழ்க்கை தொழில்வளத்தால் எய்திடுமே!
கழிபே ருவகைக் களிப்போடு நாமெல்லாம்
தொழில்வளர்ப்போம் என்றும் தொடர்ந்து!

○

நாள்: 'தமிழரசு' வெள்ளி விழா மலர், 1971.
இடம்: 'தமிழரசு' இதழ் வெள்ளி விழா மலர் - சாதனைக் கவியரங்கம்
தலைப்பு: பொற்காலம் காண—தொழில் வளர்ப்போம்.

# 29. விதையும் விளைச்சலும்

(எண்சீர் விருத்தம்)

தொடுவானில் முளைக்கின்ருன் இளம்பரிதி நீண்ட
தொலைவிருக்கும் செங்குன்ற நீளருவி போல
நடுவானில் கலைகின்ற மணற்குவித்த வானை
நாடிவரும் பாடிவரும் அதிகாலைப் புட்கள்
நெடுவானில் பொன்தூறல்! நீலவானின் ஆடை
நிறம்மாற நிறம்மாறும் அதிகாலை நேரம்
இடுவானில் நல்விளைச்சல் எனச்சொன்ஞள் இல்லாள்
இத்திங்கள் தைத்திங்கள் ஊர்வாழ்த்தக் கேட்டேன்.

வித்தின்றேல் விளைவுண்டோ எனவென்னைக் கேட்டாள்
வீண்வம்புக் காரியிவள் எனவெண்ணிக் கொண்டு
சத்தின்றேல்சதையுண்டோ? சதைத்துடிப்பும்உண்டோ?
சச்சரவு குடும்பத்தில் முளைத்திடுதல் உண்டோ?
பத்திரண்டு பிள்ளைகளும் பஞ்சமும்தான் உண்டோ?
பாராளும் அரசுக்கும் தொல்லைகளும் உண்டோ?
வித்திருந்தால் போதாது வேறுபல வேண்டும்
விரிவாகச் சொல்லுகிறேன் கேளென்று சொன்னேன்.

சேலாட்டுக் காரியாய்நீ சிலகாலம் வாழ்ந்தாய்
சிரிப்பூட்டுக் காரியாய்நீ சிலகாலம் வாழ்ந்தாய்
தாலாட்டுக் காரியாய்நீ மாறிவிட்டாய்; இன்றே
தலையாட்டம் கையாட்டம் உடலாட்டம் கண்டு
கோலாட்டக் காரஞய் மாறிவிட்டேன் நானும்
குறிக்கோளை இதுவரையில் நாம்மறந்து போனேம்
வாலாட்டு பகைவறுமை நொறுக்குதற்கே எங்கும்
வளர்தொழிலும் நல்விதையும் விளைச்சலுமே தேவை,

காண்கின்ற பொருளெல்லாம் கண்கவர்வ தில்லை
கடல்நீரில் கரித்தலில்லா நீர்கண்ட தில்லை
பூண்கின்ற அணியெல்லாம் பொலிவூட்டல் இல்லை
பூக்கின்ற பூவெல்லாம் மணம்கூட்டல் இல்லை
ஆணென்ற ஆணெல்லாம் ஆணாவ தில்லை
அதுபோல விளைவெல்லாம் விதையாவ தில்லை
மாண்பான விளைவினிலே விதைபொறுக்கித் தேடி
வைப்பதுதான் நல்லுழவன் முதற்கடமை யாகும்.

கண்ணுக்குக் கண்ணாய்நீ கையேந்தி நாளும்
கண்விழித்து வாயடக்கிக் காப்பாற்றி வைத்த
விண்ணுக்கு வெண்சுடராய் இருள்கிழிக்கும் வட்ட
விரிமதியாம் முழுநிலவாம் நீவளர்த்த செல்வப்
பெண்ணுக்கு மாப்பிள்ளை தேடியதைப் போலப்
பெயருக்குப் பட்டத்திற் கேற்றாற்போல் நல்ல
மண்ணுக்கு விதையமைத்தல் எனவெண்ண வேண்டும்
வளம்சேர்க்கும் பெருவிளைச்சல் அதனால்கை கூடும்.

மான்விழியாய் மலர்க்கொடியாய் இருந்தமனை யாட்டி
வாழ்க்கைக்கு வளம்சேர்க்க நீதேடிக் கண்ட
ஆண்மகனும் பெண்மகளும் அழகணிகள் பெற்றால்
அதுமட்டும் மனைவளர்க்க ஒருநாளும் போதா
தேன்மொழியர் மனமொத்துத் துணைசேர வேண்டும்
செழிப்படையும் மனைமாட்சி அஃதேபோல் நாட்டில்
வான்மழையால் நல்லவிதை செழித்தோங்க வேண்டும்
மண்வளமும் நீர்வளமும் ஏர்வளமும் வேண்டும்.

நிலப்பரப்பின் பெருக்கல்ல பெருவிளைவின் ஆக்கம்
நிலமாழ மாய்உழுதல் நல்லுழவின் நோக்கம்
பலபிள்ளை பெறுவதில்லை நற்குடும்ப நோக்கம்
பண்போடு வாழ்வதற்கு நல்லவுடல் தேவை

குலவிளக்காய்ப் பெண்ணொன்று குடிவிளக்காய் ஓராண்
கொண்டிடுவோம் பெருவிளைச்சல் வாழ்விற்குப் போதும்
நலம்கொழிக்கும் இனம்செழிக்கும் நம்நாடும் நாட்டின்
நல்லரசும் பெருவளமும் நாமடைவோம் நீடே!

கூர்நடத்தும் கண்ணாளே குலவிளக்கே பெண்ணே!
குடிநடத்தக் குழந்தைகளை நல்லபடி நடத்தச்
சீர்நடத்த வேண்டுமெனில் ஏர்நடத்த வேண்டும்
செயலுக்கும் பேச்சுக்கும் இதுவேமூச் சாகும்
ஏர்நடத்தும் தார்க்கோலே என்றென்றும் எங்கும்
இடும்வித்தால் நல்விளைச்சல் நனிபெருகச் செய்து
பார்நடத்தும் செங்கோலாய்ப் பகைகடத்தும் வாளாய்
பல்லாண்டு பார்வாழ்த்த நிலைத்திருக்கக் கண்டோம்.

ஊற்றங்கால் வயல்வெளிக்கு முன்கூட்டி விட்ட
உயர்மணியாம் நல்விதைகள் வளர்ந்திருக்கும் பச்சை
நாற்றங்கால் பயிர்முடிகள் மணிமுடிகள் ஆகும்
நடுமுன்னர் மருந்தடிக்கக் கருத்திருக்க வேண்டும்
சேற்றங்கால் புண்ணாகும் பலபிள்ளைப் பேறு
சிந்தித்தால் இக்குறையை நீக்கிடவும் கூடும்
ஆற்றுக்கால் தடைபோட்டு விளைவாக்கல் போல
அன்பீனும் குழந்தைக்கும் தடைபோட வேண்டும்.

நுரைகொழித்தே ஓடிவரும் கால்வாயில் ஏரி
நுழைவினிலே தப்பிவந்த வரால்மீன்கள் நன்செய்க்
கரையினிலே பாய்மடையில் கலாம்விளைக்கக் கண்ட
கதிர்விளைக்கும் நல்லுழவன் மனையாள்கை ஒக்க
நிரைபயிரை அழிக்கட்டும் எனவிட்டா விடுவான்?
நீள்விளைவின் நாட்டம்போல் அவரவரின் இல்லத்
திரைமறைவில் குடும்பநலப் பெருநோக்கம் வேண்டும்
சீர்பெருகும் வளம்பெருகும் செழுமைநலம் உண்டாம்.

நீர்உயர வேண்டுமெனில் நிலம்சுற்றி உள்ள
நெடுவரப்பு இடையுள்ள சிறுவரப்பு யாவும்
சீர்பெறவே நன்ருகச் செப்பனிட வேண்டும்
செய்காலுக் கேற்றபடி உரமிடவும் வேண்டும்
வார்குழலே இல்லறத்தால் பலபிள்ளை என்னும்
மனத்தொல்லை வருமுன்னர் வழியடைக்க வேண்டும்
யாரிசிறக்க நல்விளைச்சல் ஒன்றுமட்டும் போதா
பஞ்சமின்றிச் செழித்திருக்கக் குடும்பநலம் தேவை.

நோய்கண்டால் பயிருக்கு நூறுவகை தேடி
நோய்நீக்கும் நல்லுழவன், தன்வீட்டில் இல்லாள்
பாய்கண்டு படுத்திருக்கப் பலபிள்ளை பெற்றுப்
பலன்கண்டு நொந்திருக்கப் பார்த்திருக்க லாமா?
சேய்கண்டு வாழ்ந்திருந்தால் வான்பேறு கிட்டும்
செப்பிடுவார் இதுபழமை; ஒன்றிரண்டு பிள்ளை
வாய்கண்டால் நடைகண்டால் மொழிபேசக் கேட்டால்
மனத்திலெழும் மகிழ்ச்சிக்குப் பஞ்சமோ தோன்றும்?

கதிர்கண்டு வயல்சுற்றிக் களிப்படையும் உழவன்
களம்கொண்டு சேர்க்கும்நாள் காத்திருத்தல் போல
எதிர்கண்டு தன்பெண்ணின் தன்மகனின் மேனி
எழில்கண்டு திருமணத்தில் நன்னாளை எண்ணிக்
குதிர்கண்டு சோராமல் நற்குடும்பம் ஓம்பக்
குழந்தைகளைப் பெற்றெடுத்தல் குறைத்திடுதல் வேண்டும்
முதிர்வயதில் பிள்ளைகுட்டி என்கின்ற தொல்லை
மூளாமல் வாழ்ந்திருக்க இருகுழந்தை போதும்.

ஒருபுறத்தில் நம்நாட்டில் தாயகத்தில் எங்கும்
உறுதொழில்கள் சிறுதொழில்கள் உயர்ந்தோங்கும் வேளை
ஒருபுறத்தில் நல்லுழவு பொறுக்குவிதை தேடி
உயர்ந்துவரப் பிள்ளைகுட்டி உயர்ந்துவர லாமா?

அருமருந்து கல்விநலம் அவரவருக் கேற்ற
ஆடைஅணி குடியிருப்புக் கெங்கேநாம் போவோம்?
பெருமைப்பட வேண்டுமெனில் நம்மரசு வாழப்
பிள்ளைப்பேற் றைத்தடுப்போம்! இதிலென்ன குற்றம்?

நல்லுடலின் நல்வித்து நல்லறிவாம் அந்த
நல்லறிவால் நாடுபல நனிவிளைச்சல் காணும்
நல்லுடலின் நல்வித்து நல்லறிஞர் அந்த
நல்லறிஞ ரால்உலகம் முன்னேறக் கூடும்
நல்லுடலின் நல்வளப்பம் ஊன்உடல்உ ழைப்பாம்
நாலைந்து பிள்ளைபெற்றால் உடல்மெலிந்து போகும்
தொல்லைபல உண்டாகும் துயர்வந்து சூழும்
துடியிடையே கருப்பாட்டை அடைப்பதுவே இன்பம்!

பெயல்தேக்கி வரப்பெடுத்துப் பெருவேலி கட்டிப்
பெருவிளைச்சல் காண்பதற்கு முனைகின்ற உழவன்
வயலினிலே எட்டியெட்டித் தனித்திருக்கும் நட்ட
மரம்செடிகள் புல்பூண்டு நெற்கதிர்கள் போலக்
கயல்விழியே இல்லத்தில் ஒன்றிரண்டு பிள்ளை
கண்டவர்கள் கருங்கல்லுக் குண்டைப்போல் நிற்பர்
செயல்என்ன செய்தாலும் உன்எண்ணம் எல்லாம்
சிறுகுடிசைப் பெருவாழ்வைச் சிந்திக்க வேண்டும்.

விண்குலத்தில் உடுக்கூட்டம் பலவிருந்தும் என்னாம்?
வெண்ணிலவுக் கீடுண்டோ? அஃதேபோல் இந்த
மண்குலத்தில் நல்வித்தும் நல்விளைச்சல் கண்டும்
மதிப்பென்னாம் வாழ்வென்னாம் பலபிள்ளை பெற்றால்?
பெண்குலந்தான் நினைத்துவிட்டால் எச்செயலும் நோக்கும்
பிழையின்றி ஈடேறும் நல்வாழ்வு பிறக்கும்
பண்குலத்துக் குயிலாளே நம்நாடு வாழப்
பயிர்விளைப்போம் வயலினிலே! இல்லத்தில் வேண்டாம்!

விண்ணூட்டின் செங்கதிரோன் விளைநிலத்தின் வித்தாம்!
விரவியுள்ள நெற்பதர்கள் காற்றினிலே ஓடும்
உன்நாட்டைத் தாய்நாட்டை உனைவளர்க்கும் நாட்டை
உயிர்போல நீஈன்ற உன்பிள்ளை போலத்
தென்னாட்டின் கடல்முத்தே இன்ப மனையாட்டி
செருக்களத்தில் சீறிவரும் சிங்கத்தைப் போன்று
பொன்னாட்டைக் காப்பதற்கே ஒன்றிரண்டு பிள்ளை
புவிக்களித்தல் உன்கடமை என்கடமை யாகும்.

இன்றுள்ள விடுதலைகள் எவ்விளைச்சல் ஆகும்?
எழுச்சியுற்ற நல்லறிஞர் அறிவெழுந்த வித்து
கன்றாகிச் செடியாகி மரமாகிப் பூத்துக்
காயாகிக் கனியாகிக் கடைத்தெருவுக் கேகி
நன்றாக விலையாகிப் பொருளாகி மக்கள்
நலமாகி வளமாகி அரசாகி நாளும்
குன்றாது நிலைத்திருக்கக் காண்கின்றோம் ஆன்றோர்
குடும்பத்தின் குறியோடே வித்திட்டுச் சென்றார்.

கல்லூரி மொழிபயின்று கலைபயின்று பல்லோர்
கைத்தொழிலை நல்லுழவை விரும்பாது நாளும்
நல்லரசுப் பணிதேடி நடந்தலைந்து சோர்ந்து
நலிகின்றார்; இஃதேதோ நம்நாட்டின் பித்து!
புல்லுழுது வித்திடுதல் பொன்விளைக்கும் செய்கை!
புரியாதோர் இனியேனும் ஒன்றிரண்டு பெற்று
நல்லுழவை இல்லத்தில் நடத்திடுவோம்; வாழ்வோம்!
நலிவில்லை; நல்லரசு நிலைத்திருக்கும் நீடே!

○

நாள்: 15-1-1972 மாலை 6-10 மணி.
இடம்: புதுவை வானொலிநிலையப் பொங்கற் கவியரங்கம்.
தலைவர்: கவிஞரேறு வாணிதாசன்.
தலைப்பு: 'விதையும் விளைச்சலும்.'

# 30. மாணவர்கள்

அவையடக்கம்

(எண்சீர் விருத்தம்)

பாவேழ வேந்தரெல்லாம் இடைக்கா லத்தே
பாட்டெழுதத் தொடங்குமுன் ஐந்து கையான்
மூவேழ வேந்தெண்ணிக் காப்புச் செய்யுள்
முன்கண்டு நூலெழுதத் தொடங்க லானார்!
மாவேழ வேந்தெமது கவிஞர்; நூலில்
மறுமலர்ச்சி நனிசெய்தே மாற்றம் செய்தார்!
காவேழ வேந்தின்றோ தலைவர்; காலம்
கலிகாலம்! தமிழுக்கென் வணக்க மாமே!

(வெண்கலிப்பா)

கார்பாயும் வானைக் கரைபாயும் நீலநிறச்
சீரார் கடற்பரப்புச் சென்று தழுவுகின்ற

மன்றல் மணிமாடத் தொடுவான் மணவறைக்குத்
தென்றல் மணம்பரப்பும்; செடிகொடிகள் பாட்டிசைக்கும்;

நெய்தற் கரைகளின் நீண்ட முழவார்க்கும்;
வெய்யோன் வரவை விடிவெள்ளி முன்னுரைக்கும்;

எழில்நிறைந்த வானில் எழும்பரிதி போலப்
பழகுதமிழ் நாட்டுப் பண்பார் புதுவையிலே

பாவேந்தர் தோன்றிப் பைந்தமிழைக் காத்தாரே!
மாவேந்தர் இல்லா மனக்கவலை மாறியதாம்!

கன்னித் தமிழ்த்தாயின் கவின்சேர் திருமுடிக்குப்
பொன்மணிகள் சேர்த்த புதுமுடியைச் சூட்டிவைத்தார்!

வற்றாது பாயும் வளர்பொன்னி ஆற்றைப்போல்
உற்றநாள் எல்லையெலாம் ஒண்டமிழே மூச்சாகப்
பாட்டுலகில் வெற்றிப்படை நடத்தி வாழ்ந்திருந்தார்;
தீட்டாத ஓவியமாம் செந்தேனைத் தமிழ்மொழியைப்
பாட்டிற் புரட்சி பலவிளக்கித் தூயதமிழ்
நாட்டிற் களித்த நற்கவிஞர்; மறத்தோளர்;
மருளே மிகுந்திருந்த மக்கள் மனத்தின்
இருள்கிழிக்கப் பாடிவந்தார்; எதிர்ப்பேற்றார்; [1]மாற்றார்
அருளுக்கோ அன்றிப் புகழுக்கோ எந்நாளும்
பொருளுக்கோ பாடாமல் பொய்எதிர்த்தே பாடிவந்தார்;
உற்ற தமிழுக்(கு) ஒருதீங்(கு) எனவுரைத்தால்
பெற்றபிள்ளை என்றாலும் பின்வாங்க மாட்டாரே!
சினம்மாறி விட்டால் சிறுகுழந்தை போலாவார்!
மனமாரப் பகைவர்க்கும் இல்லையென மாட்டாரே!
உண்மைக்குப் போராட ஒருபோதும் சோர்வடையார்!
பெண்மை உரிமைபற்றிப் பேசாத நாளில்லை!
சங்கத் தமிழ்ச்சோலைத் தேனைப் பிழிந்தெடுத்துப்
பங்கிட்டுத் தந்து பசியாரச் செய்தவராம்!
பாட்டுலகில் பாவேந்தர் பாடாத் துறையில்லை!
நாட்டுமொழிப் பற்று, நயவஞ்சகர் சூழ்ச்சி,
காதல், இயற்கை, கைம்மை, மறுமலர்ச்சி,
தீதை எதிர்க்கும் திண்டோள் மறவீரம்,
இன்னும் பலப்பலவாம் எழிற்கவிதைப் பெருஞ்செல்வம்
கன்னற் றமிழ்அவரின் கைப்பாவை என்றுரைப்பேன்!
'நம்பிக்கை வைத்தான் நம்பிக்கை வைத்தான்'
தம்பி இதன்பொருளைச் சற்றே விளக்குவையோ?
வம்புக் கவரிடத்தில் வந்தவர் மீண்டதில்லை!
செம்பொன் கதிரோனும் செந்தமிழ்ப் பாவலரே!

தன்நடையைத் தனித்தமிழைத் தக்கபடி கற்றறிந்து
பின்தொடர்ந்து செயல்படுத்தப் பெற்றளித்தார்
[பரம்பரையைப்

பழுத்த தமிழ்ப்புலமை பன்னூல் விளக்கங்கள்
எழுத்தசைசீர் தளையாப்பும் இன்னிசைப்பாப் பாவினமும்

கற்றறிந்த பின்னரே கவிபாட வேண்டுமென்பார்!
இற்றைக்குச் சொல்லடுக்கே எங்கும்பா வானதுவாம்!

காவாயைக் கால்வாய் எனக்கல்லா ரெல்லோரும்
பாவேந்தர் குற்றேவல் பாய்சுருட்டி என்றுரைப்பார்!

இன்றென்ன இலக்கணமா எடைஎன்ன விலையென்போர்
மன்றப் பெருங்கவிஞர்; வாய்வீச்சுப் பேச்சழகர்!

பட்டயமாம் பாவேந்தர் பாட்டைக் கையாளும்
பட்டப் பகற்கொள்ளை பாட்டுலகில் கண்டோமே!

இன்றில்லை பாவேந்தர் என தாசான் கவியரசர்!
தென்றற் பொதிகைமலை! தீந்தமிழ்ப் பாற்கடலாம்!

செந்தமிழ்ப் பாவெங்கே செவியில் விழுகிறதோ
அங்கெல்லாம் பாவேந்தர் அடிச்சுவட்டைக் கண்டிட

எங்கெங்குத் தனித்தமிழின் எழுச்சி மிகுகிறதோ [லாம்;
அங்கெல்லாம் பாவேந்தர் விளைவின் அறுவடையே!

பாவேந்தர் பாட்டுலகில் மாணவர்கள் பல்லோர்கள்!
பாவேந்தர் பாட்டுணர்ந்த மாணவர்க்கா பஞ்சமிங்கே?

இவ்வரங்கில் பாடுகின்றோர் எல்லோரும் மாணவரே!
எவ்வரங்கும் பாடுகின்ற ஏகலைவர் பலருண்டாம்!

பாவேந்தர் மாணவர்க்குப் பாடிவைத்த பாடலெலாம்
நாவாலே நான்கூற நாளெல்லாம் போதாவே!

என்றாலும் ஒன்றிரண்டை அவர்பாட்டால் இயம்பிடுவேன்!
இன்றிருந்து கேட்பீர் இனிது!

(ஆசிரியப்பா)

எனதரும் ஆசான் இளைய மாணவர்க்(கு)
எழுதிய இன்னிசை அகவல்
படிப்பேன்; கேட்டுப் பயனடை வீரே!

[இவ்விடத்தில் கவிஞரேறு வாணிதாசர், 'குயிலில்' வெளியாகியுள்ள, 'காலையில் எழுந்து', 'நல்லாசிரியர்', 'நடுப்பகல் உணவு', 'பள்ளிக்கூடம்', 'மாலை வேளையில்', 'பாங்குடைய' எனத் தொடங்கும் பாவேந்தர் பாடல்களைப் பாடிக் காட்டினார்.]

(வெண்பா)

எல்லோர் தமக்கும் எடுத்தளித்த முக்கனியாம்
நல்ல 'படி'யென்ற நற்பாடல்—வல்ல
கவியரசர் உள்ளக் கருத்துணர்ந்து கற்றால்
புவியரச ரும்போற்று வார்!

['நூலைப்படி—சங்கத் தமிழ்—நூலைப்படி—முறைப்படி, எனத் தொடங்கும் பாவேந்தர் பாடலைக் கவிஞரேறு வாணிதாசர் இவ்விடத்தில் பாடிக் காட்டினார்.]

முடிவுரை

(எண்சீர் விருத்தம்)

செத்தபின் விழாவெடுக்கும் இந்த நாட்டுச்
செல்வர்காள்! அரசியல்சீர் வாய்க்கப் பெற்றீர்!
பத்துப்பாட் டென்கின்ற தொகைநூல் செய்தோர்
பஞ்சணையில் படுத்திருந்தா இன்பம் துய்த்தார்?
கொத்துப்பூத் தேன்சொரியும் தமிழ்ப்பாப் பாடிக்
கொடுத்தோரே பல்வளமும் கொடுத்தோர் ஆவார்!
புத்துலகம் அவர்படைப்பு! கவிஞர் வாழ்ந்தால்
புதுப்பொலிவில் எந்நாளும் சிறக்கும் நாடே!

உங்கட்கு நான்நன்றி கூறும் முன்னர்
ஒன்றிரண்டு நான்கூற ஆசை கொண்டேன்!
இங்குள்ள கவிஞர்க்குத் தமிழில் ஆசை
இருந்தாலும் இருள்கிழித்து வானில் தோன்றும்
திங்கட்கு நாடோறும் வானி ருந்தே
செயல்படுத்தத் தூண்டுகின்ற வெய்யோன் போலப்
பங்கேற்று நல்லூக்கம் தருதல் வேண்டும்!
பண்படையும் திருநாடு! வணக்கம்! நன்றி!

○

நாள்: 29-4-72 சனிக்கிழமை, காலை 9 மணி.

இடம்: புதுவை காந்தி திடல்—புதுவை அரசு நடத்திய பாரதிதாசனின் 81-வது பிறந்தநாள் விழாக் கவியரங்கம்.

வரவேற்பு: மாண்புமிகு எஸ். இராமசாமி—உள்துறை அமைச்சர், புதுவை அரசு.

தலைப்பு: பாவேந்தர் பாட்டுலகில்—மாணவர்கள்.

தலைவர்: திரு. கா. வேழவேந்தன், பி.ஏ.பி.எல். எம்.எல்.ஏ.,

1. 'மாற்றுார்......பாடி வந்தார்' என்பதன் முன், 'என்னைப் போல்' என்னும் தொடரைக் கவிஞரேறு வாணிதாசன் இவ்விடத்து இணைத்துப் பாடிக் காட்டினார்.

## கவிஞர் வாணிதாசன் தலைமையில் நிகழ்ந்த பாவரங்குகளில் பாடியவரும் பொருளும்

### 10. நானிலம்

பாடியவர் : தனசேகரன், புலவர் தீனதயாளன், குலசேகரன், இரா. வேங்கடபதி, சாம்பசிவன், அன்புநிலவன், பி.ஏ., பி.டி., அரியரன், புலவர் கலியமூர்த்தி, கவிதைதாசன், சடபுகேசுவரன், அப்பாசாமி, தெய்வநாயகம், முத்துக்குமாரசாமி, புலவர் பட்டாபிராமன், கோவிந்தராசன், பாரிதாசன்.

பொருள் : காதல், உணர்தல், அறிதல், களித்தல், ஓதல், வாழ்தல், உழுதல், காத்தல், இரங்கல், ஈதல், பணிதல், தொழுதல், நாணல், கடிதல், துறத்தல், பொருதல்.

### 14. தமிழன்

பாடியவர் : முருகு சுந்தரம். எம்.ஏ., செல்வி சுவாலா தேவிதாசன், குடியரசு, த. புருடோத்தமன், மணிமொழி, புலமைப்பித்தன், புலவர் பாலசுந்தரம், சாரணபாஸ்கரன், புலவர் இளஞ்செழியன்.

பொருள் : மன்னன், இல்லாளன், துறவி, வீரன், உழவன், கலைஞன், அறிஞன், புலவன், வணிகன், அமைச்சன்.

### 16, பாரதியும் பாரதிதாசனும்

பாடியவர் : நக்கீரன், செயராமன், செல்வி தம்பி கிளாரிசு, கவிநாரா, செவ்வேள்.

பொருள் : ஆசிரியர், தமிழ், மகளிர், தொழிலாளர், புரட்சி.

**20. பாவேந்தர்**

பாடியவர் : இராயப்பன், தனிமகன், கவிதைதாசன், தியாகராசன், கலையழகன்.

பொருள் : காதல், வீரம், இயற்கை, எழுச்சி, உணர்ச்சி.

**22. தொல்லை களையும் தோழன்**

பாடியவர் : சித்தன், வை. சுப்பிரமணியன், அரங்க நாதன், புதுவைச் செல்வம், இராமலிங்கம்.

பொருள் : ஒரு குறள் நிகழ்ச்சி.

**24. அன்பின் வழியது உயிர்நிலை**

பாடியவர் : திருமுருகன், கிருட்டிணராசா, வித்துவான், கவிஞர் பா. முத்து, ம. லெ. தங்கப்பா, தமிழேந்தியார்.

பொருள் : அன்பின் வழியது உயிர்நிலை.

**27. இராவணன் விழா**

பாடியவர் : புலமைப்பித்தன், குடியரசு, மணிமுடிச் சோழன், காவிரிநாடன், புதுவைச் செல்வம், புதுவை அருணன், புகழேந்தி.

பொருள் : சீதை, இராமன், பரதன், கம்பன், இராவணன், அனுமான், வாலி.

**29. விதையும் விளைச்சலும்**

பாடியவர் : டாக்டர் தமிழண்ணல், காரை அலி, அப்துல் ரகுமான், நடாதூர் நம்பி.

பொருள் : கழனியும் உழவும், விதையும் நாற்றும், நடவும் உரமும், நீரும் பயனும்.

5. அண்ணாமலைப் பல்கலைக் கழகம், 11. புதியதோர் உலகு செய்வோம்—இவ்விரு பாவரங்குகளிலும் பாடியவர், பொருள் பற்றிய விவரம் கிடைக்கவில்லை.

கவிஞரேறு, பாடியவர் பற்றியும், பாடிய பொருள் பற்றியும் முன்னுரையாகவும் பின்னுரையாகவும் பாடிய பாடல்கள் இதில் இடம் பெறவில்லை.

## கருத்துரைகளுள் சில

"எல்லாரும் நல்லார்என்(று) எண்ணுவார் இன்றமிழ்
வல்ல கவிவாணி தாசனார்—அல்லும்
பகலும் தமிழர்தம் பண்பாடு பற்றிப்
புகலும்பாட்(டு) ஒவ்வொன்றும் பொன்."

—பாவேந்தர் பாரதிதாசனார்.

"திரு. வாணிதாசர் ஒரு பெரும் உலகக் கவிஞர் ஆதல் வேண்டும் என்பது எனது வேட்கை" —திரு. வி. க.

"மனித சமுதாயத்திற்குப் புதிய புதிய கவிதைகளைப் படைத்துத் தொடர்ந்து நடந்தோரில் வெற்றிகரமாக முன்னேறியவர் தோழர் வாணிதாசன். ...அவரது கவிதைகளைப் படிக்கும்போது சில சமயங்களில் பாரதிதாசனுக்கும் முன்னாலே போகிறார் என்ற எண்ணந் தட்டும்... சொல் வளம், கற்பனை ஊற்று என்ற இரண்டும் வளமாகப் பெற்ற கவிஞர் தோழர் வாணிதாசன்... 'கவிஞர்கள் பிறக்கிறார்கள்; செய்யப்படுவதில்லை' என்பது இவர் வரையில் உண்மை... இவரது பாடல்களை ஆங்கிலத்தில் மொழிபெயர்த்தால் 'நோபல் பரிசு' பெறக்கூடும்.' —'தென்ற'லில் கண்ணதாசன்.

"வாணிதாசனார் பாரதியார், பாரதிதாசன் ஆகிய இந்த இருவரினும் விஞ்சிய வகையில் பாடி வருகின்றார்....இவருடைய பாடல்களை உலகப் பெருங்கவிஞருள் ஒருவரான இரவீந்திரநாத தாகூரின் பாடல்களுக்குச் சமமாகக் கூறலாம். இவர் ஓர் இயற்கைக் கவிஞர்; கவி புனைவதற்காகவே பிறந்தவர். இவருடைய பாடல்கள் என்றும் அழியாமல் நிலைத்து நிற்கும் தன்மை வாய்ந்தவை. ...தமிழ் நாட்டிற்குப் பாரதிதாசரும் வாணிதாசரும் இரு கண்மணிகள்."

—பேராசிரியர், மயிலை. சிவ. முத்து.